விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள்: இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii

E-mail :valampurii@yahoo.com
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 26 திங்கட்கிழமை (11.01.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 023

## சிறப்பு நீதிமன்றம் அமைக்க வேண்டும்

### சிவில் அமைப்புக்கள் அரசிடம் கோரிக்கை

(கொழும்பு)

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனிதவுரிமை விவகாரங்கள் தொடர்பில் அளித்த வாக்குறுதிகளின் படி, வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் சட்ட நிபுணர்களை உள்ளடக்கிய சிறப்பு நீதிமன்றத்தை இந்த ஆண்டு இலங்கை அரசாங்கம் அமைக்க வேண்டும் என்று சிவில் அமைப்புகளும், மனிதவுரிமை செயற்பாட்டாளர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

23ஆம் பக்கம் பார்க்க

## தொழிற்சங்கங்கள் அரசுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தமது கோரிக்கைகளை உரிய முறையில் அரசாங்கம் பரிசீலிக்க தவறும் பட்சத்தில் தொழில் சங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாக பொதுத்துறை தொழில் சங்கங்கள் எச்சரித்துள்ளன.

ஒரு வார கால அவகாசத்தை அரசாங்கத்திற்கு இது தொடர்பாக வழங்கியுள்ளதாக தொழில் சங்க

24ஆம் பக்கம் பார்க்க

## அமெரிக்கா நிதியுதவி

(கொழும்பு)

இலங்கைக்கு பாரியளவில் அபிவிருத்தி உதவிகளை வழங்க அமெரிக்கா உத்தேசித்துள்ளது.

இலங்கைக்கு அபிவிருத்தி உதவியாக 80 கோடி அமெரிக்க டொல

23ஆம் பக்கம் பார்க்க

## அதிகாரங்கள் குறைக்கப்பட்டாலும் ஜனாதிபதி முறை தொடரவேண்டும்

### சுதந்திரக் கட்சி வலியுறுத்து

(கொழும்பு)

புதிய அரசியலமைப்பில் ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்படும் அதேவேளை. ஜனாதிபதி முறை தொடரவேண்டும் எனும் நிலைப்பாட்டை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எடுத்துள்ளது.

தற்போதைய அரசியலமைப்பில் 13ஆவது திருத்தத்தை அமுல் செய்வதை. கட்சி ஆதரிக்கின்றது.

24ஆம் பக்கம் பார்க்க

## பொது எதிரணியுடன் பேச்சு!

(கொழும்பு)

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைவரம் பற்றியும் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் பொது எதிரணியுடன் கலந்தாலோசிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் 26 அமைச்சர்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு. வரவு - செலவுத்

23ஆம் பக்கம் பார்க்க



நுவரெலியா, அங்குராங்கெத்த பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட ஹேவாஹெட்ட ஹோப் தோட்ட கீழ் பிரிவில் ஏற்பட்டுள்ள மண்சரிவு அபாயம் காரணமாக 23 குடும்பங்களைச் சேர்ந்த 650 பேர் தற்காலிகமாக இடம்பெயர்ந்துள்ளனர்.

## நாளொன்றுக்கு 7 பேர் பலி

(கொழும்பு)

நாட்டில் தற்போது அதிகரித்து வரும் வீதி விபத்துக்கள் காரணமாக நாளொன்றுக்கு ஏழு பேர் உயிரிழப்பதாக பொலிஸ் போக்குவரத்து பிரிவின் தலைமையகம் வெளியி

24ஆம் பக்கம் பார்க்க

## வடக்கில் காணாமல் போனோரில் 48 பேரின் இறப்புக்கள் பதிவு!

(கொழும்பு)

வட மாகாணத்தைச் சேர்ந்த காணாமற்போனோரில் 48 பேரின் இறப்புக்கள் மட்டும் கடந்த ஆண்டு பதிவு செய்யப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயக அலுவலகத் தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்களை இறந்தவர்களாக கருதி பதியுமாறும் அதன் மூலம் பெறப்படும் இறப்பு சான்

24ஆம் பக்கம் பார்க்க

## சுதந்திரக் கட்சிக்கு பதிலாக புதிய அரசியல் கட்சி!

### உருவாக்கப்படும் என்கிறார் கோத்தா



(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்கு பதிலாக புதிய அரசியல் கட்சி ஒன்று உருவாக வேண்டியதன் தேவை காணப்படுவதாக முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மக்களின் கட்சியொன்று உருவாக்கப்பட வேண்டியது இன்றியமையாதது எனவும் அவர் நேற்று

24ஆம் பக்கம் பார்க்க

## பொதுமக்களை தவறாக வழிநடத்த வேண்டாம்

### புதிய அரசியலமைப்பு குறித்து லக்ஷ்மன் கருத்து

(கொழும்பு)

தயாரிக்கப்படவிருக்கும் உத்தேச புதிய அரசியலமைப்புச் சட்டம் தொடர்பாக ஆங்காங்கே விமர்சித்து கொண்டிருக்காது நாடாளுமன்றத்தில் தமது கருத்துக்களை முன்வைக்குமாறு அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல சகல கட்சிகளிடமும் கோரிக்கை விடுத்துள்ளார்.

அப்படி இல்லையென்றால், மக்களின் கருத்துக்களை பெற நியமிக்கப்பட்டிருக்கும் குழுவிடம் கருத்து வெளியிடுமாறும் அவர் கேட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது கருத்துக்களை முன்வைக்க அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இணைத்து ஒரு சபையாக நாடாளுமன்றம் மாற்றப்பட்டுள்ளது.

மேற்கொள்ளப்படவிருக்கும

24ஆம் பக்கம் பார்க்க

## ஹிருணிகா ஓர் அப்பாவி

(கொழும்பு)

தனது மகள் ஹிருணிகா அடாவடித்தனங்கள் தெரியாத ஓர் அப்பாவி என்று பாரத லக்ஷ்மன் பிரேமச்சந்திரவின் மனைவி சுமணா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

தெமட்டகொடை வாலிபர் ஒருவர் டிபெண்டர் வாகனத்தில் கடத்தப்பட்ட விவகாரம் தொடர்பில் ஹிருணிகா கைது செய்யபட்டு தற்போது பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

24ஆம் பக்கம் பார்க்க

## சிறையிலுள்ள 96 இந்திய மீனவர்கள் பொங்கலையொட்டி விடுதலையாவர்!

(கொழும்பு)

இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்கள் 96 பேரை தை பொங்கல் பண்டிகைக்கு முன்பாக விடுதலை செய்ய இலங்கை அரசு முடிவு செய்துள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பாக இந்திய வெளியுறவுத்துறை உயர் அதிகாரி ஒருவர் ஊடகங்களுக்கு கூறுகையில்

சர்வதேச கடல் எல்லையைத் தாண்டி மீன் பிடிக்க வந்ததாகக் கூறி இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டு இலங்கை சிறையில் உள்ளனர். அவர்களை விடுதலை செய்வது தொடர்பாக தமிழக முதல்வர் ஜெயலலிதா. பிரதமருக்கு் கடிதம் எழுதியுள்ளார். இது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த இந்தியா - இலங்கைக்கிடையிலான வெளியுறவுத்துறை அமைச்சர்களின் கூட்டம் அடுத்த மாதம் கொழும்பில் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னதாக. இருநாடுகளின் வெளியுறவுத்துறை செயலர்களின் கூட்டம் அடுத்த வாரம் கொழும்பில்

24ஆம் பக்கம் பார்க்க

## இந்.மீனவர்களின் அத்துமீறலை தடுப்பதற்கு புதிய நடைமுறை!

### அமைச்சர் அமரவீர யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியை தடுக்க கடற்படையினர்களின் ஒத்துழைப்பு டன் புதிய நடைமுறை ஒன்றை எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ளதாக கடல்வளங்கள் நீரியல் வளத்துறை அபிவிருத்தி அமைச்சர் மகி



24ஆம் பக்கம் பார்க்க

# சீனாவுக்கான பயணத்தை ஒத்திவைத்தார் மகிந்த!



(கொழும்பு)

சீனாவுக்கு அடுத்த வாரம் மேற்கொள்ள திட்டமிட்டிருந்த பயணத்தை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திடீரென ஒத்திவைத்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

கண்டியில் இருந்த மகிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் சனிக்கிழமை தொடர்பு கொண்டு அவரின் சீனப் பயணம் தொடர்பாக கேள்வி எழுப்பிய போது, தனது உடல்நிலை காரணமாக பீஜிங் பயணத்தை ஒத்திவைத்துள்ளேன என அவர் கூறியதாக இவ்வூடகம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பில் இவ்வூடகம் மேலும் குறிப்பிடுகையில்,

மகிந்த ராஜபக்ஷ சீனாவுக்கு சுமார் ஒரு மாதகாலப் பயணத்தை மேற்கொண்டு நாளை அந்நாட்டுக்கு செல்லத் திட்டமிட்டிருந்தார்.

எனினும், மகிந்த ராஜபக்ஷவுக்கு எதிராகவும், அவரது குடும்பத்தினருக்கு எதிராகவும் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகள் இடம்பெற்று வரும் நிலையிலேயே, அவர் சீனாவுக்கான பயணத்தை ஒத்திவைத்துள்ளதாக கூறப்படுகிறது.

இவ்விசாரணைகள் முன்னெடுக்கப்படும் போது நாட்டை விட்டு வெளியேறினால், அதனை கோழைத்தனமான செயல் என்று தமது எதிராளிகள் பரப்புரை செய்வார்கள் என்று மகிந்த ராஜபக்ஷ அஞ்சுவதாக தெரிய வருகின்றது.

எனவே, சீனப் பயணத்தை மேற்கொள்வதற்கு இது உகந்த தருணமல்ல என்று அவர் கருதுகின்றார் என இவ்வூடகம் மேலும் தெரிவித்துள்ளது. (செ-12)

## தேசிய இளைஞர் பொங்கல் விழா





(கரணவாய்)

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார நடவடிக்கை அமைச்சு, தேசிய இளைஞர் சேவைகள் மறறும், ஸ்ரீலங்கா இளைஞர் கழக சம்மேளனம் மற்றும் கலாசார வடமேல் அபிவிருத்தி அமைச்சு ஆகியன இணைந்து நடத்திய தேசிய இளைஞர் பொங்கல் விழா வட்டுக்கோட்டை தொழில்நுட்ப கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

தென்னிலங்கைக்கும் வட மாகாணத்திற்கும் உறவுப்பாலம் ஒன்றினை அமைக்கும் முயற்சியாக தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இந்நிகழ்வில் மகளிர் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் வடமாகாண சபை உறுப்பினரும் அகில இலங்கை சமாதான நீதவானுமாகிய அகிலதாஸ் சிவக்கொழுந்து மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், இளைஞர் சேவைகள் மன்றத்தின் பணிப்பாளர் உட்பட மன்றத்தின் உத்தியோகத்தர்கள், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

காலியிலிருந்து விசேட புகையிரதம் ஊடாக நேற்றயதினம் யாழ் குடாநாட்டிற்கு அழைத்து வரப்பட்ட சுமார் 750க்கு மேற்பட்ட தென்னிலங்கை இளைஞர், யுவதிகள் குடாநாட்டின் பல பகுதிகளிலும் தங்க வைககப்பட்டு விசேட பேருந்து மூலம் மைதானத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தனர். (செ-60)

# மாகாண அதிகாரங்களில் மத்திய அரசு தலையீடு!

(கொழும்பு)

மாகாண சபைகளில் மத்திய அரசாங்கம் மேற்கொள்ளும் தலையீடுகளை தடுக்கும் வகையில் தடையுத்தரவொன்றை பெற்றுக்கொள்வதற்காக மாகாண முதலமைச்சர்கள் தீர்மானித்துள்ளனர். இந்த தடையுத்தரவை பெற உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்ய தீர்மானித்துள்ளதாக வடமத்திய மாகாண முதலமைச்சர் பேஷல ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

வரி அறவீடுகள் சம்பந்தமாக மத்திய அமைச்சுகள் மூலம் மாகாண சபைகளின் சில அதிகாரங்களை வரையறுக்க முயற்சிப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மாகாண சபைகளின் அதிகாரங்களில் மத்திய அரசாங்கம் கொடுக்கும் அழுத்தங்களை நிறுத்துவதற்காக சகல மாகாண முதலமைச்சர்களும் இணைந்து உரிய வேலைத்திட்டத்தை விரைவில் செயற்படுத்த திட்டமிட்டுள்ளதாகவும் பேஷல ஜயரத்ன தெரிவித்தார். (செ-12)


**இந்து நாகரிகம்**

கடந்த காலம் திறமைச்சித்தி பெற்ற மாணவர்களின் கல்வி உயர வாழ்த்துகின்றோம்.
மீண்டும்

**A/L Day Class**

வழமை போல் இம்முறையும்
திங்க, செவ், புத, வியா, வெள்.
8.00 am

ஆசிரியர் சைவப்புலவர் என்.ரி.தரன் (M.A)

அடிப்படையிலிருந்து கற்பிப்பதுடன் பகுதி I பகுதி II பயிற்சி பரீட்சைகளும் இறுதி கருத்தரங்குகளும் இடம்பெறும்.

பொருளியற் கல்லூரி - யாழ்ப்பாணம்

எமது சக நிறுவனங்களான பொருளியற் கல்லூரி - இணுவில் BARATHY-சித்தன்கேணி. வழமைபோல வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

உங்கள் அனுமதிகளை முன்கூட்டியே பெற்றுக் கொள்ளவும். (C-3442)



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532



# தசாக கிருஹயஜ்ஞ அழைப்பு

அமரர்
**ஸ்ரீமதி விசாலாட்சி அம்மா கந்தசாமிஐயர்**



அன்புடையீர்!

நிகழும் மன்மத வருஷம் மார்கழி மாதம் 18ஆம் நாள் (03.01.2016) ஞாயிற்றுக்கிழமை சிவபதம் அடைந்த ஸ்ரீமதி விசாலாட்சி அம்மா கந்தசாமிஐயர் அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

| | |
|---|---|
| 12.01.2016 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணி | - தசாகம் |
| 13.01.2016 புதன்கிழமை | - ஏகோதிஷ்டம், மாசிகம் |
| 14.01.2016 வியாழக்கிழமை | - சபிண்டீகரணம் |
| 16.01.2016 சனிக்கிழமை | - கிருஹயஜ்ஞம் சமாராதனை |

இந் நிகழ்வுகளில் பங்குகொண்டு பிரார்த்திப்பதுடன் சமாராதனையிலும் (மதிய போசனம்) கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(3154)

சந்நிதி வீதி,
தம்பாலை,
அச்சுவேலி.
0212058326
0773248911

தகவல் :
க. இலட்சுமணசர்மா
ஓய்வுநிலை முகாமையாளர்,
இலங்கை வங்கி
முகாமையாளர் பிரதேச அபிவிருத்தி வங்கி
யாழ்ப்பாணம்.
மற்றும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்.



# 10 ஆம் ஆண்டு கண்ணீர்ப் பூக்கள்



| படைப்பில் | அழிப்பில் |
|---|---|
| 25 – 02 – 1975 | 11 – 01 – 2006 |

**அமரர் கணபதிப்பிள்ளை பவளராணி**
சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் (J/313, மட்டுவில் வடக்கு)

பன்றித் தலைச்சித் தாயவளைதினம் தோறும்தொழுபவளே!
திருநீற்றுக் குறியோடு தினம் பவனி வருபவளே!
எம்மூரை வளர்ப்பதற்கு காலை மாலை உழைத்தவளே!
உம் பணி முடிந்ததென்றா? விரைந்தனை விண்ணுக்கு

(3153)

மெய்கண்டான் வீதி,
மட்டுவில் வடக்கு
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# லஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் மகிந்தவுக்கு 100 பக்க கடிதம்

## திருமண வைபவங்களுக்கு செலவிட்டமை குறித்தும் கேள்வி

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது ஆட்சிக்காலத்தின் போது மேற்கொண்ட கொடுக்கல்-வாங்கல் செலவுகள் போன்றவற்றை வெளிப்படுத்துமாறு வலியுறுத்தி 100 பக்கங்களைக் கொண்ட கடிதமொன்றை இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ளது.**

ஒரு மாத காலத்திற்குள் பதிலளிக்குமாறு வலியுறுத்தி அனுப்பி வைக்கப்பட்டுள்ள அக்கடிதத்தில் மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த 2005 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு பதவியிலிருந்து வெறியேறிய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்- வாங்கல்கள் மற்றும் செலவுகளை வழங்குமாறு அக்கடிதத்தில் வலியுறுத்தப் பட்டுள்ளது.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் திருமண மற்றும் மரணச் சடங்கு நிகழ்வுகளுக்கு சென்று செலவிட்ட விபரங்கள் மற்றும் கொள்வனவு செய்த மின்சாதன பொருட்கள் உள்ளிட்ட பொருட்களின்வகைகள்கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களின் விபரம், தற்போதுள்ள சொத்து விபரம் போன்றவற்றின் விபரங்களையும் இலஞ்ச ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு கோரியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-7)

# தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் இல்லை

## இராணுவத்தளபதி தெரிவிப்பு


(கொழும்பு)

தேசிய பாதுகாப்பிற்கு எவ்வித அச்சுறுத்தலும் இல்லை என இராணுவத்தளபதி கிரிசாந்த டி சில்வா தெரிவித்துள்ளார். கண்டியில் நேற்றுக் காலை ஊடகவியலாளர்களுக்கு கருத்து தெரிவிக்கையில் இதனை தெரிவித்தார். ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் இராணுவம் தேசிய பாதுகாப்பிற்கு முன்னுரிமை வழங்குகின்றது.

நாட்டில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்குவதற்கான வாய்ப்பில்லை, இராணுவம் அதற்கு அனுமதிக்காது, வடக்கில் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இராணுவம் தொடர்ந்தும் உதவும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் கண்ணீர் வடிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது

## வடக்கு முதலமைச்சர் ஆதங்கம்



மக்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கும் போது எமது போதாமையை நினைத்துக் கண்ணீர் வடிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது என வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்ட ஆயர் கலாநிதி யஸ்ரின் டீ.ஞானப்பிரகாசம் அவர்களின் வரவேற்பு வைபவம் நேற்றைய தினம் இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

முன்னைய ஆயர் அவர்களின் ஓய்வின் பின்னர் எனது கணிப்பின் படிமிகப் பொருத்தமான ஆளுமை மிக்க, வடபகுதி மக்களை முறையாக வழிநடத்திச் செல்லக்கூடிய பேரருட் கலாநிதி யஸ்ரின் டீ.ஞானப்பிரகாசம் அவர்கள் யாழ். ஆயராக தெரிவு செய்யப்பட்டிருப்பது பாராட்டுதலுக்குரியது. அவரின் காலத்தில் பல மாற்றங்களை எதிர்பார்க்கின்றேன். மக்களை ஒருங்கிணைத்து அவர் பாரிய சமூக மறுமலர்ச்சியை ஏற்படுத்துவார் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

உண்மையில் ஒரு நல்ல இறை பணியாளனுக்கும் உண்மையான அரசியல்வாதிக்கும் ஒரு ஒற்றுமையுண்டு. சதாகாலமும் சமூகவிருத்தியையும் சமூக மேம்பாட்டையுமே அவர்கள் மனம் நாடும்.

நான் எப்பேர்ப்பட்ட அரசியல்வாதியோ நான் அறியேன். ஆனால் சமூக மறுமலர்ச்சி நாடும் உன்னதமான இறை பணியாளர் எமது ஆயர் என்றதால் எம் மக்கள் பற்றி நான் ஒரு சில வார்த்தைகள் இங்கு பேச வேண்டியுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு மேலாக வடபகுதியில் தொடர்ந்துநான் வசித்து வருவதுடன் வடபகுதி மக்களுடன் தினமும் நீண்ட நேரம் பல்வேறு விடயங்கள் மற்றும் தேவைகள் பற்றி கேட்டறியக்கூடிய ஒரு சந்தர்ப்பம் எனக்கு கிட்டியுள்ளது.

அதன் அடிப்படையில் இங்குளள மக்கள் பல்வேறு தேவை உடையவர்களாக இருப்பதை அவதானிக்கி ன்றேன். காணியற்றவர்கள், வீடுக ளற்றவர்கள், உடல் ஊனம் அடைந தவர்கள், அங்கவீனமுடையவர் கள், பிள்ளைகளை இழந்தவர்கள், தாய், தந்தையரை இழந்தவர்கள், உழைப்பாளிகளை இழந்து பெண் தலைமைத்துவத்தின் கீழ் வாடு கின்ற குடும்பத்தினர்கள் எனப் பல தரப்பட்டவர்கள் தினமும் எம்மை நாடிவருகின்றார்கள்.

அவர்களுடைய தேவைகள் மிகப் பெரிதாக இருக்கின்ற போதிலும் எமதுகைகள் இறுக்கப்பட்ட நிலையில் அவர்களின் தேவைகளை நிறைவேற்ற முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கின் றோம். சிலநேரங்களில் எமது போதாமையை நினைத்துக் கண்ணீர் வடிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

இலங்கையின் ஏனைய பகுதிகளில் உள்ளமக்கள் வாழ்வாதார மட்டத்தில் மேலோங்கி இருக்கின்ற அதேநேரம் எமது மக்கள் அடிப்படை மட்டத்திற்கும் மிகக் கீழாக வாழ்ந்து கொண்டிருப்பது ஒரு துர்ப்பாக்கிய நிலைஆகும்.

எனவேதான் நான் என்னை சந்திக்க வருகின்ற வெளிநாட்டுப் பிரதிநிதிகள், தூதுவர்கள் அனைவரிடமும் இதைப்பற்றி எடுத்துக் கூறிவருகின்றேன். அதேவிடயத்தைத் தான் இன்று உங்களிடமும் தெரிவிக்க விரும்புகின்றேன்.

எமது பகுதியில் உள்ளமிகவும் தேவையுடைய மக்களின் தேவைகளை ஓரளவிற்காவது நிறைவேற்றி அவர்களையும் இந்த மண்ணில் சுய கௌரவத்துடனும் மதிப்புடனும் வாழ வழி செய்ய வேண்டிய பாரிய பொறுப்பு எம் அனைவரையும் சார்ந்ததாகும்.

மக்களின் தேவைகள் அறிந்து எழுதிவைத்துள்ளோம். தேவைகளுக்கான தீர்வென்னஎன்பதில் தீர்க்கமான தீர்மானம் இன்றி மயங்கி நிற்கின்றோம்.

அந்தவகையில் எமதுமதிப்பார்ந்த ஆயர் அவர்களே! உங்களின் அதிகாரவரம்பிற்கு உட்பட்ட, எல்லைகளிற்கு உட்பட்ட அளவில், எந்தெந்த வழிகளில் எம் மக்களுக்கு உதவமுடியுமோ அந்தந்த வழிகளில் இவர்களுக்கு உதவிகளைப் புரியநீங்கள் முன்வருவீர்கள் எனநான் திடமாக நம்புகின்றேன்.

உங்கள் காலத்தில் எமது மக்கள் அன்புடனும் பண்புடனும் அதிகௌரவத்துடனும் வாழஅந்த இறைவன் அருள்புரிவான் என்ற ஆழ்ந்த நம்பிக்கை என்னுள் இருக்கின்றது. உங்கள் அன்பால் ஆற்றலால்,அல்லலுறும் எமதுமக்கள் விடிவு காண்பார்கள் என்று நான் நம்புகின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# ஜனாதிபதியை புகழும் பாடல் இணையத்திலிருந்து நீக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை புகழ்ந்து வெளியிடப்பட்ட அதிகாரபூர்வ பாடல் காரணங்கள் குறிப்பிடப்படாமல் இணையத் தளத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாக பதவி ஏற்று ஒருவருடம் பூர்த்தியானதை முன்னிட்டு இந்த பாடல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

குறித்த பாடலில் மைத்திரிபால சிறிசேனவை பராக்கிரமபாகு மன்னருக்கு நிகராக புனையப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்ற நிலையில் கடும் எதிர்ப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த ஆட்சியின் போது முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தம்மை துட்டகைமுனு மன்னருக்கு ஒப்பிட்டு பல செயற்பாடுகளை முன்னெடுத்து வந்துள்ளார்.

இந்த நிலையில் மைத்திரிபால சிறிசேனவும் மகிந்தவை போலவே நடந்து கொள்வதாக குற்றம் சுமத்தப்பட்டிருந்த நிலையில், குறித்த பாடல் "யூடியூப்பில்" தளத்தில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

குறித்த பாடலை ஜனாதிபதி செயலகம் தயாரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### ஜனாதிபதியின் ஓராண்டு பூர்த்தி விழாவுக்கு

# தொலைபேசி மூலம் தான் அழைப்பு விடுக்கப்பட்டது

## மகிந்த விளக்கம்

மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக பதவியேற்று ஒரு வருட பூர்த்தியை முன்னிட்டு நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வுக்கான அழைப்பு தமக்கு தொலைபேசி மூலமே விடுக்கப்பட்டதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன் தம்மை அரசாங்க அதிகாரிகளே தொலைபேசியின்



மூலம் நிகழ்வுக்கு அழைத்தனர் என்றும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (இ-7)

# நீர்மூழ்கிக் கப்பலிலிருந்து — வடகொரியா ஏவுகணை சோதனை

அணுகுண்டை விட அதிசக்தி வாய்ந்த ஐதரசன் வெடிகுண்டை சோதனை செய்த அதிர்ச்சி அடங்குவதற்குள், நீர்மூழ்கி கப்பலில் இருந்து ஏவுகணை சோதனை நடத்திய காணொலியை வடகொரியா வெளியிட்டுள்ளது.


தென்கொரியா, அமெரிக்கா போன்ற நாடுகளை எதிரிகளாக கருதி வரும் வடகொரியா அண்மையில் அணுகுண்டை விட சக்தி வாய்ந்த ஐதரசன் வெடிகுண்டு சோதனையை வெற்றிகரமாக சோதித்தது. இதனால் உலக நாடுகள் மத்தியில் ஏற்பட்ட அதிர்ச்சி அடங்குவதற்குள், நீர்மூழ்கி கப்பலில் இருந்து எதிரிகளின் இலக்கை தாக்கும் ஏவுகணை சோதனையை வடகொரியா நடத்தியுள்ளது.

மூன்று நாட்களுக்கு முன் நடந்த இந்த சோதனை தொடர்பான காணொலி காட்சிகளையும் வடகொரியா அரசு வெளியிட்டுள்ளது. அந்த காணொலியில் நீர்மூழ்கி கப்பலில் இருந்து விண்ணில் சீறிப் பாய்கிறது ஏவுகணை. பின்னர் மேகங்களுக்கு இடையில் ஏவுகணை பயணிக்கிறது. அதை நீர்மூழ்கி கப்பலில் இருந்தபடி வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் மகிழ்ச்சியுடன் கண்டுகளிப்பது போல் காட்சிகள் உள்ளடங்கியுள்ளன. (இ-7)

### பிக் பாஷ் இருபது -20 தொடர்


# கார்பெர்ரியின் அரைச்சதம் கைகொடுக்க ஹொபார்ட் திரில்லரில் ஸ்கோச்சர்ஸ் வெற்றி

## சமியின் 12 பந்துகளில் 28 ஓட்டங்கள் வீணானது



**ஹொ**பார்ட் பொலிரிவ் ஓவலில் நேற்று நடைபெற்ற ஸ்கோச்சர்ஸ் - ஹரிக்கேன்ஸ் அணிகளுக்கு இடையிலான பரபரப்பான பிக் பாஷ் இருபது - 20 போட்டியில் ஸ்கோச்சர்ஸ் அணி ஒரு ஓட்டத்தால் திரில் வெற்றி பெற்றது.

ஸ்கோச்சர்ஸின் வெற்றிக்கு மைக்கல் கார்பெர்ரியின் அபார மான அரைச்சதம் பெரிதும் கைகொடுத்தது. மறுபுறத்தில் டரன் சமி, வீல்ஸ் ஹரிக்கேன்ஸ் அணியின் வெற்றிக்கு இறுதிநேரத்தில் அதிரடி யான துடுப்பாட்டத்தை வெளிக் காட்டியபோதிலும், அவர்கள் எதிர் கொண்ட பந்துகள் குறைவாக காணப்பட்டமையால் ஹரிக் கேன்ஸ் அணி வெற்றியை நழுவ விட்டது.


விளாசும் டரன் சமி

பிக் பாஷ் இருபது-20 தொடரின 25ஆவது லீக் போட்டி ஸ்கோச்சர்ஸ் - ஹரிக்கேன்ஸ் அணிகள் பெலிரிவ் ஓவலில் நேற்று பலப் பரீட்சை நடத்தின.

போட்டியின் நாணயச்சுழற்சி யில் வென்ற பேர்த் ஸ்கோச்சர்ஸ் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.


அதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய ஸ்கோச்சர்ஸ் அணி நிர் ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடி வில் 5 விக்கெட் இழப்புக்கு 173 ஓட் டங்கள் சேர்த்தது.

அதிகபட்சமாக கார்பெர்ரி 35 பந்தில் 62 ஓட்டங்கள் குவித்தார்.

பின்னர் 174 ஓட்டங்கள் எடுத் தால் வெற்றி என்ற இலக்குடன் ஹொபார்ட் ஹரிக்கேன்ஸ் அணி களம் இறங்கியது.

தொடக்க வீரர்களாக டங், பெய்ன் ஆகியோர் களம் இறங்கி னார்கள். டங் 9 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ஆட்டம் இழந்தார். எனினும் அணித் தலைவர் ரிம் பெய்ன் சிறப்பாக விளையாடி 47 பந்துகளில் 4 பவுண்டரிகள், 2 சிக்சர்களுடன் 57 ஓட்டங்கள் எடுத் தார்.

அதன்பின் வந்த சங்கக்கார 6 ஓட்டங்கள் எடுத்து ஏமாற்றம் அளித் தார். பின்னர் வந்த கிறிஸ்டியன் 16, ஹில் 23 ஓட்டங்கள் எடுத்தனர்.



அணியின் வெற்றிக்கு கடைசி ஓவரில் 16 ஓட்டங்கள் தேவைப் பட்டன. அச்சமயம் மே.தீவுகளின் இருபது-20 அணித் தலைவர் டரன் சமி 6 பந்துகளில் 14, வீல்ஸ் 10 பந்தில் 20 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தனர்.

கடைசி ஓவரை ரை வீசினார். முதல் இரண்டு பந்துகளில் சமி தலா இரண்டு ஓட்டங்கள் எடுத்தார். 3ஆவது பந்தில் ஓட்டங்கள் எடுக்க வில்லை. 4ஆவது பந்தை சிக்ஸருக்கு தூக்கினார். இதனால் கடைசி இரண்டு பந்தில் 6 ஓட் டங்கள் தேவைப்பட்டது.


5ஆவது பந்தை சமி அடித்தார். ஆனால் அதில் வீல்ஸ் ரன்-அவுட் ஆனார். இதனால் கடைசி பந்தில் சிக்ஸ் அடித்தால் வெற்றி என்ற பர பரப்பான சூழ்நிலை உருவானது.

ஆனால் சமியால் கடைசி பந் தில் பவுண்டரிதான் அடிக்க முடிந் தது. இதனால் ஒரு ஓட்டத்தால் மயிரிழையில் பேர்த் ஸ்கோச்சர்ஸ் அணியிடம் ஹரிக்கேன்ஸ் அணி வெற்றியை தாரைவார்த்தது.

களத்தில் டரன் சமி 12 பந்து களில் 28 ஓட்டங்கள் குவித்தும் பல னில்லாமல் போனது.

போட்டியின் ஆட்டநாயகனாக ஸ்கோச்சர்ஸ் அணியின் மைக்கல் கார்பெர்ரி தெரிவானார்.

# சென்னை ஓபன் டென்னிஸ் வாவ்ரிங்கா சம்பியன்




**சென்**னை ஓபன் டென்னிஸ் தொடரில் அசத்திய சுவிட்சர்லாந்து வீரர் வாவ்ரிங்கா, ஹட்ரிக் பட்டம் வென்றார். இறுதிப் போட்டியில் கோரிச்சை வீழ்த்தினார்.

தெற்காசியாவில் நடத்தப்படும் ஒரே ஒரு ஏ.டி.பி., 'வேர்ல்ட் ரூர்' தொடரான சென்னை ஓபன் டென் னிஸ், நுங்கம்பாக்கத்தில் நடந்தது.

இதன் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில், உலகின் 'நம்பர் 4' வீர ரான சுவிட்சர்லாந்தின் ஸ்டானிஸ் லாஸ் வாவ்ரிங்கா, 44ஆவது இடத்தில் உள்ள குரோஷியாவின் போர்னா கோரிச் மோதினர்.

ஆரம்பத்தில் இருந்து ஆதிக்கம் செலுத்திய வாவ்ரிங்கா, முதல் செட்டை 6-3 எனக் கைப்பற்றி னார்.


இரண்டாவது செட்டில், கோரிச் சற்று சவால் அளித்தார். இருப் பினும, அனுபவ ஆட்டத்தை வெளிப படுத்திய வாவ்ரிங்கா 7:5 என தன்வசப்படுத்தினார்.

ஒரு மணி நேரம் 26 நிமிடம் நீடித்த போட்டியின் முடிவில் வாவ்ரிங்கா 6:3, 7:5 என்ற நேர் செட் கணக்கில் வென்று சம்பியன் பட்டம் வென்றார்.

இதன்மூலம், இத்தொடரில் வாவ்ரிங்கா ஹாட்ரிக் பட்டம் (2014,15,16) வென்றார்.

# 2ஆவது பயிற்சியிலும் இந்தியா வெற்றி ஆஸியின் சவாலுக்கு ரெடி என்றும் அறிவிப்பு

**மே**ற்கு அவுஸ்திரேலியா XI அணிக்கு எதிரான ஒரு நாள் பயிற்சி போட்டியில் இந்திய அணி 64 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.



அவுஸ்திரேலியா சென்றுள்ள இந்திய அணி ஐந்து ஒருநாள் (ஜன., 12, 15, 17, 20, 23), மூன்று சர்வதேச இருபது-20 (ஜன., 26, 29, 31) போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது.

இதற்கு தயாராகும் வகையில் இரண்டு பயிற்சி போட்டிகளில் பங் கேற்றது. முதலில் நடந்த இருபது-20 பயிற்சி போட்டியில் இந்திய அணி 74 ஓட்டங்கள் வித்தியாசத் தில் மேற்கு அவுஸ்திரேலியா XI அணியை வீழ்த்தியது.

இந்நிலையில் நேற்று முன் தினம் நடந்த 2ஆவது (ஒரு நாள்) பயிற்சிப் போட்டியிலும் இந்திய அணி வெற்றி பெற்றது. இதன் மூலம் ஆஸியின் சவாலுக்கு ரெடி என்று இந்தியா அறிவித்துள்ளது

பேர்த்தில் நேற்று முன்தினம் நடந்த இவ் பயிற்சி ஒருநாள் போட்டி யில் இந்தியா, மேற்கு அவுஸதிரே லிய XI அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணித் தலைவர் தோனி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

பேர்த்தில் நடைபெற்ற இப்போட்டி யில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந் திய அணி 49.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 249 ஓட்டங்களை எடுத்தது.

ஷிகர் தவான் 4, விராட் ஹோலி 7 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். 5.3 ஓவர்களில் 2 விக்கெட் இழப புக்கு 19 ஓட்டங்கள் என்ற நிலை யில் ரோஹித் சர்மாவுடன் இணை ந்த ரஹானே சிறப்பாக ஆடினார்.

ரோஹித் 67, ரஹானே 41 ஓட் டங்களில் வெளியேறினர். அடுத்து வந்த குர்கீரத் சிங் மான் 6, தோனி 15 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். கடைசிக் கட்டத்தில் மனிஷ் பான்டே 58, ஜடேஜா 26, அக்ஷர் படேல் 8 ஓட்டங்கள் சேர்க்க இந்திய அணி கௌரவமான ஓட்ட எண்ணிக் கையை எடுத்தது.

மேற்கு அவுஸ்திரேலிய தரப் பில் போர்ட்டர் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

250 ஓட்டங்கள் இலக்குடன் விளையாடிய மேற்கு அவுஸ்தி ரேலிய XI அணி 49.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 185 ஓட்டங்களை மட்டுமே எடுத்து 64 ஓட்டங்கள் வித்தியாசத் தில் தோல்வியை சந்தித்தது.

அதிகபட்சமாக மோர்கன் 50, கார்டர் 45 ஓட்டங்கள் எடுத்தனர். இந்திய தரப்பில் ரிஷி தவண், ஜடேஜா, அஸ்வின், அக்ஷர் படேல் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப் பற்றினர்.

இந்திய அணி இதற்கு முன்னா இதே அணிக்கு எதிராக நடை பெற்ற இருபது-20 பயிற்சி ஆட்டத் திலும் வெற்றி பெற்றிருந்தது.

இரு பயிற்சி ஆட்டத்திலும் இந் திய அணியின் துடுப்பாட்டம் மற் றும் பந்து வீச்சு நம்பிக்கை அளிக் கும் விதத்தில் இருந்தது.

இநத புத்துணர்ச்சியுடன் போ்த தில் நாளை ஆரம்பமாகும் முதல் ஒரு நாள் போட்டியில் அவுஸ் திரேலிய அணியை சந்திக்கிறது.

இப்போட்டி இலங்கை நேரப்படி காலை 8.50 மணிக்கு ஆரம்ப மாகிறது.



1985ம் ஆண்டிலிருந்து இன்று வரை....

யாழ் கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.

(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)

## மகளிருக்கான 4 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

✌ கேக் ஐசிங், உணவு தயாரித்தல், ✌ Hair Dressing & Styling (கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்)

✌ முக அழகுக் கலை (Facials) ✌ Pedicure, Manicure (கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல்)

✌ மெஹந்தி போடுதல் ✌ இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் முறைகளில் மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான 7 முறைகளில் சேலை அணிதல்,

**மேற்படி அனைத்துப் பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.**

**சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 24-01-2016**
**ஞாயிறு காலை 9.30 மணி**
**கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 25-01-2016**
**திங்கள் காலை 9.30 மணி**

✌ (B) பிளவ்ஸ், சாறி (B)பிளவ்ஸ், சுரிதார், தைக்கும் சான்றிதழ் அற்ற தையல் பயிற்சிகள். (கிழமை நாட்களில் மட்டும்)





மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-

GURU





Yarl Beauty Academy

YARL BEAUTY ACADEMY

அழகுக்கலை பயிற்சிகள்

தைபொங்கலினை முன்னிட்டு 40% கட்டணக்கழிவில் புதிய பிரிவுகள் ஆரம்பம்

- Certificate in Basic Beauty Courses (ஒரு மாத கால அழகுக்கலை) 4800/= மட்டுமே.
- Dip in Beauty Culture & Hair Dressing (மூன்று மாத கால டிப்ளோமா அழகுக்கலை)
- Certificate in Cake Icing (கேக் ஐசிங்)
- Tailoring Classes (தையல் பயிற்சி)

2016 தை 17ம், 18ம், 19ம், 20ம் திகதிகளில் முற்பகல் 10மணி முதல் ஆரம்பம்

வகுப்புகளில் சேரவிரும்புவோர் மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும். முற்பதிவு செய்யும் முதல் 10 மாணவர்களுக்கு Bouquet Making Free (பூச்செண்டு தயாரித்தல் பயிற்சி இலவசம்)

இல.616 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(வேம்படி சந்தியில் மஞ்சள் கடவையின் முன்)


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## 31வது பொதுப்பட்டமளிப்பு வைபவம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 31வது பொதுப்பட்டமளிப்பு வைபவம் (ஜனவரி) இம் மாதம் 19 ஆம், 20 ஆம் திகதிகளில் நடைபெறும்.

இப்பட்டமளிப்பு வைபவத்தில் நேரடியாகப் பட்டம் பெறுவோருக்கு கீழ்குறிப்பிட்ட திகதிகளில் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும். பட்டமளிப்பு வைபவத்திற்கான அங்கிகளைப் பெற்றுக்கொள்வதற்காக பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

1. பல்கலைக்கழக அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டை.
2. பட்டமளிப்பு வைபவத்தில் பங்குபற்றுவதற்காக பணம் செலுத்திய பற்றுச்சீட்டு.
3. புகைப்படம் மற்றும் DVD யினைப் பெறுவதற்காக ரூபா. 300.00 இனை யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் (கணக்கு இல : 162 100160000880) வைப்புச் செய்த பற்றுச்சீட்டு.

பின்வரும் இடங்களில் அங்கிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

| | திகதி | நேரம் | இடம் | பட்டம். |
|---|---|---|---|---|
| 1 | 13.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | கலைப்பீடாதிபதி அலுவலகம் | சூலைமாணி (சிறப்பு)<br>பட்டப்பின்கல்வி தகைமைச் சான்றிதழ் (முழுநேரம்) |
| | 14.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | | சட்டமாணி, நுண்கலைமாணி<br>கலைமாணி (பொது) |
| 2 | 13.01.2016<br>14.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | மருத்துவபீடாதிபதி அலுவலகம் | மருத்துவமாணி சத்திர சிகிச்சைமாணி |
| 3 | 13.01.2016<br>14.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | இணைந்த சுகாதார விஞ்ஞான அலகு | தாதியியல் விஞ்ஞானமாணி<br>மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி.<br>மருந்தகவியல்மாணி |
| 4 | 13.01.2016<br>14.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | முகாமைத்துவ பீடாதிபதி அலுவலகம் | தொழில் நிர்வாகமாணி |
| 5 | 13.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | விஞ்ஞான பீடாதிபதி அலுவலகம் | விஞ்ஞானமாணி (பொது) |
| | 14.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | | விஞ்ஞானமாணி (சிறப்பு)<br>கணனி விஞ்ஞானத்தில் விஞ்ஞானமாணி |
| 6 | 13.01.2016<br>14.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00<br>மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | கல்விக்கிளை, யாழ். பல்கலைக்கழகம் | சித்த மருத்துவ சத்திர சிகிச்சைமாணி<br>விவசாய விஞ்ஞானமாணி |
| 7 | 13.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | உயர் பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி அலுவலகம் | முதுதத்துவமாணி<br>முதுமெய்யியல்மாணி<br>முதுகல்வியியல்மாணி |
| | 14.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | | முதுகலைமாணி முதுவிஞ்ஞானமாணி<br>பட்டப்பின்கல்வி தகைமைச் சான்றிதழ்<br>பட்டப்பின் தகைமைச் சான்றிதழ் (ஆங்கிலம்) |
| 8 | 13.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப. 01.00 – 04.00 | வவுனியா வளாக முதல்வர் அலுவலகம் | வியாபார முகாமைத்துவ மாணி (பொது.சிறப்பு) |
| | 14.01.2016 | மு. ப. 09.00 – 12.00<br>பி. ப.01.00 – 04.00 | | விஞ்ஞானமாணி (பிரயோக கணிதமும் கணித்தலும்) (பொது)<br>விஞ்ஞானமாணி (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்).<br>தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமாணி (பொது) |
| | 16.01.2016 | மு. ப. 09.00 – 12.00 | | விஞ்ஞானமாணி (சூழல்விஞ்ஞானம்) (பொது.சிறப்பு)<br>விஞ்ஞானமாணி கணனி விஞ்ஞானம் (சிறப்பு) |

குறிப்பு:

அனுமதிகள் கிளையினால் வழங்கப்பட்ட பட்டதாரிகளின் தொழில் ஈடுபாடுகள் பற்றிய கேள்விக் கொத்தினை முறையாகப் பூரணப்படுத்தி சமர்ப்பிக்க தவறியோர் பட்டமளிப்பு அங்கிகள் வழங்கப்படும் போது அதனைப் பெற்று பூரணப்படுத்தி சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமானதாகும் என்பதனை கவனத்திற் கொள்க.

பதிவாளர்
09.01.2016

(சி-3442)

# ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் மாணவர்களை இணைக்க நடவடிக்கை

லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக் கல்லூரியில் மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப் பட்டுள்ளன. மருத்துவக்கல்லூரியில் இணைந்து கற்றுக்கொள்ள விரும்புபவர்கள் 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்டவர்களாக இருக்க வேண்டும்.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் க.பொ.த(சா/த) தர பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவையில் விஞ்ஞானம்,தமிழ் மொழி உட்பட ஆறு பாடங்களில் சித்தி அடைந்திருப்பதுடன் க.பொ.த (உ/த) (கலை,வர்த்தகம், உயிரியல்,கணிதத்துறைகளில் இரண்டு பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும். இதேவேளை விண்ணப்பிப்பவரின் தாய் அல்லது தந்தை பரம்பரை வைத்தியராக இருந்தால் க.பொ.த (உ/த) தகைமையில் இருந்து விலக்களிக்கப்படும்.

விண்ணப்பப்படிவத்தை சுன்னாகத்திலுள்ள லங்கா சித்த ஆயுர்வேத மருத்துவக்கல்லூரியில் பெற்றுப் பூரணப்படுத்தி அனுப்பிவைக்கப்படவேண்டும்.

விண்ணப்பிக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 2016/2017 சித்த ஆயுர்வேத டிப்ளோமா கற்கைநெறி என்று குறிப்பிட்டு பதிவாளர் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி, மின்சாரநிலைய வீதி சுன்னாகம் என்ற முகவரிக்கு எதிர்வரும் 20.01.2016 ஆம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்குமாறு வட இலங்கை மருத்துவ சபையினர் அறிவித்துள்ளனர். (இ)


**வைத்தியம்**

உடல் பருமன் குறைத்தல்/கூட்டுதல், தலைமுடி உதிர்தல், ஆண்மைக்குறைபாடு, குழந்தையின்மை, தழும்புகள் மறைய, பாலுறுப்புக் குறைபாடுகள், முக அம்சச் சிகிச்சை, (3111)

தொடர்பு-Shans Health Care,255, K.K.S. Road,Kokuvil.T.P- 0770357307




**வேலையாட்கள் தேவை**

எமது ஸ்தாபனத்திற்கு கொழும்பில் தங்கியிருந்து வேலை செய்வதற்கு வேலையாட்கள் உடன் தேவை. மாத வேதனமாக ரூபா-27000 மட்டும் வழங்கப் படும். இலவச தங்குமிட வசதி உண்டு.

ஆண்கள் மட்டும் வயது 18 தொடக்கம் 25 வரை.
தொடர்பு-கிங்ஸ் எலக்ரோனிக்ஸ்
11-A, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே- 021 222 3857

(3146)





LED BULB

Assembled in China Complete sets with box (Not parts)

Plastic Bulb

Wholesale Only!

3W Rs. 35/=

SUNDAY & POYA DAY OPEN 365 Days

MINIMUM ORDER 50 PCS

| LED Bulb | 6 M Warranty | No Warranty |
|---|---|---|
| 3W | 52/- | 40/- |
| 5W | 78/- | 60/- |
| 7W | 104/- | 80/- |
| 9W | 117/- | 90/- |
| 12W | 137/- | 105/- |
| 15W | 169/- | 130/- |

Low Price MINIMUM ORDER 50 PCS

| LED Bulb | 6 M Warranty | No Warranty |
|---|---|---|
| 3W | 46/- | 35/- |
| 5W | 72/- | 55/- |
| 7W | 85/- | 65/- |
| 9W | 98/- | 75/- |
| 12W | 111/- | 85/- |
| 15W | 137/- | 105/- |

SMART Electronics (Pvt) Ltd

No.184 A, Dam Street,Colombo 12.
Tel: 0727649245
Website : smartelectronics.lk

max adz

## சிறுமி மீது துஷ்பிரயோகம் இளைஞனுக்கு மறியல்

(கரணவாய்)

சிறுமி ஒருவரை துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய 17 வயது இளைஞர் ஒருவரை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதிபதி பா.சுப்பிரமணியம் கடந்த வெள்ளிக்கிழமை உத்தரவிட்டுளளார்.பருத்தித்துறை- கற்கோவளம் புனிதநகர் பகுதியைச் சேர்ந்த 14 வயதுச் சிறுமி ஒருவரை அதே பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய இளை ஞர் ஒருவர் காதலித்து வந் துள்ளார்.

இதனையடுத்து அச்சிறுமியை கடத்திச் சென்று துஷ்பிரயோகத்திற்குட்படுத்தி யுள்ளார்.இது தொடர்பில் பாதிக்கப் பட்ட சிறுமியின் சகோதரியினால் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முறைப்பாட்டையடுத்து அவ் இளைஞனை பொலிஸார் கைது செய்து பருத்தித்துறை நீதிமன்றத்தில் கடந்த 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பதில் நீதிபதி முன்னிலையில் முன்னிலைப்படுத்தியிருந்தனர்.

வழக்கை விசாரித்த நீதிபதி அவ் இளைஞனை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (இ-5-60)

# 5 நாட்களுக்கு மேலாக சீரான மின்சாரமில்லை

(பொற்பதி)

வடமராட்சிக் கிழக்கு- வெற்றிலைக்கேணி கிராமத்தில் கடந்த 5 நாட்களுக்கு மேலாக சீரான முறையில் மின்சாரம் வழங்கப்படவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

வெற்றிலைக்கேணி அந்தோனியார் கோவிலடிச் சந்தியில் வெற்றிலைக் கேணி கிராமத்திற்கான மின்சாரத்தினை வழங்கும் மின்மாற்றி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மின் மாற்றியிலிருந்து வெற்றிலைக்கேணி பகுதியிலுள்ள வீடுகளுக்கு மற்றும் ஏனைய தொழில் நிலையங்களுக்கு மின்சாரம் வழங்கப்படுகின்றது.

இவ்வாறு வழங்கப்படுகின்ற மின்சாரத்தில் கடந்த 5 நாட்களுக்கு மேலாக தினமும் அடிக்கடி மின்சாரம் தடைபடுவதுடன் சில சமயங்களில் முற்றுமுழுதாகவும் துண்டிக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பாக வெற்றிலைகேணி பொதுமக்களால் பருத்தித்துறை மின்சார நிலையத்திற்கு தெரியப்படுத்தப்பட்ட பின்னர் மின்சார நிலையத்தினர் அப்பகுதிக்குச் சென்று மின்சாரத்தை சீர் செய்த சில மணித்தியாலங்களில் மீண்டும் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பிரச்சினை தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதால் அப்பிரதேச மக்கள் மீண்டும் மின்சார சபையினை நாடி வருகின்றனர்.

தமது பிரதேசத்தில் எதற்காக மின்சாரம் அடிக்கடி துண்டிக்கப்படுகின்றது என அப்பிரதேச மக்களால் மின்சார சபையினரிடம் கேட்ட போது கடற்கரை பக்கத்தில் மின்மாற்றி அமைக்கப்பட்டுள்ளதனால் அடிக்கடி மின் இணைப்பு துண்டிக்கப்படுகின்றது. கடல்நீரின் உப்புக் காற்றுக் காரணமாகவே இவ்வாறான பிரச்சினை ஏற்படுகின்றது எனவும் மின்சார சபையின் உயரதிகாரிகளால் கூறப்பட்டுள்ளது.

இதேவேளை இத்தகைய பிரச்சினைகள் தொடச்சியாக காணப்படுவதால் மின்மாற்றியை வேறொரு இடத்திற்கு மாற்றுமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (இ-5-64)

## நீர்வேலியில் திருவாசக இசையமுதம்



திருவாசக இசையமுதம் என்றபக்தி இசைநிகழ்வுநாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நீர்வேலி இராசவீதியில் உள்ள பொன் செல்வமகால் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நீர்வை தியாக.மயூரகிரிக் குருக்கள் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் தவநாதன் றொபேட் மாணிக்கவாசகரின் திருவாசகப்பாடல்களை இசைக்கவுள்ளார். இந்நிகழ்வில் அணிசேர் கலைஞர்களாக வயலின்-சுருதி வேந்தன் அ. ஜெயராமனும் மிருதங்கம்-யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் க.கஜனும் பங்கேற்கவுள்ளனர். இந்நிகழ்வு நீர்வையூர் அமரர் நவமணி சந்திரமெள லீசன் நினைவாக நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## சமுர்த்தி உத்தியோகத்தருக்கு கொலை அச்சுறுத்தல்

சமுர்த்தி உத்தியோகத்தர் ஒருவருக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. பருத்தித்துறை பொலிகண்டி மேற்கைச் சேர்ந்த கதிர்காமத்தம்பி- சிவாகரன் என்ற சமுர்த்தி உத்தியோகத்தரே இவ்வாறு முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளார்.

கொலைஅச்சுறுத்தல்விடுத்தவரது பெயர் விபரங்கள் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5-60)



யாழ்.செய்திகள்

## உதய நாளும் பரிசுத்தினமும்

அமரர் கலாநிதி அன்னலட்சுமிசின்னத்தம்பியின் உதய நாளும் பரிசுத் தினமும் இன்று திங்கட்கிழமை காலை 8.45 மணிக்கு சுன்னாகம் சபாபதிப்பிள்ளைவீதியில் அமைந்துள்ள வாழ்வக செல்லா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வாழ்வகத் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலை பரீட்சைகள் மதிப்பீட்டுக் கிளை பிரதிப் பரீட்சைகள் ஆணையாளர் கே.எம்.கருணாதிலக கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக சங்கத்திணைக்கள பிரதிசங்க அத்தியட்சகர் எஸ்.சக்திதரன், யாழ். புகையிரத நிலைய அதிபர் ரி.பிரதீபன், ஐ.ஐ.எஸ். இயக்குநர் லயன் வி.கே. விக்னேஸ், கிருபா லேணர்ஸ் அதிபர் ஏ.கிருபாகரன், லயன் என். சண்முகவேல் ஆகியோர் கலந்து கொள்வதுடன் கௌரவ விருந்தினர்களாக இணுவில் காயத்திரிபீடம் சிவாகம ஞான பாஸ்கரன், சிவ ஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.(இ-5)

# யாழ்.பொது நூலகத்தில் சர்வதேச இலக்கிய விழா

2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை ஒவ்வொரு ஜனவரி மாதத்திலும் தென்னிலங்கையின் காலிநகரில் நடத்தப்பட்டு வந்த சர்வதேச இலக்கியத் திருவிழா நாலாண்டுகால இடைவேளையின்பின்னர் மீண்டும் இவ்வாண்டு நடைபெறவுள்ளது.

"ஃபெயர்வே" நிறுவனத்தின் அனுசரணையுடன் இம்முறை இடம்பெறும் இவ்விழா வழமை போல ஆங்கில இலக்கியத்துடன் மட்டுப்படுத்தப்படாது. தமிழ், சிங்கள மொழிகளையும் உள்ளடக்கி ஒரு தேசிய விழாவாகவும் அமைய இருக்கிறது. அத்துடன் காலியில் மாத்திரமின்றி யாழ்ப்பாணம், கண்டி ஆகிய இடங்களிலும் இம்முறை விழாவின் அரங்குகள் அமைய இருக்கின்றன.

காலியில் 13 ஆம் திகதியிலிருந்து 17 ஆம் திகதி வரையிலும் யாழ்ப்பாணத்தில் 23, 24 ஆம் திகதிகளிலும் இவ் விழா நடைபெறுகின்றது. யாழ். நகர் நிகழ்ச்சிகள் யாவும் யாழ். பொது நூலக மண்டபத்தில் நடைபெறும்.

23 ஆம் திகதி காலை முதலாவது அரங்கில் ஐயாத்துரை சாந்தன், கந்தையா சிறிகணேசன், காயத்திரி சிறிகந்தவேல் ஆகியோர் கலந்து கொள்ளும் **வடிவங்களினூடாக தமிழ் இலக்கியம்** எனும் தலைப்பில் கலந்துரையாடல் இடம்பெறும்.

தத்தம் ஆக்க இலக்கியச் செயற்பாடுகள் பற்றியும் போர்க்கால மற்றும் தற்போதைய சூழல்களிலமைந்த தம் எழுத்து முயற்சிகள் ப்றறியும் அவர்கள் இதில் கலந்துரையாடுவர். எஸ்.பத்மநாதன் இவ்வரங்கினை நடத்துவார்.

தொடர்ந்து லண்டனில் வசிக்கும் எழுத்தாளர் கெனன் மாலிக் ஆங்கிலத்தில் எழுதும் தமிழ் நாட்டுப் பெண்மணி பத்மா விஸ்வநாதன், சிங்கப்பூர் எழுத்தாளர் ஒவிடியா யு ஆகியோரின் உரையரங்களும் இடம்பெறும். முதல் நாள் விழாவின் நிறைவாக இணைய வன்முறை என்னும் ஆற்றுகை நிகழ்வு இடம்பெறும்.

24 ஆம் திகதி காலையில் ஈழப்போரின் முடிவில் தப்பிப்பிழைத்த மூவரின் கதையைக் கூறும் பிரச்சினையின் பருவங்கள் என்னும் நூலின் ஆசிரியரான தென்னிந்தியப் பத்திரிகையாளர் ரோகினி மோகனின் உரையரங்கு இடம்பெறும். இவ்வரங்கினை ஐயாத்துரை சாந்தன் நடத்துவார்.

தொடர்ந்து பிரபல பிரிட்டிஷ் நாவலாசிரியர் செபஸ்ரியன் ஃ போக்ஸ் அவர்களின் புனைகதை பற்றிய உரையரங்கு தென்னிந்திய எழுத்தாளர் கீதா ராமானுஜத்தின் உரையரங்கு, ஆங்கில ஊடகவியலாளர் ஜோன் ஸ்நோவின் கருத்துப்பகிர்வு ஆகியன இடம்பெறும்.

2016 ஆம் ஆண்டு இலக்கிய விழாவின் இன்னொரு முக்கிய அம்சம் ஃபெயர்வே நிறுவனம் நடத்திய தேசிய இலக்கிய விருதுகளுக்கான போட்டியாகும். மும்மொழிகளிலும் நடத்தப்பட்ட இப்போட்டியில் 2015 இல் இலங்கையில் வெளியான சிறந்த நாவல்களில் சிறந்தவற்றுக்கான விருதுகள் வழங்கப்படவுள்ளன. ஒவ்வொரு மொழிப்பிரிவின் வெற்றியாளருக்கும் விருதுடன் 5 இலட்சம் ரூபா பணப்பரிசும் வழங்கப்படும். இதன் முதற்கட்டமாக இடம்பெற்ற குறும்பட்டியல் தேர்வில் தெரிவான ஒவ்வொரு படைப்புக்கும் ஒரு இலட்சம் ரூபா வழங்கப்படுகின்றது. இக்குறும் பட்டியல் கடந்த நவம்பர் 27 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

துரதிர்ஷ்டவசமாக தமிழ்ப் பிரிவில்போட்டிக்குவந்த படைப்புக்கள் எதுவும் தரமானதாக அமையாததால் குறும்பட்டியில் வெளியாகவில்லை. சிங்கள மொழிப்பிரிவின் குறும் பட்டியலில் 4 படைப்புக்களும் ஆங்கிலமொழிப்பிரிவின்குறும் பட்டியலில் 5 படைப்புக்களும் இடம்பெற்றுள்ளன. இந்த ஐந்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரான ஐயாத்துரை சாந்தனின் தண்டவாளங்கள் சமாந்தரமாக ஓடும் என்னும் நாவலும் அடங்கும் ஃபெயர்வேயின் சிங்கள மற்றும் ஆங்கில படைப்புக்களுக்கான இறுதி முடிபுகள் எதிர்வரும் 15 ஆம் திகதி மாலை காலிநகரில் அறிவிக்கப்படவுள்ளன.

மேலதிக விபரங்களை www. Galle Literary Festival.com எனும் இணைய முகவரியில் பார்வையிடலாம். (இ-7)

# யாழ்.நகரை சுத்தமாக வைத்திருப்போம்

யாழ்ப்பாண நகரம் போதியளவு சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பேணப்படவில்லை என்ற குறைபாட்டை நிவர்த்தியாக்கும் வகையில் யாழ்ப்பாண நகர பிரதி பொலிஸ்மா அதிபர் மற்றும் உயர் பொலிஸ் அதிகாரிகள், யாழ்.மாநகர சபை ஆணையாளர், யாழ். வணிகர் கழகத் தலைவர் ஆகியோருக்கிடையிலான கலந்துரையாடலை அடுத்து 11.01 2016 திங்கட்கிழமை முதல் நகரிலிருந்து குப்பைகளை அகற்றும் புதிய நடைமுறைகளை யாழ்.மாநகரசபை நடைமுறைப்படுத்த முன்வந்துள்ளது.

இதன் ஒரு பகுதியாக வட்டார ரீதியாக கழிவுகள் அகற்றப்படும் தினங்கள், இவற்றை மேற்பார்வை செய்யும் உத்தியோகத்தர் பெயர், தொலைபேசி இலக்கம் ஆகியன பொது மக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண நகரை சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வைத்திருக்க நகரில் உள்ள வர்த்தகர்கள் மற்றும் நகருக்கு வருகை தரும் பொதுமக்கள் அனைவரும் இப் புதிய நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டும் என யாழ்.வணிகர் கழகம் கேட்டுக்கொள்கிறது.

பின்வரும் நடைமுறைகளில் வர்த்தகர்கள் கூடிய அக்கறை செலுத்தி இப் புதிய நடைமுறைகளுக்குதங்களது பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

1) 20 மைக்குரோன் அளவுக்கு குறைந்த பொலித்தீன் பைகளைபயன்படுத்துவதனை தவிர்த்துக் கொள்ளுங்கள். இவை அரசாங்கத்தினால் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது என்பதை தங்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

2) உங்கள் வர்த்தக ஸ்தாபனத்திற்கு முன்பாக கழிவுகள், குப்பைகள் போன்றவற்றை போடுவதையோ அல்லது வைப்பதனையோ தவிர்த்துக் கொள்ளுங்கள்.

3) வடிகால்களில் குப்பைகள் போடப்படுவதையோ அல்லது மண் மற்றும் கழிவுப் பொருட்கள் தள்ளப்படுவதனையோ வர்த்தகர்கள் தவிர்த்துக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

4) உணவகங்களில் சுகாதார பிரிவினர் அறிவுறுத்தலின் பிரகாரம் சுத்தமாகப் பேணும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

5) டெங்கு போன்ற நோய்களுக்கு காரணமான நுளம்புகள் தேங்கக்கூடிய நீர் நிலைகள் உங்கள் கடைகளுக்கு அல்லது சுற்றாடல்களுக்கு முன்னால் பேணப்படுவதை தவிர்த்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

6) நகருக்கு வரும் பொது மக்கள் கண்ட கண்ட இடங்களில் கழிவுகளை போடாது அவற்றிற்கென வைக்கப்பட்டிருக்கும் கழவகற்றும் பெட்டிகளில்மட்டும்கழிவுகளைபோடும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.


7)பல்புகள்,பற்றரிகள் மற்றும் இலத்திரனியல் கழிவுப் பொருட்கள், பழைய TV போன்றவை தனியாகப் பேணப்பட்டு மாநரசபை வளாகத்தில் அதற்கென பொறுப்பேற்கும் நிலையத்தில் மட்டும் நேரடியாக அவற்றைக்கையளிக்க வேண்டும். மாநகர சபை இவ்வாறான கழிவுகளை நேரில் பெற்றுக்கொள்ள விசேட நடைமுறையொன்றை விரைவில் மேற்கொள்ளவுள்ளது என்பதையும் அறியத்தருகின்றோம்.

8) மின்சார நிலைய வீதியில் HNB வங்கிக்கு எதிராகவும், CTB பேருந்து டிப்போவுக்கு முன்பாக டீசல் எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு முன்பாகவும் பிரதான தபாற்கந்தோருக்கு முன்பாகவும் மாநகரசபை தரம் பிரித்து கழிவு சேகரிக்கும் பெட்டிகளை வைத்துள்ளமையால் இதனை அனைவரும் பயன்படுத்தலாம். இவ்வாறான தரம்பிரித்து கழிவு சேகரிக்கும் பெட்டிகளை மேலும் பல இடங்களில் மாநகரசபை வைக்கவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

9)யாழ்ப்பாண நகரின் மத்தியில் தினமும் காலை, மாலை என இரு வேளைகளிலும் மாநகர சபையால் குப்பைகள் அகற்றப்படும் என்பதால் அனைவரும் இதனை ஒழுங்கு முறைகளின் அடிப்படையில் பயன்படுத்தலாம். உக்கக்கூடிய கழிவுகள், உக்காத கழிவுகள் என தனிமைப்படுத்தப்பட்டு தற்போது குப்பைகள் அகற்றப்படுவதால் இவ் ஒழுங்கினை சீராக அவதானித்து ஒத்துழைப்பு வழங்குங்கள்.

10) வர்த்தகர்களோ அல்லது மக்களோ மாநரசபை அறிவித்துள்ள தினங்கள் தவிர்ந்த ஏனைய தினங்களில் தங்களது வர்த்தக ஸ்தாபனங்களுக்கு முன்பாகவோ வீடுகளுக்கு முன்பாகவோ அல்லது வீதிகளிலோ கழிவுப் பொருட்களை வைப்பதைத் தவிர்க்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

11) பொதுச் சுகாதார உத்தியோகத்தவர்களும் சுற்றாடல் சுகாதாரத்தை கண்காணிக்கும் பொலிஸ் அதிகாரிகளும் அறிவிக்கப்பட்டுள்ளவாறு கழவுகளை அகற்றாது ஒழுங்கற்ற முறைகளில் குப்பைகளையும் கழிவுகளையும் வீசுவோருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதால் அனைவரும் ஒழுங்கு முறைகளை பின்பற்றும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என யாழ். வணிகர் கழகத்தின் செயலாளர் இ.ஜனக்குமார் விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார். (இ



நான்காவது உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டில் படுகொலை செய்யப்பட்ட 9 தமிழர்களின் 42 ஆம் ஆண்டு நினைவு நாள் யாழ்.வீரசிங்கம் மண்டபத்தின் முன்பாகவுள்ள நினைவிடத்தில் நேற்றைய தினம் நினைவுகூரப்பட்டது. 1974 ஆம் ஆண்டு உலக தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் போது பொலிஸாரின் தாக்குதலில் மின் கம்பிகள் அறுந்து வீழ்ந்ததில் 9 பேர் உயிரிழந்தனர். இந்த நினைவு கூரல் நிகழ்வில் மதகுருமார், நாடாளுமன்ற உறுப்பினர்கள், வட மாகாணசபை உறுப்பினர்கள், கட்சி பிரமுகர்கள் என பலர் கலந்து கொண்டனர். (படங்கள்:பொ.சோபிகா)


## கல்வியை கண்ணென போற்றும் யாழ்ப்பாணத்தில் ஆங்கில கல்வியில் மீண்டும் தலை நிமிர்ந்து நடக்க

காலத்தின் தேவைக்கேற்ப ஆங்கில கல்வியை வழங்கிட புதிய பாய்ச்சல்

# IEI College of English

IEI

**ஆங்கிலம் கற்போம்**

லண்டனில் இருபது வருடங்களுக்கும் மேலாக வெளிநாட்டவருக்கு ஆங்கிலம் கற்பித்த Kevin E. P. Doheny அவர்கள் TEFL, IELTS, ESOL, ADHD and EBD ஆகியவற்றில் பாண்டித்தியம் பெற்றவர். மேலும் பல வருடங்கள் ரஷ்யாவில் ஆங்கிலம் கற்பித்தவர்.

- **புலம்பெயர்வோருக்கான அடிப்படை ஆங்கிலம்**

மத்திய கிழக்கு, ஐரோப்பா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு புலம் பெயர்பவர்கள் ஆங்கிலத்தில் பேசவும் எழுதவும் தேர்ச்சியளிப்பதற்காக வடிவமைக்கப்பட்டது.

- **பல்கலைக்கழக மாணவர்களுக்கான ஆங்கிலம்**

இந்தக் கற்கைநெறியானது விசேடமாக தமிழ் மொழி மூலம் பட்டப்படிப்பை தொடரும் மாணவர்களுக்கும், புகுமுக மாணவர்களுக்குமாக வடிவமைக்கப் பட்டது.

- **English club**

ஆங்கிலத்தில் பேச விரும்பும் யாரும் இதில் பங்குபற்ற முடியும். 15 பேர் கொண்ட குழுக்களாக இது நடைபெறும். ஒவ்வொரு வகுப்பின் போதும் படக்காட்சிகள், விளையாட்டுகள் அதை தொடர்ந்து விவாதங்கள் ஆங்கிலத்தில் மட்டும் இடம்பெறும்.

- **பாடசாலை மாணவர்களுக்கான ஆங்கிலம்**

அரச பாடத் திட்டத்துக்கமைய ஆங்கில பாட கல்வி பயிற்றப்படும்.

**கல்வியாண்டு 2016 அனுமதிகள் இப்பொழுது வழங்கப்படுகின்றன**

மேலும் விபரமறியவும் அனுமதிகளை பெறவும்:

(சி 3426)

Public Relations Officer,
Tel: 0094 021 222 5151
Mob: 0094 076 8970966

Integrated Educational Institutions,
925/1/1, Thaddatheru junction,
K.K.S Road, Jaffna.



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: உத்தரட்டாதி<br>கி.பா: 44 3/4<br>உயரம்: 5'23"<br>தகைமை/தொழில்: A/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/4801 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 15 3/4<br>உயரம்: 5'2" தகைமை/தொழில்: BA/ அரச தொழில்<br>தொ.இ: G/4807 |
| பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 12 சூரிசெவ் 4 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ லண்டன் PR<br>தொ.இ: B/4802 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம்<br>கி.பா: 30<br>தகைமை/தொழில்: O/L/ அரச தொழில்<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் அசைவமும் ஏற்கப்படும்<br>தொ.இ: G/4808 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 19 செவ் 2 ல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: A/L லண்டன் NOT PR<br>தொ.இ: B/4803 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை<br>கி.பா: 28<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ: G/4812 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 44 செவ் 7 ல்<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: A/L/ தனியார் தொழில்<br>தொ.இ: B/4804 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 94 செவ் 8 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: CIMA, NHDIT<br>தொ.இ: G/4813 |

# கல்யாண மாலை

(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


## இராசி பலன்

11.01.2016
(மார்கழி 26, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 6.26 மணிக்கு
பிரதமை காலை 7.28 மணிவரை
துதியை பின்னிரவு 6.14 மணிவரை
உத்தராடம் முற்பகல் 10.49 மணிவரை
இராகுகாலம் 8.03-9.33 மணிவரை
சுபநேரம் 12.33-2.03 மணிவரை
கெர்ப்போட்ட முடிவு

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் புனர் பூசம் | | |
| சந் | | | ராகு |
| சூரி புத | சனி சுக் | செவ் | குரு |

**மீனம்** அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியலாம், நண்பர்கள் வட்டம் விரிவடையும், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும்.

**மேடம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கனவு புலிதமுண்டு, செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரும் நாள்.

**இடபம்** மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் நிலையுண்டு, பயணங்கள் நன்மை தரும், புதிய முயற்சிகள் கைகூடும்.

**மிதுனம்** சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, விரயங்கள் கூடும், பயணங்களின் போது விழிப் புணர்ச்சி அவசியம்.

**கும்பம்** வேலைச்சுமை அதிகரிக்கும் சுபகாரியச் செலவுகள் கூடும் இறைவழிபாட்டில் நாட்டம் செல்லும், தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள் சயன சுகக்குறைவான நாள்.

**கடகம்** அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும் நாள், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், கௌரவமான நாள்.

**மகரம்** தொழிலில் நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை அமையலாம், பெரியோர்களின் உதவியினால் சில நன்மைகள் நடைபெறலாம், ஆழ்ந்த சிந்தையுண்டு.

**சிம்மம்** போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், செய் தொழிலில் முன்னேற்றம் ஏற்படலாம், பகைவர்கள் விலகுவர், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும்.

**தனுசு** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நீண்ட நாளைய ஆசையொன்று கைகூடும் வாய்ப்புண்டு, உற்சாகத்துடன் பணிவு புரிவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

**விருச்சிகம்** செய் தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபாடு காட்டுவீர்கள், நண்பர்களின் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பாராட்டும் புகழும் கூடும் நாள், வருமானம் திருப்திதரும்.

**துலாம்** வீட்டை சீரமைப்பதில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும்.

**கன்னி** பிள்ளைகள் வழியில் பெருமையான செய்திகள் வந்து சேரலாம், உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொழிலை விரிபுபடுத்த முயற்சிகள் எடுப்பீர்கள்.

# கமக்கார அமைப்புக்களுக்கு புதிய நிர்வாகத்தெரிவுகள்

(மல்லாவி)

துணுக்காய் கமநல சேவைகள் நிலையத்திற்குட்பட்ட 20 கமக்கார அமைப்புக்களின் நடப்பாண்டிற்குரிய புதிய நிர்வாகத் தெரிவுகள் நடைபெறவுள்ளதாக துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் சி.பிரபாகரன் அறிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் 18 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு துணுக்காய் கமக்கார அமைப்பு, துணுக்காய் d வாய்க்கால் கமக்கார அமைப்பு ஆகியவற்றுக்கான நிர்வாகத் தெரிவுகள் துணுக்காய் கமநல சேவை நிலைய ஒன்றுகூடல் மண்டபங்களில் நடைபெறும்.

அன்றைய தினம் முற்பகல் 11 மணிக்கு மல்லாவி கமக்கார அமைப்பிற்கும் பிற்பகல் 3 மணிக்கு உயிலங்குளம் கமக்கார அமைப்பிற்குமான நிர்வாகத் தெரிவுகள் அந்தந்த பகுதிகளிலுள்ள பொதுநோக்கு மண்டபங்களில் நடைபெறும்.

எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு அனிஞ்சியன்குளம் கமக்கார அமைப்பிற்கும் முற்பகல் 10 மணிக்கு யோக புரம் மத்தி கமக்கார அமைப்பிற்கும் முற்பகல் 11 மணிக்கு தேராங்கண்டல் கமக்கார அமைப்பிற்கும் பிற்பகல் 3 மணிக்கு யோக புரம் மத்தி கமக்கார அமைப்புக்குமான நிர்வாகத் தெரிவுகள் அந்தந்தப் பகுதிகளிலுள்ள பொதுநோக்கு மண்டபங்களில் நடைபெறும்.

மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு பழைய முறிகண்டி கமக்கார அமைப்பிற்கும் முற்பகல் 11 மணிக்கு ஐயங்கன் குளம் கமக்கார அமைப்பிற்கும் நண்பகல் 12 மணிக்கு புத்துவெட்டுவான் கமக்கார அமைப்பிற்குமான நிர்வாகத் தெரிவுகள் அந்தந்தப் பகுதிகளிலுள்ள பொதுநோக்கு மண்டபங்களில் நடைபெறும்.

எதிர்வரும் 25 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யோக புரம் கிழக்கு கமக்கார அமைப்பிற்கும் முற்பகல் 11 மணிக்கு புகழேந்தி நகர் கமக்கார அமைப்பிற்கும் முற்பகல் 10 மணிக்கு யோகபுரம் கிழக்கு கமக்கார அமைப்பிற்கும் பிற்பகல் 3 மணிக்கு ஆலங்குளம் கமக்கார அமைப்பிற்குமான நிர்வாகத் தெரிவுகள் அந்தந்தப் பகுதிகளிலுள்ள பொது நோக்கு மண்டபங்களில் நடைபெறும்.

எதிர்வரும் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தென்னியன்குளம் கமக்கார அமைப்பிற்கும் முற்பகல் 11மணிக்கு கோட்டைகட்டியகுளம் கமக்கார அமைப்பிற்கும் நண்பகல் 12 மணிக்கு அம்பல பெருமாள் கமக்கார அமைப்பிற்குமான நிர்வாகத் தெரிவுகள் அந்தந்தப் பகுதிகளிலுள்ள பொதுநோக்கு மண்டபங்களில் நடைபெறும்.

எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாரதி நகர் கமக்கார அமைப்பிற்கும் முற்பகல் 10 மணிக்கு திரு நகர் கமக்கார அமைப்பிற்குமான நிர்வாகத் தெரிவுகள் அந்தந்த பகுதிகளில் உள்ள பொதுநோக்கு மண்டபங்களில் நடைபெறும் என அவர் அறிவித்துள்ளார். (2-15)




# முல்லைத்தீவு ஒருங்கிணைப்புக்குழு கூட்டம் 14ஆம் திகதி நடைபெறும்

முல்லைத்தீவு மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர்களான அமைச்சர் றிசாத் பதியுதீன், பாராளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன் ஆகியோரின் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெறுமென முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த ஆண்டில் நடைபெற்ற அபிவிருத்தி தொடர்பான வேலைத் திட்டங்கள், முடிவுறுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள், முடிவுறுத்தப்படாதுள்ள வேலைத்திட்டங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது. அத்துடன் நடப்பாண்டில் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித்திட்டங்கள், மக்களுக்கான அடிப்படை வசதிகள், வாழ்வாதார வேலைத்திட்டங்கள் உட்பட பல்வேறு விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

இம்முறை நடைபெறும் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்திற்கு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் தவிர்க்க முடியாத காரணத்தினால் சமுகம் அளிக்க மாட்டார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)



கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து முதியோர் சங்கங்களையும் சிறந்த முறையில் இயங்க வைப்பதற்கும் மாவட்ட முதியோர் பேரவையின் தேவைகள் தொடர்பாகவும் அண்மையில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரை கிளிநொச்சி மாவட்ட முதியோர் பேரவையின் நிர்வாக உறுப்பினர்கள் சந்தித்துக் கலந்துரையாடிய போது... (படம் :-சிவநகர் செய்தியாளர்)

# சிறுவர்களை ஒழுக்க சீலர்களாக வளர்ப்பது பெற்றோரின் கடமை

## சாந்தி எம்.பி.வலியுறுத்து

(மாமூலை)

சிறுவர்களை ஒழுக்க சீலர்களாக வளர்க்க வேண்டியது பெற்றோர் அனைவரினதும் பொறுப்பு என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி ஶ்ரீஸ்கந்தராஜா தெரிவித்துள்ளார்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மருத்துவர் எஸ். சிவதாஸ் எழுதிய "சிறுவர்களுடன்" என்ற சிறுவர் உளநலம் தொடர்பான நூல் அறிமுக விழா கடந்த 7 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிறப்புரையாற்றிய போதே திருமதி சாந்தி ஶ்ரீஸ்கந்தராஜா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

எதிர்காலத்தில் எமது இனத்தின் பெருமைகளை பேணக்கூடிய வகையில் சிறுவர்களை சிறப்பாக வளர்க்க வேண்டியது பெற்றோர் அனைவரதும் பொறுப்பு. சிறுவர்களை ஒழுக்கம் மிக்க சமுதாயமாக கட்டியெழுப்ப வேண்டியதும் பெற்றோரின் கடமையாகும்.

எமது தமிழினம் திட்டமிடப்பட்டு சகல வழிகளிலும் கலாசார ரீதியாகவும் அடக்கப்பட்டு வருகின்றது.

எனவே அதனை உணர்ந்து பெற்றோர் சிறுவர்களை வளர்ப்பதில் கூடிய அக்கறையெடுத்து செயற்படவேண்டியது அவசியம் எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண சபை சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், யாழ்.பல்கலைக்கழக உளவியல் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி க.கஜவிந்தன் மற்றும் துணுக்காய் பிரதேச செயலர் குணபாலன் ஆகியோர் பங்குபற்றியிருந்தனர்.

இந்நிகழ்வில் ஒளிரும் வாழ்வு அமைப்பினரால் மாற்றுத்திறனாளிகளின் பிள்ளைகளுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (2-301)

# அரசியல் கைதிகளின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள்

(மன்னார்)

மன்னார் பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் அரசியல் கைதிகளின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன் தினம் மன்னாரிலுள்ள மன்னார் பிரஜைகள் குழுவின் காரியாலயத்தில் நடைபெற்றது.

மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் எஸ்.செபமாலை தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,

மன்னார் மாவட்டத்திலுள்ள அரசியல் கைதிகளின் 11 குடும்பங்களின் பிள்ளைகளுக்கு தலா மூவாயிரம் ரூபாய் பெறுமதியுடைய பாடசாலை உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (2-9)

# விசேட பொதுக்கூட்டம்

(முள்ளியவளை)

முள்ளியவளை வித்தியானந்தக் கல்லூரி தேசிய பாடசாலையின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கல்லூரியின் கற்றல், கற்பித்தல் தொடர்பான செயற்பாட்டின் முன்னேற்ற மீளாய்வு, கல்லூரியின் பௌதீக வளங்கள் குறித்த மீளாய்வு, பாடசாலையின் துறைசார் ஆசிரியர்கள் மற்றும் கல்விசாரா ஊழியர்களின் ஆளணி பதவி வெற்றிடங்கள் குறித்த ஆய்வு, கல்லூரியானது தேசிய பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டுள்ள நிலையில் தேசிய பாடசாலைக்குரிய ஒழுங்கு விதிகள் மற்றும் சுற்று நிருபங்களுக்கு அமைய கல்லூரியை வழிநடத்தல் பற்றிய ஆய்வு போன்ற முக்கிய விடயங்கள் ஆராயப்படவுள்ளன.

ஆகையால் இக்கூட்டத்தில் கல்லூரியின் பழைய மாணவர்கள், பெற்றோர்கள், கல்லூரியின் நலன் விரும்பிகள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் ஆகியோர் கூட்டாக இணைந்து அறிவித்தல் விடுத்துள்ளனர். (2-302)

# தரமற்ற எரிபொருட்கள் விற்பனை வாகனங்கள் அடிக்கடி திருத்தம்

(முல்லைத்தீவு)

முள்ளியவளை தண்ணீரூற்று பகுதிகளில் கள்ளச் சந்தையில் கிடைக்கும் தரமற்ற பொருட்களினால் வாகனங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக சாரதிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேற்படி பிரதேசங்களில் பெற்றோல், டீசல் மற்றும் ஓயில் வகைகள் கள்ளச் சந்தையில் விலைகுறைவாக விற்பனை செய்யப்படுவதாகவும் அவை தரமற்றவையாகவும் காணப்படுவதால் வாகனங்கள் அடிக்கடி பழுதடைந்து போவதாக சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி பகுதிகளில் உள்ள தனியார் மற்றும் அரச நிறுவனங்களின் சாரதிகள் சிலர் தமது வாகனங்களில் இருந்து எரிபொருட்களைத் திருடி அதனைக் கலப்புச் செய்து குறைந்த விலைக்கு விற்பனை செய்து வருகின்றனர்.

விலை குறைவு காரணமாக வர்த்தகர்களும் அவற்றை கொள்வனவு செய்து விற்பனை செய்கின்றனர்.

இதனால் வாகன சாரதிகள், பொதுமக்கள் எனப் பல தரப்பினரும் குறைந்த விலை கொடுத்து வாங்கி வாகனங்களுக்கு எரிபொருளாகப் பாவிப்பதால் வாகனங்கள் அடிக்கடி பழுதடைகின்றன.

எனவே வர்த்தகர்கள் இவ்வாறான தரமற்ற எரிபொருட்களை கொள்வனவு செய்து விற்பனையில் ஈடுபடாமல் சட்ட ரீதியான கொள்வனவு விற்பனையில் ஈடுபடுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள்நடவடிக்கை எடுக்கவேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (2)

# நிர்மாணிக்கப்பட்ட பாலம் சேதம்



யு.என்.ஹாபிரட் நிறுவனத்தின் சுமார் 50 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் முள்ளியவளை வடக்கு மாதர் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் முள்ளியவளை நாவற்காடு பிரதான வீதியில் அமைக்கப்பட்ட பாலம் நிர்மாணிக்கப்பட்டு சுமார் 5 மாத காலப்பகுதிக்குள் சேதமடைந்துள்ளது.

குறித்த பாலத்தின் ஊடாக பயணிப்போர் விபத்துக்கள், உயிர்ச் சேதங்களை சந்திக்காத வரையில் சம்பந்தப்பட்டவர்கள் உடன் கவனத்தில் கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் வேண்டுகோள்விடுத்துள்ள னர். (2-30)

# கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 13 ஆம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார்.

இக் கூட்டத்திற்கு சிறுவர் விவகார அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வடக்கு மாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன், யாழ். நாடாளுமன்ற உறுப்பினர் களான சி.சிறீதரன், இ.அங்கயன் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெறவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-254)

# வடக்கு மாகாண கடற்றொழிலாளர்கள் நவீன மீன்பிடிக்கு தயாராக வேண்டும்

## மீன்பிடி அமைச்சர் யாழில் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**வடமாகாண கடற்தொழிலாளர்கள் அனைவரையும நவீன மீன் பிடிக்குத் தயாராகுமாறு மீன்பிடி அமைச்சர் மஹிந்த அமரவீர கேட்டுக் கொண்டுள்ளார்.**





மீன்பிடி அமைச்சருக்கும் யாழ். மாவட்ட கடற்தொழிலாளார்களின் பிரதிநிதிகளுக்குமிடையே கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழ்.கடற்தொழில் நீரியல் வளத் துறை அலுவலகத்தில் நடைபெற்றது அக் கலந்துரையாடலின் பின்னர் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிலையான ஒரு அபிவிருத்தியை நோக்கி சகல மக்களிடமும் சென்று அவர்களின் குறைகளை கேட்டறிந்து கொள்ளவதற்கான சில திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம். அதைத்தடுப்பதற்கும் சில குழுக்கள் இருக்கின்றன என்பதை நாம் அறிகின்றோம்.

எமது நாட்டை முன்னேற்றுவதற்கு முதற்கட்டமாக எமது நாட்டில் இருந்து ஏற்றுமதி செய்யக் கூடிய உற்பத்திகளை அதிகரிப்பதற்கு நாம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அந்தவகையில் வட பகுதி மீனவர்கள் நவீன மீன்பிடிக்கு அதாவது ஆழ்கடல் மீன்பிடிக்கு தயாராக வேண்டும்.

ஐரோப்பிய குழுவினர் எமது நாட்டுக்கு வருகைதந்து எமது மீன்பிடி பிரதேசங்களை பார்வையிட்டு சென்றிருந்தனர்.அவர்கள் தற்போது எமது நாட்டில் இருந்த மீன்பிடி ஏற்றுமதி தடையை நீக்கியுள்ளதாக அறிவித்துள்ளனர். இது எமக்கு மிகவும் சாதகமான விடயம் ஆகும்.

எனவே நாம் உற்பத்திகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளை துரிதப்படுத்த வேண்டும். அந்த வகையில் இலங்கையிலேயே பெரிய அளவிலான துறைமுகமாக பருத்தித்துறை துறைமுகம் இந்த வருடம் அமைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அத்துடன் காரைநகரில் படகு உற்பத்தி தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது. மாதகல், வளலாய், இன்பசிட்டி, தொண்டமானாறு ஆகிய பகுதிகளில் உ்ள்ள இறங்குதுறைகள் புனரமைப்பு செய்யப்படவுள்ளன.

இவ்வாறு தொடர்சியாக அபிவிருத்திகள் மேற்கொள்ளப்படவுள்ள நிலையில் எமதுகடற்றொழிலாளர் ஒத்துழைப்புடன் செயற்பட வேண்டும் எனஅவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## ப.நோ. கூ.சங்கத்தின் எதிர்கால வளர்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவது குறித்து நடைபெற்ற கலந்துரையாடல்



முல்லைத்தீவு கரைதுறைப்பற்று ப.நோ.கூ சங்கத்தின் எதிர்கால வளர்ச்சித்திட்டங்களை செயற்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் நண்பகல் 12 மணியளவில் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தலைவர் எஸ். மயூரன் தலைமையில் மேற்படி ப.நோ.கூட்டுறவு சங்கக் கட்டத்தில் நடைபெற்றது.

இக்கலந்துரையாடல் சங்க உறுப்பினர்களுக்கும் அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள் ஆகியோருக்கு இடையில் இடம்பெற்றது.

இதில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் வடக்கு மாகாணசபை உறுப்பினர்களான அன்ரனி ஜெகநாதன்,க.சிவநேசன், து.ரவிகரன் ஆகியோர் கலந்து கொண்டு தமது கருத்துக்களை முன்வைத்தனர்.

கடந்த காலங்களை போன்று இல்லாது ஜனநாயக முறையில் குழுத்தெரிவு இடம்பெற்று முதன்முறையாக இவ்வாறான நிகழ்வு இடம் பெற்றமை சிறப்பான அம்சமாகும். இதேவேளை ப.நோ.கூ.சங்கத்தின் கோட்பாட்டிற்கு இணங்கவே சங்க நடவடிக்கைகளையும் சிறப்பாக முன்னெடுத்து வருகின்றோம். இருந்தும் எமக்கு ஏராளமான பற்றாக்குறைகள் காணப்படுவதாக அரசாங்க அதிபரிடம் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து அரசாங்க அதிபர் உரையாற்றுகையில்,

கரை துறைப்பற்று ப.நோ. கூட்டுறவு சங்கத்திற்கு என்று மில்லாதவாறு குழுத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

இக்குழுவானது சிறந்த முறையில்மக்களுக்கு நற்பணிகளையாற்றி, வரும் எதிர்காலங்களிலும் இவ்வாறன பணிகள் சிறப்பான முறையில் முன்னெடுக்கப்படவேண்டும். இதற்கு இயன்றளவு உதவிகள் வழங்கப்படும் என்றார். வடக்கு மாகாண சபை உறுப்பினர் அன்ரனி ஜெகநாதன் சங்கத்தின் வளர்ச்சிக்கான பல ஆலோசனைகளை முன்வைத்தார்.

இதே போன்று து.ரவிகரன், க.சிவநேசன் ஆகியோரும் தமது கருத்துக்களை முன்வைத்தார். (2-301)

## வலம்புரி செய்தியை அடுத்து பொதுக்கட்டடம் திறக்கப்படவுள்ளது

வலம்புரிச் செய்தியை அடுத்து ஜனாதிபதியினால் தேர்தல் வாக்குறுதிகளில் கூறப்பட்டுள்ள நூறு நாள் வேலைத்திட்டத்தில் கிராமங்களில் அமைக்கப்பட்ட பொதுகட்டடங்கள் திறப்பதற்கான பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான செய்தி வலம்புரி பத்திரிகையில் **“கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் மக்கள் பாவனைக்கு கையளிக்கப்படவில்லை”** எனும் தலைப்பில் கடந்த மாதம் 25 ஆம் திகதி பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக வவுனியா நகர கிராம சேவையாளர் பிரிவில் உள்ள கற்குழி கிராமத்தில் நூறு நாள் வேலைத்திட்டத்தின் ஊடாக அமைக்கப்பட்ட பொதுக்கட்ட டம் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பொது மக்களின் பாவனைக்காக பொது அமைப்புக்களிடம் ஒப்படைக்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது தொடர்ந்து இவ்வாறான கட்டடங்கள் மக்களிடம் ஒப்படைக்கப்படுமென தெரிவிக்கப்படுகின்றது. (2-303)




## சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட நான்கு பேர் கைதாகினர்

### 6 டிப்பர் வாகனங்கள் நீதிமன்றில் ஒப்படைப்பு

கிளிநொச்சி மாவட்டம் கண்டாவளை பிரதேச செயலர் பிரிவிலுள்ள சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயப்பகுதியில் சட்டவிரோதமான முறையில் 6 டிப்பர் வாகனத்தில் மணல் ஏற்றிச் சென்றவர்களை தருமபுரம் பொலிஸார் மடக்கிப்பிடித்த போது 2 பேர் தப்பிச்சென்றதுடன் 4 சாரதிகள் 6 டிப்பருடன் கைதாகியுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கண்டாவளை பிரதேசத்தில் பல்வேறு பகுதிகளில் சட்டவிரோதமான முறையில் மணல், தோட்ட மண் என்பன பலகாலமாக நள்ளிரவு வேளைகளில் கனரக வாகனங்களுடன் வருவோரால் அள்ளி எடுக்கப்பட்டு யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்படுவதாக இப்பிரதேச மககள் கண்டாவளை பிரதேச செயலரிடமும் தருமபுரம் பொலிஸாரிடமும் முறையிடபபட்ட நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு சுண்டிக்குளம் பறவைகள் சரணாலயப்பகுதியில் டிப்பர் வாகனங்கள் முலம் மணல் கடத்தல் நடைபெறு வதாகப் பொலிஸாருக்கு இரகசியத் தகவல் கிடைக்கப்பட்டது.

இதனையடுத்து இடத்தை பொலிஸ்ார் சுற்றி வளைத்தபோது 2 சாரதிகள் தப்பிய நிலையில் 4 சாரதிகளும் 6 டிப்பர் வாகனங்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட வாகனங்கள் கிளிநொச்சி நீதிமன்றத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (2-254)

## சிற்றுண்டிச்சாலை குறைபாடுகளை நிவர்த்திக்க வைத்தியசாலை நிர்வாகம் முன்வரவேண்டும்

### நோயாளர்கள், பொதுமக்கள் வேண்டுகோள்


கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் இயங்கி வருகின்ற சிற்றுாண்டிச்சாலை நீண்ட காலமாக பல்வேறு குறைபாடுகளுடன் இயங்கி வருவதாக நோயாளர்கள், பொது மக்கள் ஆகியோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

வைத்தியசாலை விடுதிகளில் சிகிச்சைக்கென தங்க வைக்கப்பட்டுள்ள நோளர்கள் தமக்கான உணவுப்பொருட்களை பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்வதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக பல தடவைகள் சிற்றூண்டிச்சாலை உரிமையாளரிடம் முறையிட்ட போதிலும் இது வரையில் நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லையென நோயாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே வைத்தியசாலை நிர்வாகத்தினர் இதில் கவனமெடுத்து நோயாளர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை தவிர்ப்பதற்கு உதவ வேண்டுமென கோரிக்கை விடப்படுகின்றது. (2-307)




ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஒரு வருடஆட்சிக்கால நிறைவையொட்டி நாட்டின் பல்வேறு இடங்களிலும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் கடந்த வெள்ளிக்கிழமை முன்னெடு க்கப்பட்டிருந்தன. இதற்கமைய கரவெட்டி இராஜகிராமம் பகுதியில் கிராம அலுவலகர், சமுர்த்தி அலுவலகர், அபிவிருத்தி அலுவலகர் என்ற 3 சேவைகளை உள்ளடக்கிய கிராமிய செயலகம் ஒன்று திறந்து வைக்கப்பட்ட துடன் அவ்வளாகத்தில் பயன்தரு மரக்கன்றுகளும் நாட்டப்பட்டன. இந்நிகழ்வில் கரவெட்டி உதவிப்பிரதேச செயலர் எஸ்.ராஜீவ் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தார். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஒரு வருட பதவிக்கால பூர்த்தியை முன்னிட்டு யாழ். பிரதேச அபிவிருத்தி வங்கியினால் ஏற்பாடு செய்யப்பட்ட பயன்தரு மரநடுகை நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதன்போது வங்கியின் யாழ்.கிளை முகாமையாளர் க.இலட்சுமணசர்மா, உதவி முகாமையாளர் சோ.சுரேஸ், சுன்னாகம் கிளை உதவி முகாமையாளர் சு.சிவலோகன் ஆகியோர் மரக்கன்றுகளை நாட்டுவதை படங்களில் காணலாம். (படங்கள்:-நல்லூர் செய்தியாளர்)




ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான நல்லாட்சி அரசின் ஓராண்டு நிறைவையொட்டிய மரநடுகை தின நிகழ்வு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்லூரி அதிபர் எஸ்.கே.எழில்வேந்தன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் பாடசாலைச் சமூகத்தினர் கலந்து கொண்டனர்.




சொன்ட் நிறுவனத்தால் கரவெட்டி பிரதேச செயலகம் உத்தியோகத்தர்களுக்கு பயன்தரு கனி மரங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (படம்:- கரணவாய் செய்தியாளர்)

நிகழ்வின் நிழல்கள்



ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்று ஒருவருட பூர்த்தியை முன்னிட்டு நாடெங்கும் மரநடுகை நிகழ்வுகள் இடம்பெற்றன. இதன் ஒருபகுதியாக. நல்லூர், கல்வியங்காடு பகுதியில் கடந்த வெள்ளிக்கிழமை மரநடுகை நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வில் ஜே/113 திருநெல்வேலி வடகிழக்கு பகுதியின் கிராம உத்தியோகத்தர் ப.தர்சானந், திவிநெகும அபிவிருத்தி உத்தியோகத்தர் சு.சுகுமார் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பதவியேற்று ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு இடம்பெற்ற மரநடுகை நிகழ்வில் கலந்துகொண்டு மரங்களை நாட்டிய அங்கஜன் இராமநாதன் (நாடாளுமன்ற உறுப்பினர்) இளைஞர் அணியினர்.

# திக்கம் வடிசாலை மீளவும் இயங்க உதவிகளை பெற்றுத்தர கோரிக்கை

வடமராட்சிதிக்கம்வடிசாலை மீளவும் இயங்க உதவிகளைப் பெற்றுத் தருமாறும் இதற்கு மாகாண முதலமைச்சர் மற்றும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வட மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர் முன்வர வேண்டும் எனவும் திக்கம் வடிசாலை உற்பத்தியாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2 ஆயிரம் சீவல் தொழிலாளர்களது வாழ்வாதார தொழில்கள் அனைத்தும் திக்கம் வடிசாலையிலேயே தங்கியிருந்தது.

ஆரம்ப காலத்தில் வடமராட்சியில் உள்ள பனை வளத்தை நம்பி சீவல் தொழிலாளர்களது வாழ்வாதாரம் பாதிப்படைந்து விடக்கூடாது என்ற ஒரே நோக்கத்தில் மேற்படி உற்பத்திச்சாலை ஆரம்பிக்கப்பட்டது. கடந்த காலங்களில் வடமராட்சிப்பகுதியில் உள்ள பனை மரங்கள் சட்டவிரோதமாக அழிக்கப்பட்டு வந்தன. இதனால் பனைசார் உற்பத்தி வளங்களும் இல்லாமல் போனது.

இதனைக்கருத்தில் கொண்டே திக்கம்வடிசாலையானது பனை வளங்களைக் கொண்டு உற்பத்திகளைமேற்கொண்டுவந்தது. ஆனால் அரசியல் மாற்றம் காரணமாக திக்கம் வடிசாலையின் உற்பத்திகள் அனைத்தும் அண்மைக்கால மாக முடங்கிப் போயுள்ளது.

இதனால் உற்பத்தியாளர்கள் தற்போது வேலையின்றி இருப்பதுடன் வாழ்வாதார தொழிலும் மிகவும் மோசமடைந்த நிலையிலே காணப்படுகின்றது.

எனவே பொருளாதார ரீதியில் பாதிப்படைந்துள்ள தமக்கு பிரதேச செயலகங்களின் ஊடாக உதவிகளைப்பெற்றுத் தருமாறு வடமராட்சியில் உள்ள சீவில் தொழிலாளர்கள் கேட்டுள்ளனர். பனைவள உற்பத்திகள் மூலம் கூடிய சந்தை வாய்ப்பை பெற்றுக் கொண்ட தாம் தற்போது எந்தவொரு தொழில் வளமும் இன்றி இருப்பதாக அச்சீவல் தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதற்கு 2016 ஆம் ஆண்டிலாவது முழு முயற்சிகளை எடுத்து பாதிக்கப்பட்ட தமது வாழ்வாதாரத் தொழிலுக்கு உதவ வேண்டும் என திக்கம் வடிசாலை உற்பத்தியாளர்கள் வேண்டுகோளினை விடுத்துள்ளனர். (இ-5-60)

# உதவிச்செயலர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரல்

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நீதி அமைச்சின் நிறைவேற்றுச் சேவைகள் வகுதியின்III ஆம் தரத்தின் உதவிச் செயலாளர் (சட்டம்) பதவிகளில் நிலவுகின்ற 2 வெற்றிடங்களுக்காக தகுதியுடையவர்களைத் தெரிவு செய்துகொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுளஎன்.

21 வயதுக்குக் குறையாதவராக 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டமாணிப் பட்டமொன்றைப் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றத்தின் சட்டத்தரணி ஒருவராக இருத்தல்

செயலாளர், நீதி அமைச்சு, மீயுயர் நீதிமன்றக் கட்டடத் தொகுதி, கொழும்பு 12 என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 08 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களை கடந்த வெள்ளிக்கிழமை வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-7)

# மச்சங்களின் அதிர்ஷ்ட பலன்கள்



***நகங்களில்***

நகங்களின் அடிப்பாகத்தில் சதைக்கும் நகத்திற்கும் இடையே பாதி சந்திர பிறை போன்று வெளுப்பாக மச்சங்கள் இருக்கும். இவை சந்திர பிம்பங்கள் போல அவ்வப்பொழுது தோன்றி மறைந்து கொண்டு இருக்கும். இந்த மச்சங்களையொட்டி மச்சக்குறி சாஸ்த்திரத்தில் நன்மை, தீமைகள் கூறப்பட்டுள்ளன.

சிலர் நகத்திலுள்ள அந்த மச்சங்கள் நன்கு காட்சியளிக்கும் போது உடல் நலம் நன்குஇருக்குமென்றும்அவை மங்கலாகக் காணப்படும் போது உடல்நலம்கெடுமென்றும் பலன் கூறுவர்.மற்றும் சிலர், அவை நல்ல நிலையிலிருந்தால் உடல் வலிமை மிக்கவர்களாக இருப்பார்களென்றும் மங்கலாக இருந்தால் உடல் வலியற்றிருப்பார்களென்றும் கூறுவர்.

***மோவாய் கட்டில்***

பொதுவாக மோவாய்க்கட்டில் எங்காகிலும் மச்சம் உள்ளவர்கள் வாழ்க்கையில் சகல வசதிகளும் பெற்ற செல்வந்தர்களாக இருப்பார்கள். மக்களால் மதிக்கப்பெற்று பெரும் புகழுடன் வாழ்வார்கள்.

மோவாய்க்கட்டில் வலது புறம் மச்சம் இருந்தால், புகழ் மிகுந்தவனாகவும் செல்வச் சீமானாகவும் திகழ்வான்.

எடுத்தகாரியங்களை திறம்படச்செய்யும் செயலாளனாகவும் அறிவாளியாகவும் இருப்பான்.

மோவாய்க்கட்டில் இடது புறம் மச்சம் இருந்தால் மிகவும் தரித்திரனாகவும் மூடனாகவும் இருப்பான்.மற்றும் மூர்கனென்று பிறர்களால் இகழப் பெறுவான்.

மோவாய்க்கட்டின் நடுவில் மச்சம் இருந்தால் தரும நெறி தவறாதவன்.வீடு ,வாசல், நில புலன் முதலிய சகல வசதிகளுடன் இன்பமாக வாழ்வார்கள்.எடுத்த காரியத்தை திறமையாகச்செய்து முடிப்பார்கள்.

மோவாய்ப்பகுதிக்கு கீழே எங்கு மச்சம் இருந்தாலும் மிக்க அறிவாளியாகத் திகழ்வான்.சங்கீதத்திலும் இலக்கியங்களிலும் நல்ல தேர்ச்சி பெற்ற வித்துவான் என பாராட்டப்பெறுவான். நல்லபுகழ் பெறுவார்கள்.

மோவாய்க்கட்டில் எந்த இடத்தில் மச்சம் இருந்தாலும் நல்ல பலன்களே உண்டாகும் என்று கூறலாம். மோவாய்க்கட்டில் மச்சம் உடையவர்கள் ஏழையாக இருக்கமாட்டார்கள். மச்சத்தின் அளவு எவ்வளவு இருக்கிறதோ அந்த அளவிற்கு வாழ்க்கை வசதியுடையவர்களாக இருப்பார்கள். தங்களுடைய வசதிக்கேற்ப பிறருக்கு உதவியும் செய்வார்கள்.

***உதடுகளில்***

பொதுவாக உதட்டில் மச்சம்உள்ளவர்கள்பெண்ணாசை மிக்கவர்கவர்கள். மேல் உதட்டில் இருந்தாலும் சரி, கீழ் உதட்டில் மச்சம் இருந்தாலும் சரி இவர்கள் பிற பெண்களைப் பார்த்து ஆசைப்படாமல் இருக்க மாட்டார்கள். இவர்கள் இயற்கைக் காட்சிகளையும் கலைப் பொருட்களையும் விரும்புவார்கள். ஆனால் பெண்கள் விடயத்தில் இவர்களுக்கு எல்லாப் பெண்களும் அழகு மிக்கவர்களே.

மேல் உதட்டில் மச்சம் இருந்தால் அவர்கள் வாழ்க்கை வசதியுடையவர்களாகவும் ஆசை மிக்கவர்களாகவும் இருப்பார்கள்.

மேல் உதட்டின் உட் பக்கத்தில் மச்சம் இருந்தால் அவர்கள் சாஸ்திரங்களில் வல்லவர்களாகவும் இரகசியங்களை வெளியில் சொல்லாது காப்பாற்றுபவர்களாகவும் இருப்பார்கள்.

கீழ். உதட்டின் மேல் மச்சம் இருந்தால் அவர்கள் மிகவும் ஏழையாக இருப்பார்கள். மற்றவர்களால் பாராட்டப்படுகின்றவர்களாக இருந்தாலும் வறுமையில் வாழ்பவர்கள்.

கீழ் உதட்டின்மேல் உட்பாகத்தில் மச்சம் இருந்தால் அவர்கள் கெட்ட வழிகளில் பணம் சம்பாதிப்பார்கள். சிலர் பிறர்கொடுக்கும்தருமங்களை வாங்கி பிழைப்பவர்களாக இருப்பார்கள். சிலர் குடிப்பழக்கம் உடையவர்களாக இருப்பார்கள். பொதுவாக இவர்கள் தீய முறையில் வாழ்க்கை நடத்துவார்கள் என்று கூறலாம்.

# மாணிக்கக்கல் அகழ்ந்ததாக மூவர் பொலிஸாரால் கைது

சட்டவிரோத மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் பொகவந்தலாவ கெர்க்கஸ்வோல்ட் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்ட மூவரும் குறித்த பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என கூறப்படுகிறது.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன் போது அகழ்விற்கு பயன்படுத்திய பொருட்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (இ-7)

# உணவு பக்கெற் ஒன்றின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கிறது

வரவு செலவுத்திட்டத்தை அடுத்து உணவுப்பொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பேக்கரி உரிமையாளர்கள் தமது தயாரிப்புக்களின் விலைகளை அதிகரித்துள்ளனர்.

வரவுசெலவுத்திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வரி அதிகரிப்புக்களே இதற்கான காரணம் என்று அவர்கள குறிப்பிட்டுள்ளனர்.

இதனையடுத்து வாழ்க்கை செலவு அதிகரித்துள்ளது. வரவுசெலவுத்திட்ட யோசனையின்படி தேசிய நிர்மாணவரி 2வீதத்தில் இருந்து மேலும் 2வீதம் என்ற அடிப்படையில் 4 வீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்தவாரம் முதல் மதிய உணவு பக்கெற் ஒன்று 30 ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது. சிற்றுண்டிகளின் விலைகள் 5 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளன.

இதேவேளை இந்த விடயம் தொடர்பில் தாம் நிதியமைச்சருடன் பேச்சு நடத்தியுள்ளதாக தெரிவித்துள்ள பேக்கரி உரிமையாளர் சங்க தலைவர் என்.கே. ஜெயவர்த்தன நிவாரணத்தை பெற்றுக்கொடுக்க அமைச்சர் உறுதியளித்துள்ளதாக தெரிவித்தார்.

எனினும் நிவாரணம் தரப்படும்வரை பாவனையாளர்களுக்கு அதன் நன்மையை தரமுடியாமல் இருக்கும் என்றும் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார். (இ-7)

# அனுமதிப்பத்திர கட்டண நிபந்தனையால் பல நிறுவனங்கள் மூடப்படும் அபாயம்

இம்முறை வரவு - செலவுத் திட்டத்தில் நிறுவனங்களின் (கம்பனிகள்) வருடாந்த அனுமதிப்பத்திரத்துக்கு கட்டண அதிகரிப்பு விதிக்கப்பட்டிருப்பதால் ஏராளமான நிறுவனங்கள் தங்களது பதிவை இரத்து செய்யுமாறு கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்துக்கு விண்ணப்பங்களை அனுப்பி வைத்திருப்பதாகத் தெரியவருகின்றது.

திணைக்களத்தில் குவிந்திருக்கும் ஆயிரக்கணக்கான விண்ணப்பங்களை ஒவ்வொன்றாகப் பரிசீலனை செய்து சம்பந்தப்பட்ட நிறுவனங்களை மூடுவதற்கான அனுமதி வழங்கப்படுமென கம்பனிகள் பதிவாளர் நாயகம் சீ.என்.ஆர்.சிறிவர்தன தெரிவித்துள்ளார்.

இவ்வருட வரவு - செலவுத் திட்டத்தின்படி பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களுக்கான வருடாந்த அனுமதிக் கட்டணம் 5 இலட்சம் ரூபாவாகவும், பொது நிறுவனங்களின் கட்டணம் ஒரு இலட்சம் ரூபாவாகவும், தனியார் நிறுவனங்களுக்கான கட்டணம் 60 ஆயிரமாகவும், பதிவைப் புதுப்பிப்பதற்கான கட்டணம் 5 ஆயிரம் ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தின் தகவலறிந்த வட்டாரங்கள் தந்த விபரங்களின் அடிப்படையில் இலங்கையில் மொத்தமாக 70 ஆயிரத்துக்கும் அதிகமான நிறுவனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் வரவு - செலவுத் திட்டத்தின் பின் அந்த நிறுவனங்களில் பெருமளவானவை தமது பதிவுகளை இரத்து செய்யத் தீர்மானித்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

டிசெம்பர் 31ஆம் திகதி வரை ஆயிரக்கணக்கான விண்ணப்பங்கள் கிடைத்துளளதாகவும் அவற்றைத் தனித்தனியாகப் பரிசீலனை செய்த பின்னரே மொத்தமாக எத்தனை நிறுவனங்களின் பதிவுகள் இரத்து செய்யப்படுமென்பதை ஊர்ஜிதம் செய்ய முடியுமெனவும் பதிவாளர் நாயகம் சிறிவர்தன சுட்டிக்காட்டினார். (இ-7)

# அவுஸ்.விக்டோரியா மாநில சபாநாயகர் இலங்கைக்கு

அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாநில சபாநாயகர் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளார்.

விக்டோரியா மாநிலத்தின் சபாநாயகர் டெல்மோ லென்கியூலர் மற்றும் அவரது பாரியார் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர். இலங்கை நாடாளுமன்றிற்கு அவர்கள் விஜயம் செய்துள்ளனர்.

இலங்கை நாடாளுமன்றின் சாபாநயகர் கரு ஜயசூரிய, பிரதி சபாநாயகர் திலங்க சுமதிபால ஆகியோர் விக்டோரியாவின் சபாநாயகரை வரவேற்றுள்ளனர். நேற்று முன்தினம் மாலை நாடாளுமன்ற வளாகத்தில் இரு தரப்புக்கும் இடையில் சந்திப்பு நடத்தப்பட்டுள்ளது.

இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்திக் கொள்வது குறித்து இந்த சந்திப்பின் போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. லென்கியூலர் நாடாளுமன்றை சுற்றிப் பார்வையிட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய பதன்கோட் விமானப்படை தளத்தை பிரதமர் பார்வையிட்டார்

## பாதுகாப்பு பற்றி ஆலோசனை





பஞ்சாப் மாநிலம் பதன் கோட் விமானப்படை தளத்துக்குள் கடந்த சனிக்கிழமை 6 பாகிஸ்தான் தீவிரவாதிகள் ஊடுருவி தாக்குதல் நடத்தினார்கள். 4 நாட்கள் நடந்த கடும் துப்பாக்கி சண்டைக்கு பிறகு 6 தீவிரவாதிகளும் சுட்டு வீழ்த்தப்பட்டனர். பாதுகாப்பு படை தரப்பில் 7 வீரர்கள் உயிரிழந்தனர். பதன்கோட் விமானப் படை தளம் தாக்கபட்ட விவகாரத்தில் தீவிரவாதிகளுக்கு உள்ளூர்வாசிகள் உதவிகள் செய்து இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது. இது பற்றி தேசிய விசாரணைக் குழுவினர், உளவுத் துறையினர் மற்றும் உள்ளூர் பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள.

மத்திய பாதுகாப்பு அமைச்சர் மனோகர் பரிக்கர் கடந்த 5 ஆம் திகதி பதன்கோட் விமானப்படை தளத்துக்கு சென்று ஆய்வு செய்தார். அப்போது அவர், இராணுவம், தேசிய பாதுகாப்பு படை மற்றும் விமானப் படை வீரர்களை சந்தித்து பாராட்டு தெரிவித்தார்.

இந்த நிலையில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் முற்பகல் 11.20 மணிக்கு டில்லியில் இருந்து பதன்கோட்டுக்கு வந்தார். அவரை விமானப்படை உயர் அதிகாரிகள் வரவேற்றனர்.

பின்னர் பிரதமர் நரேந்திர மோடி ஏர்- கமாண்டர் தாமூனிடம் தீவிரவாதிகள் தாக்குதல் பற்றி கேட்டறிந்தார். இதைத் தொடர்ந்து பதன்கோட் விமானப் படை தளத்துக்குள் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்திய இடங்களுக்கு மோடி சென்று பார்வையிட்டார்.

தீவிரவாதிகளுக்கு பதிலடி கொடுக்கப்பட்ட விதம் பற்றி மோடிக்கு விமானப்படை உயர் அதிகாரிகள் விளக்கி கூறினார்கள். பிறகு நடந்த தேடுதல் வேட்டை தகவல்களையும் மோடியிடம் தெரிவித்தனர்.

தீவிரவாதிகளின் தாக்குதலில் 10இற்கும் மேற்பட்ட பாதுகாப்பு படை வீரர்கள் காயம அடைந்து இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். அவர்களையும் பிரதமர் மோடி சந்தித்து ஆறுதல் கூறினார்.

விமானப்படை தளத்தின் பாதுகாப்பு குறித்து ஆலோசனை நடத்தினார். பதன்கோட் விமான படை தளத்தின் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு எதிர்வரும் காலங்களில் செய்ய வேண்டிய பாதுகாப்பு முன் ஏற்பாடுகள் பற்றியும் அவர் விவாதித்தார்.

இதையடுத்து இந்தியா-பாகிஸ்தான் எல்லைப் பகுதிக்கு விமானத்தில் பறந்து சென்று மோடி பார்வையிட்டார். இராணுவ வீரர்கள் மத்தியிலும அவர் உரையாற்றினார்.

பிரதமர் மோடி வருகையை முன்னிட்டு பதன்கோட் விமானப் படை தளத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தன. பதன்கோட், குர்தாஸ்பூர் நகரங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

பதன்கோட் நகரில் மட்டும சுமார் 2 ஆயிரம் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர். (இ-7)

பாரதச் செய்தி

### பதன்கோட் தாக்குதல் சம்பவம்

# உடலில் 6 தோட்டாக்கள் துளைத்த போதும் தீவிரவாதிகளை எதிர்த்து போராடிய வீரர்



பதன்கோட் தாக்குதலின் போது உடலில் 6 குண்டு கள் பாய்ந்தும் தீவிரவாதி களை முன்னேறவிடாமல் தடுத்த இராணுவ வீரர் ஒருவர தற்போது வைத்தியசாலையில் உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி யுள்ளது.

பஞ்சாப் மாநிலம் பதன் கோட்டில் உள்ள விமான தளத்திற்குள் ஊடுருவிய பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்கு தலில் பாதுகாப்பு படையைச் சேர்ந்த 7 பேர் பலியாகினர்.

சுமார் 80 மணி நேரம் தொடர்ந்த இந்த தாக்குத லில் தீவிரவா திகள் அனை வரும் சுட்டுக் கொல்லப்பட்ட னர்.

எனினும் தீவிரவாதிகளுக்கு எதிராக துணிச்சலுடன போரிட்ட இராணுவ வீரர் ஒருவர் உயிருக்கு ஆபத்தான நிலையில் வைத்தயசாலையில் சிகிச்சை பெற்று வருவது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தீவிரவாதிகள் விமானப் படை தளத்திற்குள் நுழைந்தவுடன் அவர்களை தடுபபதற்காக அதிகாலை 3 மணிகது கருடா கமாண்டோ பிரிவைச் சேர்ந்த 12 வீரர்கள் களத் தல் இறங்கியுள்ளனர். அப போது சைலேஷ மற்றும் அவரது சக வீரர் கட்டல் இருவரும் தீவிரவாதிகள் மேற்கொண்டு முன்னேறவிடாமல் தடுத்து நிறுத்தினர்.

இந்த தாக்குதலில் போது சைலேஷின் உடலில் 6 குண்டுகள் பாய்ந்தன. எனினும் அவர் தீவிரவாதிகளுக்கு எதிராக தொடர்ந்து தாக்குதல் நடத்தினார். (இ-7)

# 6 நிமிடங்களுக்கு பானை மீது நடனமாடி கின்னஸ் சாதனை படைத்த மாணவிகள்

சேலத்தை சேர்ந்த பாடசாலை மாணவிகள் 483 பேர் ஒரே நேரத்தில் பானை மீது நடனமாடி கின்னஸ் சாதனை படைத்துள்ளனர்.

சேலத்தில் உள்ள குளூனி மெட்ரிக்குலேசன் பாடசாலையின் 55 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டும், பொங்கல் பண்டிகையை முன்னிட்டும் நடன நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில், 483 மாணவிகள் கலந்து கொண்டு சுமார் 6 நிமிடங்களுக்கு பானையின் மீது பரதநாட்டிய நடனமாடி கின்னஸ்சாதனை படைத்தனர்.

நடனத்தில் பங்கேற்ற மாணவிகள் அனைவரும் 2 முதல் 11ஆவது வகுப்புவரை படிக்கும் மாணவிகளாவர். இதற்காக அவர்கள் 3 மாதங்களாக பயிற்சி எடுத்து வந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.



இந்தகின்னஸ்சாதனையை லண்டன் எலைட் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் (யு.கே) பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் இந்திய அட்ஜுடிகேட்டர் கார்த்திகேயன் ஜவஹர் மற்றும் சிங்கப்பூர் ஏசியன் ரெக்கார்ட்ஸ் அகடமி நிறுவனத்தின் இந்திய ஆய்வு அதிகாரி அட்ஜுடிகேட்டர் டாக்டர் செந்தில்குமார், அட்ஜுடி கேடடர் பேராசிரியர் இர்பான் அகமது, மும்பை இந்தியன் ரெக்கார்ட்ஸ் அகடமியின் மேலாளர் ஜெகநாதன், தமிழன் புக் ஆப் ரெக்கார்ட்ஸ் நிறுவனத்தின் ஆய்வாளர் ராஜ் கிருஷ்ணா ஆகியோர் நேரில பார்த்து ஆய்வு செய்தனர்.

இதையடுத்து மிக அதிக நபர்கள் ஒரே நேரத்தில் பானை மீது நடனமாடிய நிகழ்வு என்னும் கின்னஸ் உலக சாதனையாக அறிவித்தனர். (இ-7)

# வடகொரிய அச்சுறுத்தலுக்கு பேச்சுவார்த்தைதான் தீர்வு!

## த ஹிந்து சுட்டிக்காட்டு

அணுகுண்டைவிட அதி சக்தி வாய்ந்ததாகக் கருதப் படும் ஐதரசன் குண்டு சோதனையை நடத்தியிருப்பதன் மூலம், கிழக்காசியாவில் பதற்றமான சூழலை உருவாக்கியிருக்கிறது வட கொரியா. இந்நடவடிக்கை மன்னிக்கவே முடியாத, ஆத்திரமூட்டும் செயல் என்று தென் கொரியா கூறியிருக்கிறது. இரு நாடுகளுக்கும் இடையில் தொடர்புகளை ஏற்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் தென் கொரியா இரத்து செய்திருக்கிறது. வட கொரியாவின் செயல் தேசியப் பாதுகாப்புக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல் என்று ஜப்பான் கண்டித்திருக்கிறது. அமெரிக்கா, ரஷ்யா போன்ற வல்லரசு நாடுகளுடன் சீனாவும் வட கொரியாவைக் கண்டித்திருப்பது கவனிக்கத்தக்கது என இந்தியாவின் முன்னணி நாளிதழான த ஹிந்து தனது ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக்காட்டியுள்ளது.

வட கொரியா மீது மேலும் அதிகப் பொருளாதாரத் தடை நடவடிக்கைகளை ஐ.நா. பாதுகாப்பு ஆணையம் எடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கிம் ஜோங் உன்னின் அதிரடியான, மூர்க்கத்தனமான நடவடிக்கைகள் எல்லோருக்கும் நன்கு பரிச்சயம்தான். எல்லாவற்றையும் தாண்டி, இந்த முறை அவர் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைக்கு என்ன காரணம் என்ற கேள்வி அநேகமாக எல்லா நாடுகளுக்கும் எழுந்திருக்கிறது.

வட கொரியாவுக்குள் தனது செல்வாக்கை மேலும் அதிகரித்துக் கொள்வது அவரது நோக்கமாக இருக்கலாம். கடந்த சில ஆண்டுகளாக, ஆட்சிக்கு எதிராகச் சதி செய்ததாகக் குற்றம்சாட்டப்பட்டு பலருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதைப் பார்க்கும்போது, அவரது ஆட்சிக்கு எதிரான அதிருப்திக் குரல்கள் வட கொரியாவுக்குள் எழுந்திருக்கக்கூடும் என்ற கருத்து வலுப்பெறுகிறது.

அத்துடன், அண்மையில் ஈரானுடன் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் செய்து கொண்ட அணுசக்தி ஒப்பந்தத்தைப் போல், வட கொரியாவுடனும் மற்ற நாடுகளைப் பேச்சுவார்த்தைக்கு வரவழைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் இந்நடவடிக்கையில் அவர் இறங்கியிருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. வட கொரியாவின் அணு ஆயுத பலத்துக்குச் சர்வதேச அங்கீகாரம் கிடைக்கலாம் என்றும் அதன் மூலம் பொருளாதாரக் கூட்டுறவுகள் ஏற்படலாம் என்றும் அவர் எதிர்பார்த்திருக்கக்கூடும்.

இந்நிலையில், வட கொரியாவைப் பேச்சுவார்த்தையின் பக்கம் இழுத்துவரக் கூடிய ஒரே நாடான சீனா, அதற்கான முயற்சிகளில் இறங்க வேண்டும். அமெரிக்க அரசும் இதைத்தான் விரும்புகிறது. 2009 இல் கைவிடப்பட்ட 'ஆறு நாடுகள் (சீனா, ஜப்பான், தென் கொரியா, வட கொரியா, ரஷ்யா மற்றும் அமெரிக்கா) பேச்சுவார்த்தை' மீண்டும் தொடங்க வேண்டும் என்று அமெரிக்க அரசு கூறியிருக்கிறது. எனினும், வட கொரியாவைப் பேச்சுவார்த்தைக்கு இணங்க வைப்பது என்பது சீனாவுக்குக்கடினமான விடயம். வரலாற்று ரீதியான நட்பு இரு நாடுகளுக்கும் இடையில் இருந்தாலும், சீனாவிடமிருந்து விலகிச் செல்லவே கிம் ஜோங் உன் கருதுகிறார்.

இரண்டாம் உலகப் போர் தொடர்பான நினைவு நிகழ்ச்சியில் கலந்துகொள்ள கடந்த செப்டெம்பர் மாதம், சீன ஜனாதிபதி ஜீ ஜின்பிங் விடுத்த அழைப்பை கிம் ஜோங் உன் புறக்கணித்தது நினைவிருக்கும். ஜனாதிபதி பொறுப பேற்று நான்கு ஆண்டுகள் ஆகியும் இதுவரை அவர் சீனாவுக்குச் சென்றதில்லை.

கிம் ஜோங் உன்னின் பொறுப்பற்ற நடவடிக்கைகளையும் தாண்டி வட கொரியாவுடன் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவதுதான் உலக நாடுகளுக்கு இப்போது இருக்கும் ஒரேவழி. ஈரானுடனான அணுசக்தி ஒப்பந்த விடயத்தில் அந்நாட்டுக்கு ஒத்துழைப்பு தந்த ரஷ்யாவைப் போல், வட கொரியாவுடனான பேச்சுவார்த்தைக்கான முயற்சிகளை எடுக்க வேண்டிய பொறுப்பு சீனாவிடம் இருக்கிறது. அது வரலாற்றுப் பொறுப்பு என்பதை அந்நாடு உணர வேண்டும் என்று ஆசிரியர் தலையங்கத்தில் மேலும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-7)

# 3 குழந்தைகள் உயிரிழப்பு

வடகிழக்கு டில்லியில் உள்ள குடிசைப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட தீ விபத்தில் 6 மாத குழந்தை உட்பட மூன்று குழந்தைகள் உயிரிழந்தனர். மேலும் ஒரு குழந்தை தீக்காயத் துடன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றது.

வடகிழக்கு டில்லியின் உஸ்மான்பூர் பகுதியில் உள்ள குடிசைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணிக்கு தீ விபத்து ஏற்பட்டது. ஒரு குடிசையில் மின் கசிவால் ஏற்பட்ட இந்த தீ விபத்தில், மூன்று சமையல் எரிவாயு உருளைகள் வெடித்து சிதறியதால் தீ அருகிலிருந்து குடிசைகளுக்கும் பரவியது.

இந்த விபத்தில் கல்லுராம் என்பவரின் குடிசையில் இருந்த அவரது மகள்கள் ரீனா (10), மீனா (7) மற்றும் அவரது 6 மாத மகன் முபாரக் ஆகியோர் படுகாயமடைந்து அங்கேயே உயிரிழந்தனர்.

மேலும் அருகியிலிருந்த குடிசை வீட்டில் இருந்த அல்லாராக்கா என்பவரது மகன் ஷாகுத்தீன் என்பவர் 60 சத தீக்காயங்களுடன் அருகிலுள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இக் குழந்தைகளை காப்பாற்ற முயன்ற அல்லாரக்காவுக்கும் தீக்காயங்கள் ஏற்பட்டன. (இ-7)

# சிரியாவில் அல்-கொய்தா சிறை மீது ரஷ்யா வான்வழித் தாக்குதல்!

## 57 பேர் உயிரிழப்பு

(பெய்ரூட்)

**சிரியாவில் அல்-கொய்தா சிறை யில் ரஷ்யா நடத்திய வான்வழித் தாக்குதலில் 57 பேர் பலியாகினர் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.**



சிரியாவின் வடமேற்கு இட்லிப் மாகாணத்தில் பரபரப்பான சந்தைப்பகுதி அருகேயுள்ள அல்-கொய்தா தீவிரவாத அமைப்பின் சிரிய நாட்டு கிளையான அல்-நுஸ்ரா முன்னணி சிறையின் மீது நேற்று முன்தினம் ரஷ்யா வான்வழித் தாக்குதல் நடத்தியது.

இத்தாக்குதலில் 21 பொது மக்கள், 29 தீவிரவாதிகள் மற்றும் 7 கைதிகள் பலியாகினர் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது. மாரத் அல்-நுமானில் ரஷ்யா தாக்குதல் நடத்திய கட்டடத்தில் தீவிரவாதிகள் நீதிமன்றம் மற்றும் சிறை இருந்துள்ளது.

ரஷ்யா நடத்திய தாக்குதலில் பலர் காயம் அடைந்து உள்ளனர் என்றும் அவர்களில் பலரது நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

சிரியாவில் கடந்த வருடம் செப்டெம்பர் 30 ஆம் திகதியில் இருந்து ரஷ்யா ஐ.எஸ். தீவிரவாதிகள் மற்றும் பிற தீவிரவாத இயக்கங்கள் மீது வான்வழித்தாக்குதல் நடத்தி வருகிறது. சிரியாவில் ரஷ்யாவின் ஆக்ரோஷம் தீவிரவாதிகளை நிலைகுலைய செய்யும்விதமாக உள்ளது. சிரியாவில் அல்-நுஸ்ரா மற்றும் ஐ.எஸ். இரண்டு தீவிரவாத இயக்கங்களும் ஒன்றுக்கு ஒன்று கடுமையான எதிரானது. இந்த இயக்கங்கள் இடையேயும் சிரியாவில் சண்டை தொடர்ந்து நடக்கிறது.

அல்-நுஸ்ரா தீவிரவாத இயக்கம், ஜிகாதிகள் அல்லாது சிரியாவில் அரசுக்கு எதிராக் போராடும் கிளர்ச்சியாளர்களுடன் தொடர்பு கொண்டுள்ளது. அல்-நுஸ்ரா தீவிரவாத இயக்கம், ஐ.எஸ். தீவிரவாதத்திற்கு முற்றிலும் எதிரானது.

சிரியாவில் கடந்த 2011 ஆம் ஆண்டு அரசுக்கு எதிரான போராட்டம் முற்றிய போது முதல் மோதல் வெடித்தது, இதனையடுத்து போரானது தொடர்ந்து நடைபெற்று வருகிறது. போரில் சுமார் 260,000 மேலானோர் உயிரிழந்துள்ளனர். (இ-7)




## 2,500 தொழிற்சாலைகள் சீனாவில் மூடப்படவுள்ளன

(ஷாங்காய்)

சீனாவில் தொழிற்சாலைகளில் இருந்து வெளியாகும் கரும்புகையால் காற்றில் மாசு ஏற்பட்டுள்ளது. தலைநகர் பீஜிங், ஷங்காய் உள்ளிட்ட பல பெரிய நகரங்களில் புகை மூட்டம் காணப்படுகிறது.

வீதியில் நடமாட முடியாததால் பொதுமக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப்படுகிறது. பாடசாலைகள் மூடப்படுகின்றன. இதுபோன்ற சம்பவங்களை தடுக்க மாசு ஏற்படுத்தும் தொழிற்சாலைகளை மூட சீன அரசு முடிவு செய்தது.

அதைத்தொடர்ந்து அதிக அளவு நச்சுப்புகையை வெளியேற்றும்தொழிற்சாலைகளை கணக்கிடும் பணி நடந்தது. அதில் தலைநகர் பீஜிங், ஷங்காய் ஆகிய நகரங்களை சுற்றியுள்ள 4 மாவட்டங்களில் உள்ள தொழிற்சாலைகளில் இருந்து அதிக அளவு புகை வெளியேறுவது தெரிய வந்தது.

அதைத்தொடர்ந்து இந்த குளிர்காலத்தில் 2500 தொழிற்சாலைகளை மூட சீனா முடிவு செய்துள்ளது. அடுத்த ஆண்டு இதைவிட கூடுதலான தொழிற்சாலைகள் மூடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# இந்தியாவில் முக்கிய நகரங்களில் குண்டு வெடிப்பை நடத்துவோம்

## பாக்.தீவிரவாதிகள் மிரட்டல்

(புதுடில்லி)

இந்தியாவில்குண்டுவெடிபுகளை நடத்தி அமைதியை சீர்குலைக்க வேண்டும் என்பதற்காகவே பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்ஐ.. ஜெயஷ் - இ-முகம்மது என்ற தீவிரவாத இயக்கத்தை தோற்றுவித்துள்ளது.

மவுலானா மசூத் அசார் என்பவன் தலைமையில் செயற்பட்டு வரும் இந்த தீவிரவாத இயக்கத்துக்கு பாகிஸ்தானில் பகவால்பூர் என்ற இடத்தில் 5 ஏக்கர் பரப்பளவில பயிற்சி மையம் உள்ளது.

ஐ.எஸ்.ஐ.எஸ். உத்தரவின் பேரில் செயற்படும் இந்த தீவிரவாத அமைப்பு கடந்த சில ஆண்டுகளாக பெரிய தாக்குதல் எதிலும் ஈடுபடாமல் இருந்தது. மத்தியில் பா.ஜ.க. அரசு அமைந்த பிறகு இந்த தீவிரவாதிகள், இந்தியாவில் அதிக தாக்குதல் நடத்த வேண்டும் என்று வெறி பிடித்தவர்கள் போல மாறியுள்ளனர். ஜெயஷ்-இ-முகம்மது தீவிரவாதிகளின் தொலைபேசி எண்களை கண்டு பிடித்துள்ள இந்திய உளவுத்துறையினர், அவர்களது தொலைபேசி உரையாடல்களை பதிவு செய்து கேட்டு வருகிறார்கள்.

பதன்கோட் விமானப் படை தளத்தை தகர்க்க தீவிரவாதிகள் திட்டமிட்டுள்ள தகவலை இத்தகைய உரையாடல் மூலம் தான் மத்திய உளவுத்துறை கண்டு பிடித்து உஷார்படுத்தியது. இந்த நிலையில் ஜெயஷ் - இ-முகம்மது தீவிரவாதிகள் இந்தியாவில் மேலும் தாக்குதல்கள் நடத்த சதத் திட்டம் தீட்டி இருப்பது தெரிய வந்துள்ளது. அந்த இயக்கத்தின் மூத்த தலைவன் ஒருவன் ஐ.எஸ்.ஐ.எஸ். அதிகாரி ஒருவரிடம் பேசும் தொலைபேசி உரையாடலை மத்திய உளவுத்துறை கேட்டது.

அந்த உரையாடலில் தீவிரவாதிகளின் தலைவன் கூறியிருப்பதாவது,

இந்தியாவில் அப்சல் குருவை 13 ஆண்டுகள் சிறையில் வைத்திருந்தனர். அதற்கு பழிக்கு பழி வாங்கும் வகையில் இந்தியாவின் முக்கிய நகரங்களில் 13 இடங்களில் தொடர் குண்டு வெடிப்புகளை நடத்த திட்டமிட்டுள்ளோம்.

ஜெயஷ் - இ - முகம்மது இயக்கத்துக்கு புதிய இளைஞர்கள் ஏராளமாக வந்துள்ளனர். அவர்கள் மூலம் இந்தியாவில் புதிய தாக்குதல்களை நடத்த முடியும். இதற்காக எல்லா திசைகளில் இருந்தும் நம்ப முடியாத அளவுக்கு ஆதரவு கிடைத்துள்ளது.

நமது இயக்கத்தின் தற்கொலைப்படை பிரிவில் பெண்களும் இடம்பெற்றுள்ளனர். அவர்கள் மூலம் நமது திட்டம் மிக எளிதாக நிறைவேற்றப்படும்.

இந்தியாவில் தாக்குதல் நடத்துவதற்காகவே நமது இயக்கத்தில் 300 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். அவர்களில் சிலர் ஏற்கனவே இந்தியாவுக்குள் அனுப்பப்பட்டு விட்டனர். தாக்குதல் நடத்துவதற்காக அவர்கள் நமது உத்தரவை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கின்றனர்.

நாங்கள் இங்கு எந்த செயலும் செய்யாமல் சும்மா இருக்க முடியாது. இந்தியாவிடம் இருந்து பாகிஸ்தானை பிரிக்க வேண்டும். எப்பாடு பட்டாவது இந்தியாவை பிரிக்க வேண்டும். காஷ்மீரை நம்முடன் சேர்ப்பதை இப்போதே செய்து முடிக்க வேண்டும்.

இவ்வாறு அந்த தொலைபேசி உரையாடலில் கூறப்பட்டுள்ளது. இந்த உரையாடல்களில் இடம்பெற்றிருப்பது, மசூத் அசாரின் தம்பி அப்துல் ரவூப் குரல் என்று தெரிய வந்துள்ளது. (இ-7)

# ஈராக்கில் ஒரே நாளில் 80 பேரைசுட்டுக்கொன்று மரண தண்டனை நிறைவேற்றிய தீவிரவாதிகள்



(பக்தாத்)

வடஈராக்கின் நிவ்னே மாகாணத்திலுள்ள மொசூல் நகரில் நேற்று முன்தினம் ஒரேநாளில் 80 பேரை சுட்டுக் கொன்று ஐ.எஸ். தீவிரவாதிகள் மரண தண்டனை நிறைவேற்றியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

ஐ.எஸ். தீவிரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கஸ்லானி இராணுவ முகாம் அருகே நேற்று முன்தினம் (சனிக்கிழமை) பிற்பகல் 80 பேரையும் வரிசையாக முழங்காலிட்டு அமரவைத்து, பின்பக்கம் துப்பாக்கிகளுடன் நின்றிருந்த தீவிரவாதிகள் அவர்களின் தலையில் சுட்டுக் கொன்றதாக உள்ளூர் ஊடகமான சுமைரா தொலைக் காட்சிசெய்தி வெளியிட்டுள்ளது.

கொல்லப்பட்டவர்கள் அனைவரும் அரசு மற்றும் இராணுவத்தின் இரகசிய உளவாளிகளாக செயற்பட்டதாக சந்தேகித்து, அண்மையில் ஐ.எஸ் தீவிரவாதிகளால் கைது செய்யப்பட்டவர்கள் என்றும் அந்த செய்தி சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

## பதன்கோட் தாக்குதல் தொடர்பில் பாகிஸ்தான் விசாரணை நடத்தும்

(வோஷிங்டன்)

பஞ்சாப் மாநிலத்தில் உள்ள பதன்கோட் விமானப் படை தளத்தில் புகுந்து பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தனர். அதில் 7 இராணுவ வீரர்கள் உயிரிழந்தனர். தாக்குதலில் ஈடுபட்ட தீவிரவாதிகள் அனைவரும் சுட்டுக கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலுக்கு அமெரிக்கா கடும் கண்டனம் தெரிவித்தது. மேலும் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்தியது. அதை தொடர்ந்து இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தப்படும் என பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் செரீப் அறிவித்துள்ளார்.

இதற்கிடையே, பாகிஸ்தானுக்கு அமெரிக்க அரசுத்துறை கண்டிப்புடன் கூடிய தகவல் அனுப்பிஉள்ளது. அதில் பதன்கோட் விமான நிலையத்தில் தாக்குதல் நடத்திய தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். தீவிரவாதிகளுக்கு சாதகமாக செயற்படக் கூடாது.

ஏற்கனவே அளித்த வாக்குறுதிப்படிவிரைவாகநடவடிக்கை எடுத்து தாக்குதலில் ஈடுபட்டவர்களை சட்டத்தின் முன்பு நிறுத்தி தண்டனை வழங்க வேண்டும் என அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது. (இ-7)

# விண்ணப்பங்கள் கோரல்

விளையாட்டு அமைச்சின் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனத்தினால் சிங்கள மொழி மூலம் நடத்தப்படும் விளையாட்டு விஞ்ஞான டிப்ளோமா பாடநெறியினைப் பயிலுவதற்கான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்விப் பொதுத் தராதரப்பத்திர சாதாரண தரப் பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மொழி என்பனவற்றுடன் கணிதம் /எண் கணிதம் ஆகிய பாடங்கள் உள்ளடங்கலாக இரு அமர்வுகளுக்கு மேற்படாது 6 பாடங்களில் சித்தியடைந்திருப்பதுடன் அவற்றில் 3 பாடங்களில் திறமைச் சித்திகளைப் பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் விளையாட்டு அமைச்சினால் நடத்தப்படும் தேசிய விளையாட்டுப் பெருவிழாவின் மாவட்ட மட்டப் போட்டியொன்றில் முதலாம் அல்லது இரண்டாம் இடத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

திகதியில் 18 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (அரச சேவையில் பணியாற்றுவோரின் வயது 45 வருடங்களை விட மேற்படாது இருத்தல் வேண்டும்.)

பணிப்பாளர் தேசிய விளையாட்டு விஞ்ஞான நிறுவனம், இல. 100/7, சுதந்திர மாவத்தை, கொழும்பு -07 என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 08 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களை கடந்த வெள்ளிக்கிழமை வெளி யான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-7)

---

இலங்கை நூலகச் சங்க நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம் I இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக இலங்கை நூலகச் சங்க யாழ்.நிலைய ஒருங்கிணைப்பாளர் கலாநிதி.திருமதி கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார்.

மேற்படி கற்கைநெறியானது யாழ்ப்பாணம் உட்பட நாடளாவிய ரீதியில் 6 நிலையங்களில் நடத்தப்படவுள்ளது.

இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிப்போர் க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் இரண்டிற்கு மேற்படாத தடவைகளில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் என்பதுடன் மொழியில் திறமைச் சித்தியும் கணிதம் அல்லது தூயகணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன் க.பொ.த. உயர் தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

தமிழ் மொழிமூலம் நடைபெறவுள்ள இக்கற்கை நெறிக் கட்டணமாக 16 ஆயிரம் ரூபா அறவிடப்படும்.

கற்கை நெறி தொடர்பான விபரங்களையும் விண்ணப்பப் படிவங்களையும் இலங்கை நூலகச் சங்கத்தில் அல்லது யாழ்ப்பாண நிலைய ஒருங்கிணைப்பாளர் கலாநிதி திருமதி கல்பனா சந்திரசேகரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும். விண்ணப்பப்படிவங்களை நாளை 12 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும் எனவும் அறிவிக்கப்பட் டுள்ளது. (இ-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 110 | 140 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 80 | 60 | 55 | 70 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 400 | 250 | 230 | 300 | 350 | 300 |
| தக்காளி | 80 | 60 | 50 | 70 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 30 | 50 | 40 | 40 |
| கோவா | 100 | 100 | 80 | 150 | 120 | 100 |
| கரட் | 180 | 180 | 180 | 180-300 | 300 | 250 |
| பூசணி | 50 | 35 | 35 | 60 | 60 | 50 |
| புடோல் | 80 | 60 | 50 | 60 | 120 | 80 |
| வாழைக்காய் | 80 | 60 | 50 | 50 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 130 | 110-140 | 110 | 120 | 160 | 120 |
| பெரிய வெங்காயம் | 70 | 100 | 65 | 100 | 100 | 80 |
| பாகற்காய் | 160 | 120 | 150 | 200 | 300 | 250 |
| வெண்டிக்காய் | 180 | 140 | 80 | 120 | 160 | 160 |
| கருணைக் கிழங்கு | 80 | 80 | 70 | 80 | 100 | 70 |
| பயற்றங்காய் | 200 | 200 | 150 | 200 | 200 | 250 |
| லீக்ஸ் | 150 | 100 | 100 | 120 | 120 | 150 |
| பீற்றூட் | 160 | — | — | — | — | — |
| கறிமிளகாய் | 300 | — | 220 | 300 | 400 | 400 |
| முருங்கைக்காய் | — | — | — | — | — | — |
| போஞ்சி | 250 | 250 | — | 240 | 200 | 250 |
| கத்தரிதம்புள்ள | 120 | 60 | 100 | — | 120 | — |
| கீரை - 1 பிடி | 40 | 50 | 30 | 40 | 50 | 40 |
| தேசிக்காய் | 100 | 100 | 65 | 120 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 30-40 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 160 | 150 | 100 | 160 | 160 | 250 |
| வெங்காயப்பூ | 200 | 200 | — | 240 | — | 300 |
| முள்ளங்கி | 60 | 60 | 40 | 80 | 120 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 10 | 30 | 20 | 40 |
| வல்லாரை | 10 | 30 | 20 | 10 | 20 | 20 |
| ஈரப்பலா | 40 | 50 | 40 | — | 80 | 80 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## பிரபாகரன் காதல் திருமணம் 76

விமர்சனம்

இலங்கை அரசின் கொள்கைகளைப் பற்றியோ, அதன் நடவடிக்கைகள் பற்றியோ அங்குள்ள அரசியல்வாதிகளைப் பற்றியோ நாங்கள் பேசாமல் இருக்கும்போது அதற்கு மாறாக இந்திய அரசைப் பற்றியும் மாநில அரசைப் பற்றியும் இந்திய அரசியல்வாதிகளைப் பற்றியும் விமர்சிப்பதற்கு ஐ.நா. சபை போன்ற உலக அரங்கைப் பயன்படுத்தும் அளவுக்கு இலங்கையின் தரம் தாழ்ந்துபோனது மிகவும் வருந்தத்தக்கது.

இவ்வாறு பண்ருட்டி ராமச்சந்திரன் கூறியபோது அதற்கு இலங்கை பிரதிநிதிகள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

ஆனால், அமைச்சர் அதைப் பொருட்படுத்தாமல் இந்தக் கருத்துக்களைத் தொடர்ந்து வற்புறுத்திப்போசினார்.

### மதக்கலவரம்

அவர் மேலும் கூறியதாவது:-

இந்தியாவில் இந்து- முஸ்லிம் கலவரங்கள் பிரச்சினைகள் ஏற்பவில்லையா என்று கேட்கிறார்கள்.

இந்தியா பல இனம், மொழிகளை உண்டாக்கிய நாடு. சமூக, பொருளாதார மாற்றங்கள் ஏற்படும்போது இப்படிப்பட்ட பிரச்சினைகள் ஏற்படுவது இயற்கையே.

அப்படிப்பட்ட பிரச்சினைகளைச் சுமூகமான முறையில் பேசித் தீர்க்கிறோமே தவிர இந்தப் பிரச்சினைகளினால் இப்படிப்பட்ட கலவரங்களினால் இந்திய மக்கள் அகதிகளாக வெளிநாடுகளுக்குப் போனதாக வரலாறு கிடையாது. வெளி நாடுகளில் இருந்துதான் அகதிகளாக வந்தனரே தவிர இங்கிருந்து யாரும் அகதிகளாக வெளிநாட்டுக்கு செல்லவில்லை.

### இராணுவம்

மேலும் இப்படிப்பட்ட பிரச்சினைகள் எழும்போது பொலிசாரும் இராணுவமும் நேர்மையாகவும் சட்டப்படியும் நடந்து கொள்கின்றனரே தவிர இராணுவமும் காவல்துறையும் வன்முறையாளர்களுக்குத் துணை போகவில்லை.

இலங்கைத் தமிழர்களும் இந்திய வம்சாவளியினரும் இக்கலவரங்களினால் வன்முறை தாக்குதல்களினாலும் தாக்கப்பட்டுச்சொத்துக்களை இழந்து உயிருக்கு அஞ்சி இந்தியாவுக்கு அகதிகளாக வந்து கொண்டு இருக்கிறார்கள்.

அப்படி பாதிக்கப்பட்டு ஓடி வருகிற முதியவர்களையும் தாய்க்குலத்தினரையும் குழந்தைகளையும் மனிதாபிமான அடிப்படையில் இந்தியா ஏற்று அவர்களுக்குப் பரிவு காட்டி ஆதரவு அளிக்கிறது.

இவ்வாறு அமைச்சர் பண்



ருட்டி ராமச்சந்திரன் பேசினார்.

பண்ருட்டி ராமச்சந்திரன் பேசிய போது அனைத்து நாட்டு பிரதிநிதிகளும் மிகவும் உன்னிப்பாகவும் கவனமாகவும் கேட்டனர். பல்வேறு நாட்டு பிரதிநிதிகள் அமைச்சரைச் சந்தித்து கை குலுக்கிப் பாராட்டு தெரிவித்தார்கள்.

பிரபாகரன்- மதிவதனி காதல் திருமணம், சென்னை அருகே உள்ள திருப்போரூர் முருகன் கோவிலில் நடந்தது.


1983 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடந்த கலவரங்களும் அதற்கு முன்பு மே மாதம் பெரதேனியா பல்கலைக் கழகத்தில் தமிழ் மாணவர்கள் மீது நடத்தப்பட்ட வன்முறைத் தாக்குதல்களும் தமிழ் மாணவர்களை அச்சத்தில் ஆழ்த்தியிருந்தன. நடந்து முடிந்த கலவரங்கள் அவர்களது நெஞ்சை விட்டு அகலவில்லை.

பல்கலைக்கழகங்கள் மீண்டும் திறந்த போது தமிழ் மாணவர்கள் சிங்களப் பகுதிகளுக்குத் திரும்ப மறுத்தனர். எங்களை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு மாற்றுங்கள் என்று மாணவர்கள் கோரிக்கை விடுத்தனர். ஆனால், நிர்வாகம் இதை ஏற்றுக்கொள்ளவில்லை.

### சாகும்வரை உண்ணாவிரதம்

இதற்காக மாணவர்கள் ஊர்வலம் நடத்தினார்கள். முதல் வேலையாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தையே இழுத்து மூடியது இலங்கை அரசாங்கம். 1984 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5 மாணவர்களும் 4 மாணவிகளும் சாகும்வரை உண்ணாவிரதம் தொடங்கினார்கள்.

இது குறித்து இலங்கை மந்திரி லலித் அதுலத் முதலி கூறுகையில், அவர்கள் செத்தாலும் கவலையில்லை என்று தொனியில் பேசினார். பெண்கள் உண்ணாவிரதம் இருந்த செய்தி பிரபாகரனுக்கு எட்டியது. அப்போது அவருக்கு அடேல் பாலசிங்கம் எழுதிய பெண்களும் புரட்சியும் என்ற புத்தகம் நினைவுக்கு வந்தது. அதில் பெண்கள் கட்டாயம் போராட்டங்களில் பங்கேற்கவேண்டும்; இயக்கங்களில் கலந்துகொள்ள வேண்டும்; பெண்கள் அடக்குமுறைக்கு ஆளாகுகிறார்கள். ஒடுக்கு முறைக்கு எதிரான போராட்டங்களில் அவர்களை இணைத்துக் கொள்வது மிகவும் பொருத்தமானது.



(தொடரும்)

# நிலையியற் கட்டளைக்கு அரசியல் பேரவை முரண்!

## ஜே.வி.பி. சுட்டிக்காட்டு



(கொழும்பு)

**நாடாளுமன்றத்தை அரசியல் அமைப்பு பேரவையாக மாற்றும் யோசனையை நேற்று முன்தினம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் முன்வைத்தமையானது, நிலையியற் கட்டளைகளுக்கு முரணானது என்று ஜே.வி.பி.தெரிவித்துள்ளது.**

ஜே.வி.பியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

இந்த யோசனை முன்வைப்பு குறித்து கட்சித் தலைவர்கள் கூட்டத்தின்போது தாம் எதிர்ப்பை வெளியிட்டதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை அரசியல் அமைப்பு பல் மேற்கொள்ளப்படும் மீளமைப்பின மூலமே நாட்டின் பிரச்சினைகளை தீர்க்க முடியும் என்று கூறப்படுவதை அவர் நிராகரித்துள்ளார். (இ-7)

# உலகப் பொருளாதார மாநாட்டில் பங்கேற்க பிரதமருக்கு அழைப்பு


(கொழும்பு)

உலகப் பொருளாதார மாநாட்டில் பங்கேற்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு முதல் தடவையாக இவ்வாறு மாநாட்டில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 20 ஆம் திகதி சுவிட்சர்லாந்தில் டாவோஸில் உலகப் பொருளாதார மாநாடு நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவுள்ளார்.



இந்த மாநாட்டில் 52 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகப் பொருளாதார மாநாடு நாற்பது ஆண்டுகளாக தொடர்ச்சியாக நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

ஜேர்மனியைச் சேர்ந்த பேராசிரியர் காலூர் ஸ்வெப் 1971 ஆம் ஆண்டு முதல் தடவையாக ஜெனிவா பல்கலைக்கழகத்தில் இந்த மாநாட்டை ஆரம்பித்தார்.

சர்வதேச முரண்பாடுகளை களைவதற்கு ஓர் சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதே இந்த மாநாட்டின் நோக்கமாகும் என தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

# ஐ.தே.கவுக்கும் சு.கவுக்கும் இடையே கருத்து முரண்பாடு

ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் கருத்து முரண்பாடு நிலவி வருவதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை இரத்து செய்வது தொடர்பில் பிரதான இரண்டு கட்சிகளுக்கும் இடையிலும் இணக்கப்பாடு ஏற்படுத்திக் கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் சுதந்திரக் கட்சியின் பிரதிநிதிகளுக்கும், ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இந்த முரண்பாட்டு நிலைமை ஏற்பட்டுள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முழுமையாக இரத்து செய்யக் கூடாது என சுதந்திரக் கட்சி கோரி வருகின்றது. எனினும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முழுமையாக இரத்து செய்ய வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தி வருகின்றது.

புதிய அரசியல் அமைப்பின் ஊடாக ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என சுதந்திரக் கட்சி கோரியுள்ளது.

எனினும், ஐக்கிய தேசியக்கட்சியின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளின் போது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முழுமையாக இல்லாதொழிக்கப்பட வேண்டுமென கோரியிருந்தது.

எவ்வாறெனினும், புதிய அரசியலமைப்பு குறித்து இரண்டு கட்சிகளும் இதுவரையில் இறுதித் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# விமானம் மூலம் பாகிஸ்தானுக்கு வெள்ளை சந்தனம் கடத்தல்

இலங்கையில் இருந்து பாகிஸ்தானுக்கு சட்டவிரோதமாக விமான தபால்பொதிசேவை ஊடாக வெள்ளை சந்தனத்தை விற்பனை செய்யும் பாரிய கடத்தல் வியாபாரம் நடந்து வருவதாக தபால் தொழிற்சங்க தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

மிக நீண்டகாலமாக இந்த கடத்தல் வியாபாரம் நடந்து வருவதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

தபால் திணைக்களத்தில் உயர் பதவிகளை வகிக்கும் சில அதிகாரிகள் மற்றும் பாதாள உலக குழுக்களுடன் தொடர்புடைய சில வர்த்தகர்கள் இணைந்து வெள்ளை சந்தன கடத்தலை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தொழிற்சங்க தலைவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

கடந்த டிசெம்பர் 20ஆம் திகதி இலங்கையில் இருந்து பாகிஸ்தானுக்கு விமானத் தபால் பொதி ஊடாக வெள்ளை சந்தனம் அனுப்பி வைக்கப்பட்டதுடன், இது கட்டுநாயக்க விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்டது.

ஜனவரி 2 ஆம் திகதியும் இவ்வாறு பாகிஸ்தானுக்கு அனுப்பி வைக்கப்படவிருந்த வெள்ளை சந்தனம் விமான நிலையத்தில் பிடிபட்டது.

எனினும் சம்பவத்துடன் தொடர்புடைய தபால் உயர் அதிகாரிகளுக்கு எதிராக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தொழிற்சங்க தலைவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## செயலில் வேண்டும் கவனம்!

புத்திசாலிகள்...நாளைய வேலையை இன்றைக்கே செய்கிறார்கள். சராசரிகள். இன்றைய வேலையை இன்றைக்குச் செய்கிறார்கள் மூடர்கள்.

நேற்றைய வேலையை இன்றைக்கு செய்கிறார்கள். ஆனால் இந்தியரில் பலர்... சென்ற ஜென்மத்து வேலையை இந்த ஜென்மத்தில் செய்துகொண்டிருக்கிறார்கள்!

இத்தனைக்கும் இந்த இந்தியனின் பாரம்பரியம் எப்படிப்பட்டது? ஜனன காலத்திலேயே மரண காலத்தைப் பற்றி யோசித்து வாழ்க்கையை முன்கூட்டியே வகுத்துக் கொள்ளும் உத்வேகத்துடன் 'அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன்' என்ற ஆழ்வாரின் ஆன்ம வாரிசுகள் நாம்.

இப்பிறவி தப்பிடில் எப்பிறவி வாய்க்குமோ?ஏது வருமோ என்ற (தாயுமானவர்) முன்யாக்கிரதை முனிவர்களின் வம்சா வழிகள் நாம். நாம் ஏன் இப்படி ஆனோம்?

அந்நியப் படையெடுப்புக்கள் நம்மைச் சுரண்டிய போது நமது நம்பிக்கையும் வாழ்க்கை முறையும் சுரண்டப்பட்டு விட்டனவா?

எது எப்படியோ... போனது போகட்டும். கீதை ஒருவனை இப்பிறவிக்கும் வரும் பிறவிக்கும் (வந்தால்)தயார் செய்கிறது! ஆம்...யோக வாழ்வில்,அப்பியாசம் (பயிற்சி... திரும்பத் திரும்ப பயிற்சி) கீதையில் வலியுறுத்தப்படுகிறது.

இப்பயிற்சியில் தவறு நேர்ந்தாலும்,பாதியில் சறுக்கி விழுந்தாலும், மரணம் அதற்குள் மனிதனைத் தழுவினாலும் கவலை வேண்டாம். அடுத்த பிறவியின் ஆரம்ப கட்டத்திலேயே இந்த அப்பியாசம் கைகொடுக்கும் என்கின்றான் கீதாசார்யன்.

"ஒருமையுள் தாம் கற்ற கல்வி எழுமையும் ஏமாப் புடைத்து" என்கிறது உலகப் பொதுமறை திருக்குறள்.

எனவே யோகம் பயில்வது வாழ்க்கையை விளக்கும் முதல் வழி.

யோகம் பயிலுவோர் விழிகளை மூடியும் மூடாமலும் நாசியைப் பார்த்தபடி இருக்கச் சொல்கிறது கீதை. ஏன் விழிகளை முழுவதும் மூடிவிட்டால் , தூக்கம் வந்துவிடும். முழுவதும் திறந்து வைத்தால் உலக விஷயங்களில் ஈடுபட்டு விடுவோம். மூடியும் மூடாமலும் இருந்தால் விழிப்பும் அமைதியும் கைகூடும். நாள்தோறும் இப்படி காலையும் மாலையும் தியானம் செய்வது அவசியம் என்கிறார் ஆசார்ய வினோபா பாவே.

ஆனால் ஒன்று. இப்படி யோகம் பயில்வது வலது மூக்கையும் மாறிமாறி பிடித்துக் கொண்டே இருக்கத்தானா? இல்லை...இல்லை...இல்லவே இல்லை. உடலை வலுப்படுத்தி, காற்றை நெறிப்படுத்தி,மனதை வசமாக்கிக் கொண்டால் அற்புதப் பணிகள் ஆயிரம் செய்யலாம்! வசமான மனது கடிவாளமிட்டமுரட்டுக் குதிரை போல...இந்த யோகக் குதிரைகளின் பலமும் பணியும் அபாரமானவை. யோகம் கைவரப் பெற்றவர் எண்ணங்கள் நேரானவை. செயல்கள் சீரானவை. மனது சீரான மனிதர்களின் செயல்கள் மகத்தானவை.

மனது சீரான மனிதர்கள் ஒருபோதும் செயலை விடுவதே இல்லை. செயலில் பயனை மட்டுமே துறக்கிறார்கள். ஒரு செயலின் பயனைத் துறப்பவன் கர்மயோ செயலைத் துறப்பவன் தேசத்துரோகி! செயலின் பயனைத் துறப்பவர்கள், செயலை முழுமையாகச் செய்வதால் செயற்கரிய செய்கிறார்கள்.

ஆனால் செயலைப் பற்றிய அக்கறை நமக்கு இருக்கிறதா?செயலின் பயனாகிய பணம் சம்பாதித்தல் என்பது மட்டும் சமூகத்தின் எல்லாப் பக்கங்களிலும் ஜாம் ஜாம் என்று ஜக ஜோதியாக நடக்கிறது. இது தவறல்லவா?

எல்லோருக்கும் சம்பளத்திலும் சன்மானத்திலும் இருக்கும் அதே அளவு ஆர்வம்,பணியிலும் செயலிலும் இருந்திருந்தால் இன்றைக்கு எங்கள் நாடு இப்படி இருந்திருக்குமா? உலக நாடுகளின் தலைமையகம் அல்லவா இருந்திருக்கும்! வாருங்கள்... செயலில் அக்கறை காட்டுவோம்.செயலின் பயனைப் பற்றிய கவலையை ஒதுக்கி வைப்போம்.



# சிறுவர் அரங்கம்

1330

# கமலின் தவிப்பு!



...இது தினசரி நடக்கும் கூத்துதான்! மாதத்தில் பாதி நாள் பல் துலக்காமல் பற்கள் மஞ்சள் படிந்து கிடந்தன. பள்ளியிலும் இதை கேட்க மாட்டார்களா? இவனை எப்படி திருத்துவது என்று யோசித்துக் கொண்டிருந்தாள் அந்த தாய்.

பள்ளியிலிருந்து திரும்பியிருந்தான் கமல்! அவனது தாய் காபி கலந்து கொண்டிருந்தாள். ‘என்னம்மா நீ காபி கலக்க இவ்வளவு நேரமா? ஒரே டயர்டா இருக்கு தூக்கமா வருது? சீக்கிரம் கொண்டா!”

“இருடா வரேன்!”

கமல் அப்படியே கொட்டாவி விட அவன் வாயிலிருந்து ஒரு குள்ளன் கீழே விழுந்தான்.

கமலுக்கு ஆச்சர்யம்! “ஏய் யாரு நீ என் வாயிலிருந்து கீழேவிழுற?

“நான் தான் உங்கள் அடிமை! நீங்கள் தான் எனக்கு உயிர் கொடுத்த தெய்வம்” என்றது அந்த குள்ள உருவம்!

“ஆமாம் நீ எப்படி என் வாயிலிருந்து வந்தே?”

“நீங்கதான் பல் துலக்காம என்னை வளத்து விட்டீங்க!”

“அடிமைன்னு சொல்ற? நான் எது கேட்டாலும் நீ தருவியா?”

“என்ன எஜமான் இப்படி கேட்டுட்டீங்க? நீங்க எது கேட் டாலும் நான் தருவேன்! உங்களுக்கு இப்போ என்ன வேணும்?”

“எனக்கு லட்டு தின்னனும் ஆசையா இருக்கு! லட்டு வரவை பாக்கலாம்!”

குள்ளன் கண்ணை மூடிக் கொண்டு “கொய், முய் சய்” என்று ஏதோ கூற லட்டு ஒன்று பறந்து வந்து டேபிளில் உட்கார்ந்தது.

“எஜமான் உங்களுக்குத் தான் லட்டு சாப்பிடுங்க!”

குள்ளன் கூற, எடுத்து ஒரு கடி கடித்தான். மறுகணம் ஐயோ! அப்பா ! என் பல்லு போச்சே! என்றான் அவனது முன் பல் ஒன்றல்ல இரண்டும் உடைந்து கையில் வந்தது.

“டேய் குள்ளா! எங்கேடா இருந்து வந்தே? என்னோட பல்லை உடைச்சிட்டே!”

“எஜமான்! நான் உடைக்கலை! நீங்க தான் உடைச்சிட்டீங்க!”

“டேய்! மரியாதையா என் பல்லை ஒட்டவை!”

“எஜமான் அது முடியாது! என்னால புதுசா ஏதாவது கொண்டு வர முடியுமே தவிர ஒட்ட வைக்க முடியாது!”

“அப்ப புதுசா என் பல்லை முளைக்க வை!”

“அதுவும் இப்ப முடியாது எஜமான்! ஒரு நாளைக்கு ஒரு முறைதான் என் மந்திரம் பலிக்கும்!”

“அப்ப நான் ஓட்டை பல்லோடதான் ஸ்கூலுக்கு போகனுமா? பசங்க கேலி பண்ணுவாங்களே!”

குள்ளன் பதில் சொல்லாமல் மறைந்தான்.

மறுநாள் பள்ளியில்! டேய்! மடை திறந்துடுச்சா! ஓட்டை பல்லா! என்று அனைவரும் கமலை சூழ்ந்து கொண்டனர்.

“என்னடா கமல்! இப்ப போய் உன் பல்லு விழுந்திருக்கு! அதுவும் ஒரே சமயத்துல ரெண்டு பல்லு! ராசிக்கார பையந்தான் நீ”

“டேய் ஓட்டை வாயா! இங்க வாடா!’ ஒருவன் அழைக்ககமல் முறைத்தான்.

“ஓட்டை வாயனுக்கு பாத்தியா எவ்வளவு கோபம்?”

“கமல்! உனக்கு பிடிக்குமேன்னு லட்டு கொண்டாந்திருக்கேன்! இந்தா சாப்பிடு!” அவனது நண்பன் குள்ள மணி கொண்டு வர “நோ! என்றபடி தட்டிவிட்டான் கமல்.

“என்னடா கமல்! என்ன ஆச்சு! நான் காபி கலந்து வர்றதுக்குள்ளே குட்டி தூக்கம் போட்டு அதுலேயும் கனவா?” அவனது அம்மா கேட்க

“ச்சே! எல்லாம் கனவா? பயங்கரமா இல்லே இருக்கு!” என்று மனதினுள் முணுமுணுத்துக் கொண்டான்.

ஒண்ணுமில்லேம்மா! என்று காபியை குடித்தவன் மீண்டும் கனவை அசை போட்டான்.

மறுநாள் காலை அதிசயமாய் சீக்கிரம் எழுந்து பல் துலக்கும் கமலை பார்த்து அவளது அம்மா ஆச்சர்யப் பட்டாள். ஆனால் அது நமக்கு ஆச்சர்யம் இல்லை தானே!

டிஸ்கி இதுவரை பாப்பா மலரில் நான் சிறுவயதில் கையெழுத்து பத்திரிக்கை நடத்திய போது எழுதிய கதைகளும் செவிவழி கதைகளும் பதிவிட்டேன்! இது இப்பொழுது நேற்று இரவு கருவில் உதித்து இன்று காலை சுடசுட நானே எழுதிய கதை! என் மகள் வேத ஜனனி பல்துலக்க மறுத்து அடம் பிடிப்பாள். அவளுக்கு நேற்று இரவு கதை சொன்னேன். அதை கொஞ்சம் மாற்றி இப்பொழுது பதிவிட்டுள்ளேன்! தலைப்பு சும்மா அட்ராசிட்டிக்கு அப்பத்தானே உள்ளே வருவீங்க! உங்கள் கருத்துக்களை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்!

(முற்றும்)

01.2016
11

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1055 - தியோடோரா பைசண்டைன் பேரரசியாக முடிசூடினாள்.
- 1569 - முதலாவது குலுக்குச் சீட்டு இங்கிலாந்தில் பதிவாகியது.
- 1693 - சிசிலியில் எட்னா எரிமலை வெடித்ததையடுத்து இடம்பெற்ற பெரும் நிலநடுக்கம் சிசிலி மற்றும் மோல்ட்டாவின் பல பகுதிகளை அழித்தது.
- 1779 - மணிப்பூரின் மன்னராக சிங்-தாங் கோம்பா முடிசூடினார்.
- 1782 - பிரித்தானியர் சேர் எட்வேர்ட் ஹியூஸ் மற்றும் சேர் ஹெக்டர் மன்ரோ தலைமையில் திருகோணமலையைக் கைப்பற்றினர்.
- 1787 - யுரேனஸ் கோளின் இரண்டு துணைக் கோள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.
- 1805 - மிச்சிகன் பிரதேசம் அமைக்கப்பட்டது.
- 1851 - சீனாவில் குயிங் அரசிற்கெதிராக ஹொங்க்சியூகான் என்பவர் தலைமையில் தாய்பிங் என்ற இராணுவக் குழு ஆரம்பிக்கப்பட்டது.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: அலபாமா ஐக்கிய அமெரிக்காவில் இருந்து விலகியது.
- 1879 - ஆங்கிலோ-சூளு போர் ஆரம்பமானது.
- 1878 - பால் முதற்தடவையாக புட்டியில் அடைத்து விற்கப்பட்டது.
- 1911 - காம்ரேட் என்ற பத்திரிகையை விடுதலைப் போராட்ட வீரர் மவுலானா முகம்மது அலி கல்கத்தாவில் வெளியிட ஆரம்பித்தார்.
- 1922 - நீரிழிவுக்கு மருந்தாக மனிதரில் இன்சுலின் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பான் நெதர்லாந்தின் மீது போரை அறிவித்தது.
- 1942 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பான் கோலாலம்பூரைக் கைப்பற்றியது.
- 1943 - ஐக்கிய அமெரிக்காவும் ஐக்கிய இராச்சியமும் சீனாவின் மீதான நில உரிமையை இழந்தன.
- 1946 - என்வர் ஹோக்ஸா அல்பேனியாவின் சர்வாதிகாரியாகத் தன்னை அறிவித்து அதனைக் குடியரசாக்கினார்.
- 1957 - ஆபிரிக்க உடன்பாடு டக்கார் நகரில் எட்டப்பட்டது.
- 1972 - கிழக்கு பாகிஸ்தான் வங்காளதேசம் எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.
- 1998 - அல்ஜீரியாவில் நூற்றுக்கும் மேற்பட்ட பொது மக்கள் கொல்லப்பட்டனர்.
- 2007 - செயற்கைக் கோள் தகர்ப்பு ஏவுகணைச் சோதனையை சீனா நடத்தியது.

### பிறப்புகள்

- 1755 ஸ்ரீ அலெக்சாண்டர் ஆமில்டன், அமெரிக்க மெய்யியலாளர் (இ. 1804)
- 1786 - ஜோசப் ஜாக்சன் லிஸ்டர், ஆங்கிலேய இயற்பியலாளர் (இ. 1869)
- 1859 - கர்சன் பிரபு, ஆங்கிலேய அரசியல்வாதி இந்தியத் தலைமை ஆளுநர் (இ. 1925)
- 1906 - ஆல்பர்ட் ஹாப்மன், சுவீடிய வேதியியலாளர் (இ. 2008)
- 1953 - ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, இலங்கை அரசியல்வாதி (இ. 2008)
- 1973 - ராகுல் திராவிட், இந்தியத் துடுப்பாட்டக்காரர்

### இறப்புகள்

- 314 - மில்த்தியாதேஸ் (திருத்தந்தை)
- 1753 - ஹேன்ஸ் ஸ்லோன், ஐரிய மருத்துவர் (பி. 1660)
- 1902 - ஜானி பிரிக்ஸ், ஆங்கிலேயத் துடுப்பாளர் (பி. 1862)
- 1928 - தோமஸ் ஹார்டி, ஆங்கிலேய எழுத்தாளர் (பி. 1840)
- 1932 - திருப்பூர் குமரன், இந்திய விடுதலைப் போராட்ட தியாகி (பி. 1904)
- 1966 - லால் பகதூர் சாஸ்திரி, 2வது இந்தியப் பிரதமர் (பி. 1904)
- 1975 - நீலாவணன், ஈழத்துக் கவிஞர் (பி. 1931)
- 1976 - ஏரம்பு சுப்பையா, இலங்கையின் நடன ஆசிரியர்
- 2000 - பெட்டி ஆர்க்டேல், ஆங்கிலேய- ஆத்திரேலியத் துடுப்பாளர் (பி. 1907)
- 2007 - எருவில் மூர்த்தி, ஈழத்துக் கவிஞர்
- 2008 - எட்மண்ட் இல்லரி, நியூசிலாந்து மலையேறுநர் (பி. 1919)
- 2013 - ஏரன் சுவோற்சு, அமெரிக்கக் கணினியாளர் (பி. 1986)
- 2014 - ஏரியல் சரோன், இசுரேலின் 11 ஆவது பிரதமர் (பி. 1928)

# இலங்கையின் கேள்விகளுக்கு பதில்கூற இந்திய மீனவர்கள் தயாராக இல்லை!

## பா.ஜ.க.தேசிய தலைவர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

**மீனவர் பிரச்சினை தொடர்பில் இலங்கை கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூற இந்திய மீனவர்கள் தயாராக இல்லை என்று பா.ஜ.க. தேசிய செயலாளர் எச். ராஜா தெரிவித்துள்ளார்.**



திருச்சியில் நேற்று முன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே எச்.ராஜா இதனைத் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், மீனவர் பிரச்சினையில் இலங்கை அரசு கேட்கும் கேள்விகளுக்கு பதில் கூற இந்திய மீனவர்கள் தயாராக இல்லை.

இலங்கையில் வாழும் தமிழ் மீனவர்கள் எல்லைக்குள் வராமல் மீன் பிடிக்க முடியுமா? இந்திய மீனவர்கள் இங்கு வந்து மீன் பிடித்தால் நாங்கள் எங்கு செல்வது?

இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ள மீன்பிடி உபகரணங்களை இந்திய மீனவர்கள் பயன்படுத்துவதை நிறுத்த முடியுமா? இந்த கேள்விகளுக்கும் பதில் கிடைததால் மீனவர் பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியும் என்று தெரிவித்துள்ளார். (இ-7)

## ஜெனிவாவில் அளித்த வாக்குறுதிகளை இலங்கை அரசாங்கம் நிறைவேற்றுமா?

இலங்கை அரசாங்கம் ஜெனிவா தீர்மானத்தில் கடந்த ஆண்டு அளித்திருந்த வாக்குறுதிகளை புதிய ஆண்டில் நிறைவேற்றுவதற்கு எடுக்கப்பட வேண்டிய முக்கிய நடவடிக்கைகளை வலியுறுத்தி சிவில் அமைப்புகளுடன் மனித உரிமை ஆர்வல்ர்கள் சேர்ந்து கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து கடந்த ஓராண்டில் ஏற்பட்டுள்ள சில அரசியல் சீர்திருத்தங்களையும் முன்னேற்றங்களையும் சுட்டிக்காட்டியுள்ள அந்த அறிக்கை, ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அளித்திருந்த வாக்குறுதிகளை முழுமையாக அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்று கோரியுள்ளது.

குறிப்பாக, சுயாதீன ஆணைக் குழுக்களின் நியமனம், 19 ஆம் அரசியலமைப்புத் திருத்தம், வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் சில காணிகள் விடுவிக்கப்பட்டமை என்று சில முன்னேற்றங்களை புதிய அரசாங்கம் எட்டியுள்ளதாக கூறியுள்ள சிவில் சமூகம், உண்மையான அமைதியும் நல்லிணக்கமும் ஏற்பட இன்னும் அதிகம் செய்யப்பட வேண்டியிருக்கின்றது என்றும் தெரிவித்துள்ளது.

பொறுப்புக்கூறல், நல்லிணக்கம் மற்றும் மனித உரிமைகள் விடயங்களில் அரசாங்கம் அளித்துள்ள வாக்குறுதிகளின்படி, வெளிநாட்டு நீதிபதிகள் மற்றும் சட்ட நிபுணர்களை உள்ளடக்கிய சிறப்பு நீதிமன்றத்தை இந்த ஆண்டில் அமைக்க வேண்டும் என்றும் சிவில் செயற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர்.


காணாமற் போனவர்கள் தொடர்பான அலுவலகம், உண்மை கண்டறிதல், நீதி மற்றும் நல்லிணக்கம், பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு போன்றவற்றுக்கான நிறுவனங்களை நிறுவுதல் போன்ற நடவடிக்கைகளும் இந்த ஆண்டில் நிறைவேற்றப்பட வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

சர்வதேசத்துக்கு அளிக்கப்பட்ட இந்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமல் போகக்கூடுமோ என்கின்ற சந்தேகமும் கேள்விக்குறியும் எழுந்துள்ளதாகவும் அதனாலேயே சிவில் சமூகத்தினர் அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேணடிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இந்த அறிக்கையில் கையொப்பமிட்டுள்ள தெற்காசிய சட்ட ஆய்வுகளுக்கான நிலையத்தின் இணை-நிறுவுனர் நிரான் அன்கெட்டெல் தெரிவித்தார்.

கடந்த ஓராண்டில் நாட்டின் மனித உரிமைச் சூழ்நிலையில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ள போதிலும், முல்லைத்தீவு போன்ற முன்னாள் போர் வலயப் பிரதேசங்களில் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் மத்தியில் இன்னும் அச்சமான சூழ்நிலையே நிலவுவதாகவும் சட்டத்தரணி நிரான் அன்கெட்டெல் தெரிவித்தார்.(இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 600

வின்ஜெக்சன்




தேவசுதன்




நதிபன்

குப்பை கொட்டும் இடத்தில்
எச்சில் துப்புவது,
சிறுநீர், மலம் கழிப்பது
போன்ற செயல்களை செய்யாதீர்....
ஏனெனில் குப்பையை
அள்ளுபவரும் ஒரு மனிதன் தான்.


பாலகுமார்




ரமேஷ்குகன்



தவசிலன்



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# அமைதிக்காலத்திலும் இயங்கும் சித்திரவதை இயந்திரம்

இலங்கையின் புதிய அரசாங்கம் உள்நாட்டுப் போரின் பின்னரான நல்லிணக்க செயற்பாடுகளை முன்னெடுத்தமை தொடர்பில் பாராட்டத்தக்க நிலையிலேயே இருப்பினும், அங்கு வாழும் மக்கள் தற்போதும் பல்வேறு சித்திரவதைகள் மற்றும் உரிமை மீறல்களுக்கு உட்படுவதாக தற்போது வெளியிடப்பட்டுள்ள அறிக்கை ஒன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



இலங்கையின் பாதுகாப்புப் படையினர் தற்போது பொதுமக்களைக் கடத்துதல், சித்திரவதைகளுக்கு உட்படுத்துதல் மற்றும் பாலியல் ரீதியாகத் துன்புறுத்துதல் போன்ற பல்வேறு மீறல்களில் ஈடுபடுவதாக இந்த அறிக்கையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கைத்தீவில் 1980களின் ஆரம்பத்தில் யுத்தம் ஆரம்பமாகியது. பெரும்பான்மை சிங்கள சமூகத்தால் ஓரங்கட்டப்பட்ட சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு தனிநாட்டை அமைப்பதற்காக புலிகள் யுத்தம் ஒன்றில் ஈடுபட ஆரம்பித்தனர்.

இந்த யுத்தமானது புலிகள் போரில் தோற்கடிக்கப்பட்டு, ஒரு இலட்சத்திற்கும் அதிகமானோரின் உயிர் இழப்புடன் 2009 இல் முடிவை எட்டியது. இந்த யுத்தத்தில் பொதுமக்களே அதிகம் கொல்லப்பட்டனர்.

போரின் போது பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் காணாமற்போயினர். இது 'வெள்ளை வான்' கடத்தல் என அறியப்படுகிறது. ஏனெனில் பாதுகாப்பு முகவர்கள் தமது கடத்தல் சம்பவங்களுக்கு வெள்ளை வான்களையே பயன்படுத்தினர்.

போரின் போது இடம்பெற்ற பல்வேறு உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கான அழுத்தத்தை அனைத்துலக சமூகம் வழங்கிய போது அதனை இலங்கை அரசாங்கம் எதிர்த்தது.

ஆனால் ஒரு ஆண்டிற்கு முன்னர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நாட்டின் ஆட்சிப் பொறுப்பை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்ததன் பின்னர் இந்த நிலைமை மாறியது.

இவரது அரசாங்கம் மீளிணக்கப்பாடு மற்றும் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு போன்றவற்றை நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்டு நிகழ்ச்சி நிரல்களை தயாரித்தது.

மைத்திரியின் கடந்த ஓராண்டு ஆட்சிக்காலத்தில் கடத்தப்பட்ட 20 பேரிடமிருந்து பெறப்பட்ட சாட்சியங்களை அடிப்படையாகக் கொண்டு 'அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டம்' புதிய அறிக்கை ஒன்றைத் தயாரித்து வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் மைத்திரியின் அரசாங்கம் எவ்வாறு நல்லிணக்கம் தொடர்பில் இதயசுத்தியுடன் செயற்பட்டிருக்க முடியும் எனவும் பாதுகாப்பு படைகள் மீது இந்த அரசாங்கம் எவ்வளவு கட்டுப்பாட்டைக் கொண்டுள்ளது என்பது தொடர்பாகவும் 'அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டம்' தற்போது வெளியிட்டுள்ள தனது புதிய அறிக்கையில் கேள்வி எழுப்பியுள்ளது.

'இலங்கையில் வெள்ளை வான்கள் தற்போதும் செயற்படுகின்றன என்பது இங்கு மிகவும் கவலைக்குரிய விடயமாகும். வெள்ளை வான்கள் வழமை போன்று கடத்தல்களில் ஈடுபடுகின்றன' என அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் நிறைவேற்று இயக்குநர் ஜஸ்மின் சூகா புதிய அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தென்னாபிரிக்கா மற்றும் சியாராலியோன் ஆகிய நாடுகளின் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுக்களின் உறுப்பினராக சூகா செயற்பட்டுள்ளார்.

அத்துடன் இலங்கையில் யுத்தம் தொடர்பான பொறுப்புக்கூறும் விவகாரம் மீதான ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தின் சட்ட ஆலோசகராகவும் சூகா செயற்பட்டுள்ளார்.

அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தில் பணியாற்றும் பெரும்பாலான உறுப்பினர்களின் தனிப்பட்ட விபரங்கள் அவர்கள் தொடர்ந்தும் சுயாதீனமாகப் பணியாற்றுவதற்காக இரகசியமாக வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் இந்த அமைப்பில் அனைத்துலக போர்க்குற்ற நீதிமன்றங்களில் பணியாற்றிய சட்டத்தரணிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

தென்னாபிரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவின் தலைமைத்துவத்தின் கீழ் தென்னாபிரிக்க அரசாங்கத்தால் உருவாக்கப்பட்ட 'மனித உரிமைகளுக்கான நிறுவகம்' என்ற அமைப்பாலேயே 'அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டம்' நிர்வகிக்கப் படுகிறது.

அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தால் தற்போது வெளியிடப்பட்டுள்ள புதிய அறிக்கையில் பின்வரும் முக்கிய விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பாதிக்கப்பட்ட அனைவரும் தமிழர்களாவர். இவர்களில் பலர் வேறு நாடுகளிலிருந்து இலங்கைக்கு சென்றவர்களாகவும் சிலர் இலங்கைக்குள்ளேயே தலைமறைவு வாழ்வை வாழ்ந்தவர்களுமாவர்.

மைத்திரி அரசாங்கம் ஆட்சியைப் பொறுப்பெடுத்த பின்னர் இலங்கையில் தமக்குப் பாதுகாப்புக் கிடைக்கும் எனக் கருதியே மீண்டும் அங்கு சென்றனர் மற்றும் தமது தலைமறைவு வாழ்விலிருந்து வெளிவந்தனர்.

இறுதியாக கடந்த மாதமும் இலங்கையில் கடத்தல் சம்பவம் ஒன்று இடம்பெற்றமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதே.

நான்கு நாடுகளில் வாழும் 15 தமிழ் ஆண்கள் மற்றும் 05 தமிழ்ப் பெண்களிடம் அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் ஆய்வாளர்கள் நேர்காணல் மேற்கொண்டனர்.

இவர் களில் சிலரது உடல்களில் இன் னமும் ஆறாத காயங்கள் காணப் படுகின்றன.

பாதிக்கப்பட்டவர்களில் இருவரது காயங்களிலிருந்து நேர்காணல் மேற்கொள்ளும் வேளையிலும் குருதி வடிந்து கொண்டிருந்தது என்பது இங்கு குறிப்பிடத்தக்க சம்பவமாகும்.

நன்கு திட்டமிடப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட அறைகளிலேயே சித்திரவதைகள் இடம்பெற்றன.

கடத்தப்பட்ட பலர் தலைகீழாகத் தொங்க விடப்பட்டு இரும்புக் கம்பிகளால் சூடுவைக்கப்பட்டுள்ளனர்.

பெற்றோல் மற்றும் மிளகாயால் அடைக்கப்பட்ட பொலித்தீன் பைகளால் மூச்சுத்திணறலுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்களும் இலங்கையில் அரங்கேறியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தின் ஆராய்ச்சியாளர்களால் நேர்காணல் மேற்கொள்ளப்பட்ட பாதிக்கப்பட்ட தமிழர்களில் ஆண்கள் மற்றும் பெண்கள் இருபாலாரும் மீண்டும் மீண்டும் துன்புறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டனர்.

இவ்வாறான சித்திரவதைகள், பாலியல் வன்புணர்வுகள் போன்றவற்றில் ஈடுபட்ட இராணுவப் புலனாய்வாளர்களில் பெரும்பாலானவர்கள் மூத்த அதிகாரிகள் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

போர் வலயத்திலுள்ள இராணுவ முகாம்கள், கொழும்பிலுள்ள பயங்கரவாத விசாரணைப் பிரிவின் தலைமையகம் மற்றும் நாடு பூராகவும் அமைக்கப்பட்டுள்ள இரகசிய முகாம்களிலேயே இவ்வாறான சித்திரவதைகள் இடம் பெற்றுள்ளன.

இவ்வாறான கடத்தல் சம்பவங்கள் நன்கு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. சித்திரவதைகளின் போது பாதிக்கப்பட்டவர்களின் கடந்த கால அரசியல் செயற்பாடுகள் குறிப்பாக அமைதி வழி ஆர்ப்பாட்டங்கள் மற்றும் தேர்தல் செயற்பாடுகள் போன்றன குறிப்பிடப்பட்டே சித்திரவதைகள் மேற்கொள்ளப்பட்டன.

மீண்டும் புலிகள் இயக்கத்தை ஆரம்பிப்பதற்கு முயற்சி செய்ததாகவும் பாதிக்கப்பட்ட சிலர் மீது கடத்தல்காரர்களால் குற்றம் சுமத்தப்பட்டது.

நேர்காணல் மேற்கொள்ளப்பட்ட பாதிக்கப்பட்டவர்களுள் ஒருவரைத் தவிர ஏனைய 19 பேரும் இலங்கையிலிருந்து தப்பிச்செல்வதற்காகப் பாதுகாப்புப் படையின ருக்கு இலஞ்சம் வழங்கியிருந்தனர்.

இந்த இலஞ்சத் தொகையானது வதை முகாம்களிலிருந்து விடு விப்பதற்கு 2 ஆயிரத்து 500 டொலரிலிருந்து 7 ஆயிரம் டொலர் வரையும், பின்னர் நாட்டிலிருந்து வேறு நாடுகளுக்குக் கடத்துவதற்கு 17 ஆயிரம் டொலரிலிருந்து 35 ஆயிரம் டொலர் வரையும் செலுத்தப்பட்டது.

தமிழ் மக்களை சித்திரவதைகளுக்கும் அடக்குமுறைக்கும் உட்படுத்தும் நோக்குடன் இலங்கை பாதுகாப்புப் படைகளுக்குள் நன்கு திட்டமிடப்பட்ட ஒழுங்குபடுத்தப்பட்ட கடத்தல் 'பொறிமுறை' நடைமுறையில் உள்ளதாக அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டத்தால் வெளியிடப்பட்டுள்ள புதிய அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.


இவ்வாறான சம்பவங்கள் இலங்கைக்குள் இடம்பெறுகின்றது என்கின்ற குற்றச்சாட்டை நிராகரிப்பதை நிறுத்துமாறும் இவ்வாறான மீறல் சம்பவங்களை உடனடியாக நிறுத்தி குற்றவாளிகளுக்கு உரிய நடவடிக்கையை உடனடியாக முன்னெடுக்குமாறும் அனைத்துலக உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

**ஆங்கில மூலம்**
**- Jared Ferrie**
**மொழியாக்கம்**
**- நித்தியாரதி**

# நிதி ஆளுமையில் நீங்கள் எப்படி?

## தொழில் ரகசியம்

எதையும் பிளான் பண்ணி செய்யணும என்கிற வாசகம் ஒரு வரி நகைச்சுவையாக பலரும், பல இடத்திலும் சொல்லியிருக் கிறோம், சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆனால் இந்த வார்த்தைகளைக் கேட்டு சிரிப்பதற்கான பொருள் இருக்கிறதா என்றால் எதுவும் கிடையாது. இதை திரைப்படக் காட்சியோடு பொருத்தி வெறும் நகைச்சுவையாக கடந்துபோவதுதான் மிகப் பெரிய நகைச்சுவை.




எதையும் பிளான் பண்ணி செய்யணும் என்பது தான் உண்மை. வேலைகளை திட்டமிடுவது என்பது, வேலைகளை பாதி செய்து முடித்ததற்கு சமமானது என்கிறனர் அறிஞர்கள்.

இது பொதுவான அனைத்து இடத்துக்கும், சூழலுக்கும், வேலைக்கும் பொருந்தும் என்றாலும், இந்த புது ஆண்டு தொடக்கத்தில் நமது வாழ்க்கைப் பயணத்துக்கு ஏற்ப பிளான் பண்ணுவது பொருத்தமாக இருக்கும். குறிப்பாக வரவு, செலவு பொருளாதார விஷயங்களில் குழப்பமில்லாமல்,




தெளிவான திட்டத்துடன் இருந்தால் தனிநபர்களின் வாழ்க்கை இலக்குகளில் சிக்கல் இருக்காது என்கின்றனர் குடும்ப நிதி ஆலோசகர்கள்.

பொருளாதார விஷயங்களில் இந்த ஆண்டு மேற்கொள்ள வேண்டிய திட்டங்கள், அதை அடைவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதற்காக நிதி ஆலோசகர்கள் தரும் விளக்கங்கள் இது.

இந்த ஆண்டில் வீடு வாங்க வேண்டும், கார் வாங்க வேண்டும், வெளிநாட்டுச் சுற்றுலா போக வேண்டும் என கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு சில வேண்டும்கள் அதிகரித்திருக்கலாம். இந்த அனைத்து தேவைகளையும் அடைவதற்கு தேவை ஒரு முறையான திட்டமிடுதல். அதை இந்த புது ஆண்டிலிருந்தாவது தொடங்குவோம்.

### கடன்களை முடியுங்கள்

தனிநபர்களின் பொருளாதார திட்டமிடுதல்களில் முதன்மை கடமையாக வலியுறுத்தப்படுவது கடன்கள் இல்லாமல் இருப்பதுதான். ஒவ்வொரு கடனையும் அவ்வப்போது அதற்குரிய கால அவகாசத்தில் முடிக்க வேண்டும். ஏற்கெனவே உள்ள கடன்களை திருப்பி செலுத்துவதில் நாணயமானவர் என்கிற பட்சத்தில்தான் புதிய கடன்களை வாங்குவதற்கான தகுதி தீர்மானிக்கப்படும். அப்போதுதான் நிதிச் சார்ந்த இலக்குகளை எளிதாக திட்டமிட முடியும்.

### வருமானத்தை அதிகப்படுத்துங்கள்

கூடுதல் வருமானத்தை உறுதிப்படுத்த வேண்டும். மாதாந்திர சம்பளக்காரர்கள் என்றால் உங்கள் வேலை நேரம் போக, மீதி நேரங்களில் இரண்டாவது வருமானத்துக்கு வழியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தனித்திறமைகளை வருமானமாக்கும் வழிகளை திட்டமிடுங்கள். சொந்த தொழில் என்றால் தொழிலில் வருமானத்தை அதிகரிக்கும் வாய்ப்புகளை உருவாக்க திட்டமிடுங்கள்.

### சேமிப்பை தொடங்கவும்

ஒவ்வொரு மாதமும் சேமிப்பது பழக்கமாகட்டும். சென்ற ஆண்டில் செய்த தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் கணிசமான தொகையை மிச்சப்படுத்தலாம். செலவுகளை முன்கூட்டியே திட்டமிடுங்கள். அவசியமில்லாத செலவுகளை மேற்கொள்ள ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்கலாம்.

### எழுதி வைக்கவும்

ஒவ்வொரு செலவையும் எழுதி வைக்கும் பழக்கத்தை கடைபிடிக்க வேண்டும். அப்போதுதான் எவ்வளவு செலவாகிறது, அதில் தேவையில்லாத பழக்கங்களுக்கு எவ்வளவு ஒதுக்கி இருக்கிறோம் என்பது தெரிய வரும். கணக்கில்லாமல் செலவு செய்வது மாத திட்டமிடலில் துண்டு விழ வைக்கும்.

இதுபோல நமது சேமிப்பு, முதலீடுகள், வங்கி கணக்கு விவரங்கள், காப்பீடு போன்ற நிதி சார்ந்த ஆவணங்களை வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் எழுதி வைப்பதும் தெரிந்து கொள்ளச் செய்வதும் முக்கியமானது. ஒருவருக்கு மட்டும் தெரிந்து கொண்டால் போதும் என்கிற ரகசியம் கடைபிடிப்பதை இந்த வருடத்திலிருந்து கைவிடுங்கள்.

### வீண் செலவுகள்

வீண் செலவுகள் என்று எதுவுமில்லை. ஆனால் அதை எப்போது செய்கிறோம் என்பதைப் பொறுத்துதான் வீண் செலவா, இல்லையா என்பது முடிவு செய்ய முடியும். ஆன்லைன் ஸ்டோரில் ஆபர் கிடைக்கிறது என்பதற்கான கடன் வாங்கி பொருட்களை வாங்குவது வீண் செலவுதான் என்கின்றனர் நிதி ஆலோசகர்கள். நோக்கமில்லாமல் மால்களுக்கு சென்று பொருட்களை வாங்குவது, நமக்கு உபயோகப் படாத கருவிகளை அந்தஸ்துக்காக வாங்குவது போன்ற செலவுப் பழக்கங்களையும் குறைக்க வேண்டும்.

### காப்புறுதிகள்

காப்புறுதிகளின் அவசியம் குறித்து தெரிந்து வைத்திருந்தாலும் அதன் முழு பலனை அனுபவிப்பதற்கு திட்டமில்லை. வருமானம் ஈட்டுபவர்களுக்கான இன்ஷ்ரன்ஸும், குடும்பத்திற்கு போதுமான மருத்துவ காப்பீடு திட்டங்களையும் இந்த ஆண்டிலாவது திட்ட மிடுங்கள்.வருமானம் ஈட்டும் இளவயதினருக்கான காப்பீட்டின் பிரீமியத் தொகை ஒப்பீட்டளவில் குறைவானது என்பது முக்கியமானது.

### அவசர தேவைகள்

அவசரகால தேவைகளுக்கான நிதி ஒதுக்குவது முக்கியமானது. இதை சேமிப்பு போல கருதி கை வைக்காமல் இருக்க வேண்டும். சாதாரணமாக சமாளிக்கக்கூடிய செலவுகளுக்கு இதில் கை வைக்க கூடாது. இப்படி ஒரு தொகையை ஒதுக்கி வைக்க வேண்டும் என்கிற எண்ணம் பலருக்குமே இருப்பதில்லை. ஆனால் அவசியம் என்கிறனர் அனுபவசாலிகள்.

### முதலீடுகள்

இதுவரை முதலீடுகள் மேற்கொள்வது குறித்து யோசிக்காதவர்கள் இனிமேலாவது யோசிக்க வேண்டும். மாத திட்டமிடலில் இதற்கும் ஒரு தொகை ஒதுக்குங்கள். குறைந்தபட்சம் 10 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை இதற்கு ஒதுக்க வேண்டும். நிதி சார்ந்த முதலீடு திட்டங்கள், தங்கம், ரியல் எஸ்டேட் என முதலீடு திட்டங்களை பிரித்து மேற்கொள்ள வேண்டும். ரியல் எஸ்டேட், தங்கம் என ஒரே முதலீட்டில் கவனம் செலுத்துவது சரியான வழியல்ல. எதிர்கால நலன்கள் பொருட்டு முதலீடுகள் அவசியம்.

### ஓய்வு கால நிதி

ஓய்வு கால வாழ்க்கையை நிம்மதியாக வைத்துக்கொள்ளவும் நிதி ஒதுக்க வேண்டும். வருமானம் ஈட்டும் வரை தற்போதைய வாழ்க்கைத் தரம் இருக்கும். அதற்கு பிறகு இதே வாழ்க்கைத் தரத்தை நீடிக்க வேண்டுமெனில் ஓய்வுகால நிதி ஒதுக்கீடு தேவை. இதற்கு எனறே சில திட்டங்கள் உள்ளன.

### பட்ஜெட் போடுங்கள்

இலக்கில்லாத பயணம் கடைசியில் எந்த இடத்துக்கும் சென்று சேராது என்பார்கள் அதுபோல திட்டமிடாமல் செய்கிற செலவுகளால் எந்த பழக்கத்தையும் கடைபிடிக்க முடியாது. வருமானத்துக்கும் செலவுக்குமே சரியாக இருக்கிறது அப்பறம் எதற்கு திட்டமிடுவது என யோசிக்க வேண்டாம். நிதி கையாளுவதில் நமது திறமை என்ன என்பதை நாம் தெரிந்து கொள்வதற்குகூட திட்ட மிடுதல் அவசியமாகிறது.

மாதந்தோறும் குடும்பத்திற் கான பட்ஜெட் முன் கூட்டியே எழுத வேண்டும். இதனால் செலவுகளுக்கான முன்னுரிமையை திட்டமிட லாம். கடந்த காலங்களில் உங்கள் நிதி ஆளுமை எப்படி வேண்டுமானாலும் இருந்திருக்கலாம். இந்த ஆண்டு தொடக்கத்தில் இப்படியான உறுதிகளை எடுத்துக் கொள்ளுங்கள். நிதி ஆளுமை என்பது நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் தீர்மானிக்கும் சக்தி என்பதை ஆண்டின் முடிவில் அறிந்து கொள்வீர்கள்.

## அப்பிள் சிஇஓ டிம் குக் சம்பளம் 1 கோடி டொலர்



அப்பிள் நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி டிம் குக் சம்பளம் கடந்த 2015-ம் ஆண்டில் 11.5 சதவீதம் உயர்ந்து 1.03 கோடி டொலராக இருக்கிறது. ஆனால் தலைமை நிதி அதிகாரி லூகா மெஸ்ட்ரி-யின் சம்பளம் 81 சதவீதம் உயர்ந்து 2.53 கோடி டொலராக இருக்கிறது.

குக் தலைமையில் ஆப்பிள் நிறுவனத்தின் விற்பனை கடந்த ஆண்டு சிறப்பாக இருந்தது.

2011-ம் ஆண்டு நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக பொறுப்பேற்றார். இவர் வசம் 31 லட்சம் ஆப்பிள் நிறுவனப் பங்குகள் உள்ளன. இதன் தற்போதைய மதிப்பு சுமார் 31 கோடி டொலர்கள்.

குறிப்பாக ஆப்பிள் 6 மற்றும் 6எஸ் ஆகியவை சீனாவில் நன்றாக விற்பனையானது. ஆனால் கடந்த ஆண்டு ஆப்பிள் பங்குகள் 4.6 சதவீதம் அளவுக்கு சரிந்தன. சர்வதேச மந்த நிலைக்கு பிறகு அப்பிள் பங்குகள் எதிர்மறை வருமானம் கொடுத்த ஆண்டு இதுதான்.

## பங்குச் சந்தை விபரம்

(வார இறுதியில்)

CSE COLOMBO STOCK EXCHANGE

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,894.50 | 6,726.28 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,625.69 | 3,514.41 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா.மில்.) | 4,255.616 |

***உயர்வடைந்தபங்குகள்(ரூ)*** பிசி பார்மா(0.50), எல்எம்எப்(149.90), கப்புகஸ்ரேன் (25.10),சிஐசி(107.00), ஈகுவிட்டி ரூ(63.70).

***சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):*** அஸ்ஹொட் ஹோல்டிங் (4.10), பிசி ஹவுஸ் (0.20), எஸ்எம்பி லீசிங்(0.30),அமனா பாங்(4.70), ஜே.கே.எச் (28.20).

**மேலதிக தகவல்கள்: www.cse.lk**

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 141.80 | 146.04 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 206.60 | 214.28 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 153.32 | 159.71 |
| சுவிஸ் பிராங் | 141.22 | 147.36 |
| கனேடிய டொலர் | 100.05 | 104.40 |
| அவுஸ்திரேலிய டொலர் | 99.06 | 103.94 |
| சிங்கப்பூர் டொலர் | 98.63 | 102.59 |
| ஜப்பான் யென் | 1.19 | 1.24 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.15 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 39.18 | |

**மூலம்: இலங்கை மத்திய வங்கி**

# புதுவருட பலன்கள் 2016



## காக வாகனத்தான் பார்வையினால் கவனம் எதிலும் மிகத்தேவை!

**காக வாகனத்தான் பார்வையினால் கவனம் எதிலும் மிகத்தேவை! ஆற்றல் மிக்கவர்கள் உதவியால் அரிய காரியங்களை செய்து முடிக்கும் மகர இராசி நேயர்களே!**

பிறந்திருக்கும் புத்தாண்டு சிறப்பான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க வேண்டுமானால் ராசிநாதன் பலம் பெற்றிருக்க வேண்டும். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது புத்தாண்டின் தொடக்கத்தில் அதிசாரத்தில் இருக்கும் குரு உங்கள் ராசியைப் பார்ப்பதால் ஒரு சில மாதங்கள் ஆரம்பத்தில் நற்பலன்கள் வந்து சேரும்.

அதன்பின் படிப்படியாக சனியின் பார்வை பலத்தால் குடும்பச் சுமை கூடுதலாக இருக்கும். கொடுக்கல் வாங்கல்களில் திருப்தி ஏற்படாது. கோட்சாரம் நல்ல நிலையில் அமையும் பொழுது ஆச்சரியப்படத்தக்க சம்பவங்கள் இந்த ஆண்டு நடைபெறும். இடையிடையே மனக்கசப்பு தரும் சம்பவங்களும் உண்டாகும்.

**1.1.2016 முதல் 6.2.2016 வரை!**

இக்காலத்தில் குரு கன்னி ராசியில் வக்ரம் பெற்று சஞ்சரிக்கின்றார். அதிசார குருவாக சஞ்சரிப்பது யோகம் தான். 3, 12 இற்கு அதிபதியான குரு பகவான் வக்ரம் பெறும்பொழுது உடன்பிறப்புகள் உங்கள் குணமறிந்து நடந்துகொள்வர். தொழிலில் ஏற்பட்ட குறுக்கீடுகள் அகலும். காலதாமதப்பட்ட பயணங்கள் இப்பொழுது வந்து சேரும். விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைவர்.

**ராகு - கேது பெயர்ச்சிக்காலம்!**

இதுவரை உங்கள் ராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரித்து வந்த ராகுபகவான் ஜனவரி 8 ஆம் திகதி முதல் அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகின்றார். இதுவரை மூன்றில் சஞ்சரித்து வந்த கேது பகவான் 2 ஆம் இடமான தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கின்றார். இதன் விளைவாக சில நினைக்க இயலாத மாற்றங்கள் வந்து சேரப்போகின்றது. எட்டில் வரும் ராகு விரயத்தைக் கொடுக்கப் போகிறாரே என்று நினைக்க வேண்டாம். மாபெரும் கிரகங்கள் அஷ்டம ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது மனக்குழப்பம் அதிகரிக்கும். மருத்துவச் செலவு கூடும். பணப்புழக்கம் எதிர்பார்த்த அளவு ஏற்படாது. பாதியில் பல பணிகள் அப்படியே நிற்கும். இனத்தார் பகை உருவாகும்.

ஆனால் அவரவர் ஜாதகத்தில் ராகு-கேதுக்கள் எந்த நட்சத்திரக் காலில் இருக்கிறது என்பதை அறிந்து கொண்டு அந்த நட்சத்திரத்திற்குரிய கிரகம் எப்படிப்பட்ட ஆதிபத்யத்தைப் பெற்றது என்பதை பொறுத்தே துல்லியமான பலன்களைக் கண்டறிய இயலும்.

இருப்பினும் இட மாற்றம், வீடு மாற்றங்களை தரும் இடம் எட்டாமிடம் என்பதாலும், இழப்புகளை நிர்ணயிக்கும் இடம் எட்டாமிடம் என்பதாலும் வரும் ராகுப் பெயர்ச்சியால் வளர்ச்சியும், தளர்ச்சியும் மாறி, மாறி வரும். வாய்ப்புகளில் சில கை நழுவிச் செல்லும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைப்பதும் அரிது.

வாக்கு ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் கேது வாக்கு மேன்மையைக் கொடுத்தாலும் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இயலாமல் போகலாம். யாருக்கேனும் பொறுப்புகள் சொல்லித்தொகை வாங்கிக் கொடுத்திருந்தால் அது திரும்ப வரு வதில் தடுமாற்றங்கள் ஏற்படும்.


இருப்பினும் கேது நின்ற ஸ்தானாதிபதி சனி லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் எப்படியோ ஒரு வழியில் வருமானம் வந்துகொண்டே இருக்கும். குடும்பப் பெரியவர்களின் ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதன் மூலம் குறைபாடுகளிலிருந்து விடுபட இயலும்.

**சிம்ம குருவின் சஞ்சாரம்!**

வருடத் தொடக்கத்தில் அதிசாரத்தில் இருக்கும் குரு பகவான் கன்னி ராசியில் சஞ்சரித்துக் கொண்டிருந்தார். அவர் 7.2.2016 முதல் 1.8.2016 வரை மீண்டும் அஷ்டம ஸ்தானத்திற்கு வரப்போகிறார். இதில் 17.5.2016 முதல் சிம்மத்திற்குள்ளேயே வக்ரம் பெற் றுச் சஞ்சரிக்கின்றார். 18.5.2016 முதல் வக்ர நிவர்த்தியாகி 1.8.2016 வரை அஷ்ட மத்திலேயே குரு சஞ்சரித்து அதன் பார்வை பலத்தால் சில முக்கிய நிகழ்வுகளை நடத்த வழி வகுப்பார்.

குருவின் பார்வை 2, 4, 12 ஆகிய இடங்களில் பதிவதால் முன்னேற்றம் கூடும். கொடிகட்டிப் பறந்த பிரச்சினைகள் படிப்படியாக நல்ல முடிவிற்கு வரும். விலகிச்சென்ற உறவினர்கள் இனி ஒன்று சேர்ந்து உறவைப் பலப்படுத்துவர்.

குடும்பப் பெரியவர்கள் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்யவில்லையே என்று ஆதங்கப்பட்டிருக்கலாம். அவர்களின் விருப்பங்களை எல்லாம் நிறைவேற்ற




முடிவு எடுப்பீர்கள். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

4 ஆம் இடத்தை குரு பார்ப்பதால் இடம் வாங்குவது, வீடு வாங்குவது மற்றும் பூர்வீக சொத்துக்களை பிரித்துக் கொள்வது போன்றவற்றில் ஆர்வம் காட்டுவீர்கள். தாயின் உடல் நலம் சீராகும். தந்தையின் அரவணைப்பும், ஒத்துழைப்பும் கிடைக்கும். பயண ஸ்தானத்தைக் குரு பார்ப்பதால் வாகன யோகம் உண்டு. அன்னிய மாநிலத்தில் உள்ளவர்களின் ஒத்துழைப்போடு சொந்த ஊரில் சில நல்ல காரியங்களைச் செய்ய முன்வருவீர்கள்.

வரன்கள் வந்தும் உபயோகப்படுத்திக் கொள்ள முடியாமல் திரும்பிச் சென்று விட்டனவே பிள்ளைகளின் மணக்கோலம் காண எப்பொழுது நல்ல நேரம் வரும். அவர்களின் திருமணத்திற்காக சேமித்த சேமிப்புகள் கரைந்து கொண்டு போகிறதே என்று கவலைப் பட்டவர்கள் இனி சுபச்செய்திகள் வீட்டை நோக்கி வருவது கண்டு ஆச்சரியப்படுவர்.

**சனியின் சஞ்சார நிலை! 27.3.2016 முதல் 10.8.2016 வரை**

விருச்சிகத்தில் சனி வக்ரம் பெறுகின்றார். தொடர்ந்து ஆண்டு முழுவதும் விருச சிகத்திலேயே சனி வீற்றிருக்கிறார்.




**லாபத்தில் சனியும் நிற்க**
**லட்சியம் நடக்கும் என்பார்!**
**கோபத்தில் சென்ற மாந்தர்**
**குணமோடு திரும்பச் சேர்வர்!**
**தீபத்தில் சனியைப் பார்த்து**
**தரிசித்து மகிழ்ந் திருந்தால்**
**லாபமும் தொழிலில் வாய்க்கும்!**
**நலமிகு வாழ்வும் சேரும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது சனி பகவான் லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழிலில் ஏற்பட்ட தொல்லை அகலும். எதிர்பார்த்தபடியே இலாபம் வந்து சேரும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். மாற்று இனத்தவர்கள் ஒத்துழைப்போடு மகிழ்ச்சி நிலையாக குடிகொள்ளும். கோபத்தால் பிரிந்து சென்ற சகோதரர்கள் மற்றும் உறவினர்கள் இப்போது தானாக வந்திணைவர். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் மாறும். அஞ்சல் வழியிலும் அலைபேசி வழியிலும் அனுகூலமான தகவல் வந்து சேரும்.

**செவ்வாய் சனி சேர்க்கைக் காலம்! 27.2.2016 முதல் 9.9.2016 வரை**

விருச்சிக ராசியில் செவ்வாயும், சனியும் சேர்க்கை பெறுகிறார்கள். இக் காலத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. மருத்துவச் செலவு அதிகரிக்கும். மனப்பயம கூடுதலாக இருக்கும். குடும்பச்சுமை கூடும். கொடுக்கல், வாங்கல்களில் ஏமாற்றத்தைச் சந்திக்க நேரிடும். கூடப்பிறந்தவர்கள் பகையாக மாறுவர். விற்ற சொத்துக்களால் பிரச்சினைகள் உருவாகலாம். பொறுப்பில் இருப்பவர்கள் மாற்றப்படுவர்.

அதே நேரத்தில் 4, 11 இற்கு அதிபதியான செவ்வாய் 25.10.2016 முதல் 6.12.2016 வரை உச்சம் பெறுகிறார். எனவே வருடக் கடைசியில் உள்ளவர்கள் இணக்கமாக நடந்து கொள்வர். உள்ளத்தில் நினைத்ததை உடனே செய்து முடிக்க இயலும்.

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

உங்கள் ராசிநாதன் சனி என்ப தால் சனிக்கிழமை விரதமிருந்து ஆஞ்சநேயரை வழிபட்டு வருவது நல்லது. தடைகளை தகர்த்தெறியும் ஆற்றல் பெற்ற வைரவ சுவாமியை வழிபட்டு வருவது நல்லது. வைரவர் பெயரிலேயே உள்ள வைரவன்பட்டி க்கு யோக பலம் பெற்ற நாளில் வந்து வழிபாடு செய்வதன் மூலம் வளர்ச்சி அதிகரிக்கும். வசந்த காலம் உருவாகும்.

**மகர ராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்த ஆண்டு உங்களுக்கு மங்கல நிகழ்ச்சிகள் மனையில் நடைபெறும் ஆண்டாக அமையப்போகின்றது. அஷ்டமத்து குருவால் அதிக விரயங்கள் ஏற்படலாம்.

குடும்பச் சுமை கூடுகிறதே என்று கவலைப் படுவீர்கள். பெற்றோர் வழியிலும், மற்றோர் வழியிலும் உறவு மேம்பட விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும்.

உங்கள் பெயரிலேயே சொத்துக் களை வாங்க குடும்பத்தினர் சம்மதிப்பர். வாகனங்கள் வாங்கி வசதிகளைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

குழந்தைகளின் எதிர் கால நலன் கருதி தீட்டிய திட்டங்களும் வெற்றி பெறும். ராகு- கேது பெயர்ச்சியால் சில பிரச்சினைகளைச் சந்திக்க நேரிடும். 2 இல் உள்ள கேது உறவினர் பகையை உருவாக்கலாம்.

அஷ்டமத்து ராகுவால் அலைச்சல் அதிகரிக்கும். உத்தியோகஸ் தர்களுக்கு

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

ஊர் மாற்றம் திருப்தியளிக்காது. பிரதோஷம் தோறும் நந்தி வழிபாட்டை மேற்கொள்வதோடு அனுகூல நாளில் சர்ப்ப சாந்திப் பரிகாரங்களையும் செய்து கொள்வது நல்லது.

**ஆடி பதினெட்டில் தேடி வரும் யோகம்!**

ஆடி பதினெட்டு (2.8.2016) முதல் குரு பகவான் ஒன்பதாமிடத்தில் முறையாக சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் ராசிக்கு ஒன்பதாமிடமான கன்னி ராசியில் குருபகவான் சஞ்சரிக்கும் பொழுது 1, 3, 5 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். அந்த அடிப்படையில் பலவித வகையிலும் நன்மைகள் உங்களைத் தேடிவரப் போகிறது. குறிப்பாக ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுத்தும். செய்யும் தொழிலில் வளர்ச்சி உருவாகும். அயல்நாட்டு வணிகம் ஆதாயம் தரும். அரசியலில் இருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் கிடைக்கும்.

பொதுநலத்தில் இருப்பவர்கள் புகழ் பெறுவர். மதிநுட்பத்தோடு அவர்கள் செய்த ஒவ்வொரு காரியத்திலும் மகத்தான வெற்றி கிடைக்கும். விரோதிகள் விலகுவர். தொழிலில் புதிய பங்குதாரர்கள் வந்திணைந்து தொகை வரவு பெருகும். கற்பனைக்கு எட்டாத அளவு காசு, பணப் புழக்கம் உருவாகும் காலம் இது.

--------------- நாளை கும்பம்

ஒரு கல்லில் இருந்து வேண்டாத பகுதிகளை எடுத்துவிட்டால் அழகிய சிற்பம் உருவாகும்.

– ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## தினையளவேனும் தீங்கு இழைத்திடாதீர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அன்பு வணக்கம். பாராளுமன்றத்தை அரசியலமைப்புச் சபையாக மாற்றி புதிய அரசியல் அமைப்பை உருவாக்கும் பணிக்கான ஏற்பாடுகள் நடந்து வருவது பற்றி அறிந்தோம்; நன்று. மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த போது தெரிவுக்குழு என்ற அமைப்பை உருவாக்கி அதில் தங்களைக் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

எனினும் தெரிவுக்குழுவில் கலந்து கொள்வதற்கு தாங்கள் உடன்படவில்லை. அதில் நியாயங்களும் உண்டு. அப்போது அமைச்சராக இருந்த ராஜித சேனாரட்ன, "நான் உத்தரவாதம் அளிக்கிறேன் நீங்கள் தெரிவுக் குழுவுக்கு வாருங்கள்" என்று கூட்டமைப்பினராகிய உங்களை அழைத்திருந்தார். எனினும் அதே ராஜித சேனாரட்ன, மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாக வருவதற்காக அரும்பாடுபட்டார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீது அவருக்கு ஏற்பட்ட வெறுப்பே அவர் மைத்திரியுடன் இணைந்து போவதற்குக் காரணமாயிற்று.

எனவே புதிய ஆட்சியில் நல்லாட்சி நடக்கிறதோ? இல்லையோ? தமிழர் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்ற சிந்தனை உள்ளவர்கள் இருக்கின்றனர் என்பது மட்டும் உண்மை. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதன் பின்னணி, தமிழ் மக்கள் நடத்திய விடுதலைப் போராட்டம் என்பது மறுக்கமுடியாத காரணமாகும்.

முப்பது ஆண்டு கால விடுதலைப் போராட்டத்தை உலக நாடுகளின் உதவியுடன் மகிந்த அரசு முடிவுறுத்தினாலும், யுத்தத்தின்போது உலக நாடுகளுக்கு வழங்கிய உத்தரவாதத்தை நிறைவேற்றத் தவறியமையும் மகிந்த செய்த மகா தவறு.

வன்னிப் பெருநிலப்பரப்பில் நடந்த பேரவலம் தமிழின அழிப்பாகவே பார்க்கப்பட்டது. இத்தகையதோர் நிலையில் மகிந்த ராஜபக்ஷ தரப்பின் மீதும் படைத்தரப்பு மீதும் சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற தீர்மானம் ஐ.நா மனித உரிமைப் பேரவையில் முன்மொழியப்பட்ட போது,

சிங்களத் தலைவர்களும் அமெரிக்கா, இந்தியா உள்ளிட்ட நாடுகளும் சேர்ந்து ஒரு திட்டத்தை தயாரித்தன.

அத்திட்டம் மகிந்த ராஜபக்ஷவை ஆட்சியில் இருந்து இறக்குவது; புதிய ஆட்சியை நல்லாட்சியாக அமைப்பது; தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது என்பதாக இருந்தது. இதன் அடிப்படையிலேயே ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் மைத்திரிபால சிறிசேனவை ஆதரித்ததுடன் பொதுத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமது ஆதரவை வழங்கினர்.

ஆக, மகிந்தவை ஆட்சியில் இருந்து.விலக்கிய தமிழ் மக்களுக்கு ஆட்சித் தலைவர்களும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் நல்லதோர் தீர்வை பெற்றுக் கொடுப்பது கட்டாயமானதாகும்.

இவ்விடயத்தில் இலங்கை அரசு தீர்வுத்திட்டம் ஒன்றை முன்வைக்க வருகிறது என்பதற்குப் பின்னால், எங்கள் இளம் பிள்ளைகளின் உயிர்த்தியாகங்களும் தமிழ் மக்களின் அர்ப்பணிப்பும் உள்ளது என்பதை மறந்துவிடலாகாது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வை அரசு முன்வைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பே காரணம் என்ற பிரமை ஏதேனும் உங்களிடம் இருக்குமாயின் முதலில் அதனை அடியோடு துரத்தி விடுங்கள்.

ஏனெனில் மேற்குறித்த பிரமை தமிழ் மக்களுக்கான தீர்வை பெற்றுக் கொள்வதற்கு பாதகமாக அமையும். ஆக, அன்புக்குரிய கூட்டமைப்பின் தலைவர்களே! எங்கள் மக்களின் இழப்புக்களை, துயரங்களை, தியாகங்களை மறந்து அவர்கள் தருகின்ற தீர்வே தீர்வு என்றிராமல் எங்கள் இனத்தின் சுதந்திரமான-நிம்மதியான வாழ்வுக்கும் இனப்பிரச்சினை என்று இனி எக்காலத்திலும் உச்சரிக்கப்படாமலும் இருக்கக் கூடியதான தீர்வுத் திட்டத்தையே நீங்கள் பெற்றுக் கொள்ள வேண்டும். இதைவிடுத்து அவர்கள் தருவதை நீங்கள் வாங்கினால் அது தமிழ் மக்களுக்கு இழைக்கும் மகா துரோகமாகும்.

# பட்டதாரிகளின் பிரச்சினைகளை அணுகும் அறிக்கை தயாரிப்பு பணி நிறைவு

(கொழும்பு)

வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு அமைவான யோசனைகள் அடங்கிய அறிக்கையினை தயாரிக்கும் பணிகள் நிறைவடைந்துள்ளன.

அதனை எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் பிரதமரிடம் கையளிக்கவுள்ளதாக வேலையற்ற பட்டதாரிகளின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண நியமிக்கப்பட்ட குழுவின் தலைவர் தேசிய கொள்கைத்திட்டமிடல் மற்றும் வர்த்தக இராஜாங்க அமைச்சர் நிரோஷன் பெரேரா நேற்று கூறினார்.

அரச முகாமைத்துவம், நிதி, கல்வி, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய இந்தக் குழு வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்துடனும் பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச தொழில் வாய்ப்புக்கள் மாத்திரமன்றி தனியார் மற்றும் சுயதொழில் முயற்சிகளில் உள்வாங்குவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் பிரதமருடன் கலந்துரையாடவுள்ளதாக அமைச்சர் நிரோஷன் பெரேரா குறிப்பிட்டார்.

அத்துடன் இவற்றை குறுகிய கால தீர்வாகவே முன்வைக்கவுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

வருடாந்தம் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறும் மாணவர்களுக்கான நீண்ட கால வேலைத்திட்டமொன்றை முன்வைக்கவும் எதிர்பார்ப்பதாக அமைச்சர் குறிப்பிட்டுள் ளார்.

இதேவேளை நாட்டில் 30 ஆயிரம் பட்டதாரிகளுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாக வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டாளர் தம்மிக முனசிங்க கூறினார்.(செ-12)

# மதுபோதையில் மோ.சைக்கிளில் பயணித்த இரு யுவதிகள் கைது

(கொழும்பு)

மதுபோதையில் ஒரு மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு பெண்கள், நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை களுத்துறை, வடியமண்கட சந்தியில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாம், ஒரு திருமணத்துக்குச் சென்று அங்கு மதுபானம் அருந்தி கொண்டாடியதாக பொலிஸாரிடம் அவ்விருவரும் கூறினார்.

எனினும், மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த பெண், கடும போதையில் நிற்க முடியாது தள்ளாடியதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த இரு இளம் பெண்களும் பாணந்துறையிலுள்ள ஒரு ஆடைத்தொழிற்சாலையில் வேலை செய்பவர்கள் என விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

தாம் வாதுவை நகரில் ஒரு விடுதியில் தங்கியிருப்பதாகவும் அவர்கள் பொலிஸாரிடம் கூறினர். எனினும் இவர்கள், ஏன் வாதுவை நகரைத் தாண்டி காலி வீதி வழியே வந்தனர் என்பது கேள்வியாகும் என பொலிஸார் கூறினர்.

மேலும் மோட்டார் சைக்கிள் குறுக்கும் மறுக்குமாக செலுத்தப்பட்டு வந்ததால், தாம் இவர்களை நிறுத்தி விசாரணை செய்ததாக போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.(செ-12)

## ரூபாய் ஒரு கோடி பெறுமதியான ஹெரோயினுடன் ஒருவர் கைது

(கொழும்பு)

கொழும்பு மாளிகாவத்தை பிரதேசத்தில் ரூபாய் ஒரு கோடி பெறுமதியான ஹெரோயின் போதைப்பொருளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

புறக்கோட்டையில் இருந்து மாளிகாவத்தையில் உள்ள ஒருவருக்கு வழங்குவதற்காக கொண்டு செல்லப்பட்ட ஒரு கிலோ கிராமுக்கும் மேற்பட்ட தொகை ஹெரோயினை மாளிகாவத்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இதனை எடுத்துச் சென்ற வத்தளை பிரதேசத்தை சேர்ந்த நபரை தாம் கைது செய்துள்ளதாகவும், இன்று திங்கட்கிழமை சந்தேக நபர் புதுக் கடை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படு த்தப்படவிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர், ஹெரோயின் போதைப் பொருளை மொத்தமான விநியோகம் செய்து வரும் நபர் என தகவல் கிடைத்துள்ளதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர். (செ-12)

## துப்பாக்கிச் சூடு ஒருவர் உயிரிழப்பு

கடவத்தை கோனஹேன பெரிய விகாரைக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன்மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

நேற்றுக் காலை 9.35 மணி அளவில் வாகனமொன்றில் வந்த குழுவினர் இந்த துப்பாக்கிச் சூட்டினை நடத்தியுள்ளதாக பொலிஸார் கூறினர்.

துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கானவர் கூரிய ஆயுதத்தாலும் தாக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் கடும் காயங்களுக்குள்ளாக இருவரும் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அவர்களுள் ஒருவர் உயிரிழந்துள்ளார். கோனஹேன வேபட பகுதியைச் சேர்ந்த 46 வயதான ஒருவரே இந்த சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். (செ-12)

## பதிவு செய்யப்படாத வைத்தியசாலைகளுக்கு சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

சுகாதார அமைச்சில் பதிவு செய்யப்படாத தனியார் வைத்தியசாலைகள் மற்றும் வைத்திய நிறுவனங்களை சுற்றிவளைப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவுள்ளதாக தனியார் வைத்திய சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மாகாண சுகாதார சேவை பணிப்பாளர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாக தனியார் வைத்திய சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபையின் செயலாளர் வைத்தியர் காந்தி ஆரியரத்ன நேற்றுமுன்தினம் கூறினார்.

பதிவு செய்யப்படாத வைத்திய நிறுவனங்களினால் மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களை கருத்திற் கொண்டு நடவடிக்கைகளை எடுக்கவுள்ளதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன் அரசில் பதிவு செய்யப்படாத தனியார் வைத்திய நிறுவனங்களில் சிகிச்சைப் பெற்றுக் கொள்ள வேண்டாமென தனியார் வைத்திய சேவைகள் ஒழுங்குபடுத்தல் சபை கேட்டுக் கொண்டுள்ளது. (செ-12)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## பொருளும் நிகழ்ச்சியும்




நீங்கள் எழுதுவதற்காகப் பேனாவைக் கையில் வைத்திருக்கின்றீர்கள். அதையே நம் சிந்தனைக்கு எடுத்துக் கொள்வோம். பேனாவைப் பார்த்து இது பொருளா அல்லது நிகழ்ச்சியா என்ற வினா எழுப்புங்கள். கையினால் தொட்டு உணர முடிவதாலும் கண்ணால் பார்த்து உணர முடிவதாலும் பேனா ஒரு பொருள்தான் என்று கருத நேரும்.

மேலே செல்வோம். அந்தப் பேனாவை எரியும் நெருப்பிலிட்டால் என்ன ஆகும். எரிந்து சாம்பலாகிப் போகும். பேனா என்ற வடிவம் இப்போது அதற்கு இல்லை. பேனா எங்கே? அழிந்து விட்டது. இவ்வாறு அழிவது பொருளாகுமா? பேனா என்னவாயிற்று? ஆராய்வோம். நெருப்பிலிட்டவுடன் அதில் இணைந்திருந்த பலதரப்பட்ட அணுக்கள் வெப்பத்தால் கிளர்ச்சியூட்டப் பெற்று இயக்க விரைவு பெற்று ஒன்றை விட்டு ஒன்று பிரிந்து போயிற்று. அதனால் அணுக்கள் கூட்டால் அமைந்த பேனா என்ற வடிவம் மறைந்து போயிற்று. எது பேனாவாகக் காட்சியளித்தது? அணுக்கள். பேனா பொருளன்று. அணுக்கள் கூடிய ஒரு நிதழ்ச்சி தான் என்பது விளங்கக் கண்டோம். பேனா மட்டுமென்ன? நாம் காணும் இப்பேரியக்க மண்டல நிகழ்ச்சிகள், தோற்றங்கள் அத்தனையும் அணுக்களின் கூட்டு இயக்கம் தானே? ஒரு கூட்டுத் தோற்றமாக நாம் காணும் எப்பொருளிலும் ஒவ்வொரு அணுவும் தனித்தனியாகத் தான் இயங்கிக்கொண்டிருக்கிறன. அவற்றின் இடையில் உள்ள இடைவெளியைக் காணும் திறமை புலனறிவுக்கு இல்லை.

அதனால் ஒரே கொத்தாக ஒரு தோற்றம் காட்சியாகின்றது. இவ்வாறு இந்த அடிப்படையில் ஆராய்ந்தால் பிரபஞ்சத் தோற்றங்கள் அத்தனையும் நிகழ்ச்சிகளே என்ற முடிவுக்கு வருகிறோம். அடுத்து ஒரு வினா. எல்லாத் தோற்றங்கட்கும் அடிப்படைத் துகளான அப்பரமாணு பொருளா? நிகழ்ச்சியா? இதனையும் ஆராய்வோம். அப்பரமாணுவின் இயக்கத்தைக் கழித்து யார் அல்லது எது இயங்குகின்றது என்று உணர்ந்து கொள்ளலாமல்லவா? அது தானே பொருளாக இருக்க முடியும்? பரமாணுவின் இயக்கத்தைக் கழித்துப் பார்த்தால் என்ன மிஞ்சும்? ஒன்றுமேயில்லை. வெட்டவெளி தான் மீதி. அகன்று நின்று பூரணமாக இருக்கும் வெட்டவெளி என்ற பொருள் தான் நுண்ணிய இயக்கத்தில், கண்ட நிலையில் பரமாணுவாக இருக்கின்றது. இப்போது பொருள்நிலை விளங்குகிறதல்லவா? வெட்ட வெளி என்ற ஒரு நிலையே பொருள் நிலையாகும். அதன் இயக்க நிகழ்ச்சியே பரமாணுவாகும். மற்ற தோற்றங்கள் யாவும் பரமாணுவாகும். மற்ற தோற்றங்கள் யாவும் பரமாணுக்களின் கூட்டு அல்லது தொடர் நிகழ்ச்சியாகும்.

# இலங்கையை துவம்சம் செய்தது நியூசிலாந்து வீணாய்ப் போனது கப்டன் மத்யூசின் 81





இலங்கை அணிக்கு எதிரான 2 ஆவது இருபது 20 போட்டியில் நியூசிலாந்து அணி 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

நியூசிலாந்து- இலங்கை அணிகள் மோதிய 2 ஆவது இருபது 20 போட்டி ஆக்லாந்தில் நேற்று நடைபெற்றது.

இதில் நாணய சுழற்சியில் வென்ற நியூசிலாந்து அணித்தலைவர் வில்லியம்சன் களத்தடுப்பை தெரிவு செய்தார்.

இதைத் தொடர்ந்து இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்க வீரர் குணத்திலகா (8) ஏமாற்றினார். அடுத்து வந்த ஜெயசூரியா (3), அணித்தலைவர் சந்திமால் (2) சொற்ப ஓட்டங்களில் வெளியேறினர்.

மற்றொரு அதிரடி தொடக்க வீரரான டில்ஷான் 28 ஓட்டங்களில் வெளியேறினார். சிறிவர்த்தனே ஓட்டங்கள் ஏதுமின்றி ஆட்டமிழந்து ஏமாற்றம் அளித்தார்.

பின்னர் வந்த கிருத்துவான் விதானகே (1), திசர பெரேரா (6), இசுரு உடனா (0) வரிசையாக நடையைக் கட்டினர்.

இதனால் 20 ஓவர்கள் முடிவில் இலங்கை அணி 8 விக்கெட் இழப்பிற்கு 142 ஓட்டங்கள் எடுத்தது.

மத்யூஸ் மட்டும் தனியாளாகப் போராடி ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டார். அவர் 49 பந்தில் 81 ஓட்டங்கள் (7 பவுண்டரி, 4 சிக்சர்கள்) எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்காமல் இருந்தார்.



நியூசிலாந்து அணி சார்பில், எலியாட் 4 விக்கெட்டுக்களையும், மில்னே, சான்ட்னர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

பின்னர் 143 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு தொடக்க வீரர் குப்தில் சிறப்பான தொடக்கம் கொடுத்தார்.

இலங்கை அணியின் பந்து வீச்சை பிரித்து மேய்ந்த அவர் அதிவேகமாக அரைச்சதம் கடந்தார். 25 பந்தில் 6 பவுண்டரி, 5 சிக்சர்கள் என 63 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார்.

இதன் பின்னர் வந்த அணித்தலைவர் வில்லியம்சன் நிதான ஆட்டத்தை தொடர, மறுமுனையில் இருந்த முன்ரோ சிக்சர்களாக வானவேடிக்கை காட்டினார்.

இதனால் இவரும் அதிகவேக அரைச்சதம் கடந்தார். அவர் 1 பவுண்டரி, 7 சிக்சர் என 14 பந்திலே அரைச்சதம் அடித்தார்.

இதனால் நியூசிலாந்து அணி 10 ஓவர்களிலே 147 ஓட்டங்கள் எடுத்து 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

வில்லியம்சன் (32), முன்ரோ (50) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

இதன் மூலம் 2 போட்டிகள் கொண்ட இருபது 20 தொடரை நியூசிலாந்து அணி 2-0 என கைப்பற்றியுள்ளது.

## நியூசிலாந்தில் தொடரை இழந்து தரவரிசையில் பின்வாங்கியது இலங்கை

Sri Lanka Cricket

இலங்கை கிரிக்கெட் அணியின் நியூசிலாந்து சுற்றுப்பயணம் மிகவும் மோசமானதாக முடிந்துள்ளது.

இலங்கை அணி நியூசிலாந்தில் கடந்த ஒரு மாதமாக 2 டெஸ்ட், 5 ஒருநாள் மற்றும் 2 இருபது 20 போட்டிகளில் விளையாடியது.

டெஸ்ட் தொடரில் முதல் டெஸ்டில் 122 ஓட்டங்களில் படுதோல்வியடைந்த இலங்கை, ஹமில்டனில் நடந்த 2 ஆவது டெஸ்டிலும் 5 விக்கெட்டுகளால் தோற்று தொடரை 2-0 என பறிகொடுத்தது.

ஒருநாள் தொடரிலாவது இலங்கை சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும் என்று எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அதிலும் மோசமாக விளையாடியது. இதனால் முதல் ஒருநாள் போட்டியில் 7 விக்கெட்டுகளால் தோற்றது.

கிறிஸ்ட்ச்சர்ச்சில் நடந்த 2 ஆவது ஒருநாள் போட்டியில் 117 ஓட்டங்களில் சுருண்டு அனைவரின் விமர்சனத்திற்கும் உள்ளானது. இதனால் 10 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அபார வெற்றி பெற்றது.

இந்த நிலையில் நெல்சனில் நடந்த 3 ஆவது ஒருநாள் போட்டி மட்டுமே இலங்கை அணிக்கு ஆறுதல் வெற்றியாக அமைந்தது. டில்ஷான் (91), குணத்திலா (65) அதிரடியில் 8 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது.

4 ஆவது ஒருநாள் போட்டி மழையால் கைவிடப்பட்டது. 5 ஆவது ஒருநாள் போட்டியிலும் தோல்வியடைந்த இலங்கை அணி ஒருநாள்தொடரையும்3-1பறிகொடுத்தது.

இதைத் தொடர்ந்து நடந்த இருபது 20 தொடரிலும் இலங்கை அணிக்கு ஏமாற்றமே மிஞ்சியது. முதல் இருபது 20 போட்டியில் 3 ஓட்டங்களால் தோற்ற இலங்கை, நேற்று நடந்த 2 ஆவது இருபது 20 போட்டியிலும் தோற்று நியூசிலாந்திடம் 'வயிட்-வோஷ்' ஆனது.

**தரவரிசையில் சறுக்கல்**

இதன் மூலம் இலங்கை அணி இருபது 20 தரவரிசையில் தனது முதல் இடத்தை பறிகொடுத்துள்ளது.

முதல் இடத்தில் இருந்த இலங்கை அணி (118 புள்ளிகள்) 3 ஆவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளது.

## உங்கள் மனம் கவர்ந்த அணித்தலைவர் யார்?

இந்திய அணியின் நட்சத்திர சுழற்பந்து வீரர் அஸ்வின் தன்னுடைய மனம் கவர்ந்த அணித்தலைவர் யார் என்பது பற்றி கூறியுள்ளார்.

தொலைக் காட்சி நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற அஸ்வினிடம் டோனி, கோஹ்லி மற்றும் கங்குலி இதில் யார் உங்களின் மனம் கவர்ந்த அணித்தலைவர் என்று கேள்வி கேட்கப்பட்டது. அஸ்வின் சற்றும் தயங்காமல் கங்குலி தான் சிறந்த தலைவர் என்று கூறினார். அவர் கூறுகையில், "கங்குலி தலைவராக பொறுப்பேற்ற பிறகுதான் இந்தியா அதிக வெற்றிகளை குவிக்க தொடங்கியது. அவர் இளம் வீரர்களை வெற்றிப் பாதையில் அழைத்துச் சென்று அணியின் வெற்றிக்கும்



முக்கிய காரணமாக இருந்தவர். நான் அவரை பார்த்து வளர்ந்தவன்" என்று கூறியுள்ளார்.

## இணையத்தில் கலக்கும் டோனியின் வீடியோ



இருபது 20 உலகக்கிண்ணத் தொடருக்காக இந்திய அணித்தலைவர் டோனி நடித்த விளம்பரம் ஒன்று இணையத்தை கலக்கி வருகிறது.

இருபது 20 உலகக்கிண்ணப் போட்டிகள் இந்தியாவில் மார்ச் 8ஆம் திகதி முதல் ஏப்ரல் 3ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடந்து வருகிறது.

கடந்த ஆண்டு நடைபெற்ற 50 ஓவர் உலகக்கிண்ணப் போட்டியின் போது 'ஸ்டார் ஸ்போர்ஸ்' வெளியிட்ட "மோக்கா.. மோக்கா" விளம்பரம் ரசிகர்களிடையே அதிக வரவேற்பை பெற்றது.

இந்த நிலையில் அந்த ஒளிபரப்பு நிறுவனம் இருபது 20 உலகக்கிண்ணப் போட்டிக்காக டோனியை வைத்து ஒரு விளம்பரத்தை தயாரித்துள்ளது.

இதில் டோனியும், அவருடையை முடி ஒப்பனையாளரான சப்னா பவானியும் இருபது 20 உலகக்கிண்ணத் தொடருக்கு என்ன ஹேர்ஸ்டைல் வைக்கலாம் என்று விவாதிக்கின்றனர்.

கடைசியில் 2007 ஆம் ஆண்டு இருபது 20 உலகக்கிண்ணம் வெல்லும் போது வைத்திருந்த நீளமுடி ஹேர்ஸ்டைலை வைத்துக் கொள்ளலாம் என்று முடிவெடுக்கின்றனர். இந்த வீடியோ ரசிக்கும்படி அமைந்துள்ளது.

இந்திய அணித்தலைவர் டோனி 'ஸ்டார் ஸ்போர்ட்ஸ்' நிறுவனத்தின் தூதுவராக உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அபிவிருத்திக்கு புதிய சட்டமூலம்

(கொழும்பு)

அபிவிருத்தித் திட்டங்களை தங்கு தடையின்றி மேற்கொள்ள புதிய சட்டங்களை கொண்டுவரவுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அலரி மாளிகையில் நேற்று நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அபிவிருத்தித் திட்டங்களை தங்கு தடையின்றி மேற்கொள்ள வேண்டும். எனினும் தற்போதுள்ள சட்டங்கள் போதுமானதாக இல்லை.

எனவே அபிவிருத்தித்திட்டங்களை தங்கு தடையின்றி முன்னெடுக்கும் வகையில் அபிவிருத்தி ஏற்பாடுகள் சட்டமூலம் கொண்டு வரப்படவுள்ளது.

அபிவிருத்திகளை மேற்கொண்டு, நாட்டு மக்களின் பொருளாதார மேம்பாட்டினை அதிகரிப்பதே இதன் நோக்கமாகும் என பிரதமர் குறிப்பிட்டார். (செ-12)

# மகிந்தோதய ஆய்வு கூடம் எப்படி செயலுருப் பெற்றது?

## அமைச்சர் ராஜித விளக்கம்



(கொழும்பு)

முன்னைய அரசாங்கத்தின் கல்வியமைச்சால் மகிந்தோதய விஞ்ஞான ஆய்வு கூட திட்டம் எவ்வாறு கொண்டு வரப்பட்டது என்பதை சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன விளக்கியுள்ளார்.

களுத்துறையில் நேற்று நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

கடந்த அரசாங்கத்தில் கல்வியமைச்சராக இருந்த பந்துல குணவர்தன, பாடசாலைகளில் விஞ்ஞான ஆய்வு கூடங்களை ஏற்படுத்தும் யோசனை ஒன்றை முன்வைத்தார்.

எனினும் இதற்கு எங்கு நிதி இருக்கின்றது என்று அப்போது அரசாங்கத்தில் இருந்த தலைவர்கள் நிராகரித்தனர்.

நான் இந்த திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருந்தேன். திட்டத்திற்கு ஆதரவு பெறுவது எப்படி என்பதை தெரிந்து கொண்ட பந்துல குணவர்தன அந்த திட்டத்திற்கு மகிந்தோதய ஆய்வு கூட திட்டம் என பெயரிட்டு அதனை அமைச்சரவையில் தாக்கல் செய்தார்.

மகிந்தோதய என்ற பெயர் காரணமாக அமைச்சரவையில் இருப்பவர்கள் அனைவரும் அதற்கு அனுமதி வழங்கினர்.

நானும் பந்துல குணவர்தனவும் சந்தித்து கொள்ளும் போது இது பற்றி பேசிக்கொள்வோம் எனவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார். (செ-12)

# பாவனைக்குதவாத உணவுப் பொருட்கள் திடீர் சுற்றிவளைப்பில் சிக்கியது



(வாழைச்சேனை)

வாழைச்சேனை பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கோறளைப் பற்று சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் வர்த்தக நிலையங்களை பரிசோதிக்கும் மாதாந்த செயற்திட்டத்தின் கீழ் நடத்திய பரிசோதனையின் போது, எட்டு வர்த்தக நிலையங்களில் இருந்து பாவனைக்குதவாத பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கோறளைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகப் பிரிவில் வாழைச்சேனை பிரதேசத்தில் உள்ள சில்லறைக்கடைகள், உணவகங்கள் என்பன நேற்று சுகாதார வைத்திய பரிசோதகர்களால் பரிசோதனை செய்யப்பட்டது.

இதன் போது எட்டு வர்த்த நிலையங்களில் இருந்து பாவனைக்கு உதவாததும், காலாவதியானதுமான 729 குடிபானம், கேக், பிஸ்கட், மிக்ஸர், டொபி என்பன கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதாக மேற்பார்வை சுகாதார பரிசோதகர் ஆர்.நிதிராஜ் தெரிவித்தார்.

பாவனைக்குதவாத பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளதுடன எதிர்வரும் காலங்களில் இந்த பிரதேசத்தில் இவ்வாறான பொருட்களை வைத்திருப்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேறகொள்ளப்பட உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-12)

# இலங்கை அகதி பொலிஸாரால் கைது

(தனுஷ்கோடி)

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு கடல் மார்க்கமாக வர முற்பட்ட ஒருவரை தமிழக பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மட்டக்களப்பு பகுதியை சேர்ந்த நடராஜன் (55) எனும் இவர், கடந்த 2011-ல் தமிழகம் சென்று, வெளிப்பதிவு அகதியாக விருதுநகர் மாவட்டம், சிவகாசியில் தங்கியிருந்ததோடு, கூலித்தொழில் செய்து பிழைப்பு நடத்தி வந்தார் என தகவல்கள் குறிப்பிடுகின்றன.

இந்தநிலையில் தனது உறவினர்களை பார்ப்பதற்காக இலங்கை செல்ல கடந்த 8ஆம் திகதி மதியம் இராமேஸ்வரம் வந்து, பின்னர் டவுன் பஸ்சில் முகுந்தராயர் சத்திரம் சென்று, அங்கிருந்து வானில் தனுஷ்கோடி சென்றுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இலங்கைக்கு திருட்டுத்தனமாக அழைத்துச் செல்ல முடியுமா என்று மீனவர்கள் சிலரிடம் விசாரித்துள்ளார. அவர்களது தகவலின்படி தனுஷ்கோடி பொலிசார், நடராஜனை கைது செய்து விசாரித்து வருகின்றனர். (செ-12)

# ஒன்றிணைந்த அழுத்தத்தின் மூலம் எமக்கானவற்றை பெற்றுக் கொள்வோம்

## அமைச்சர் விஜயகலா கருத்து

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் உள்ள அனைவரும் ஒன்றிணைந்து அரசுக்கு அழுத்தங்களை கொடுப்பதன் மூலம் எமக்கு தேவையானவற்றை பெற்றுக்கொள்ள முடியும் என சிறுவர் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மீன்பிடி அமைச்சருக்கும் யாழ் மாவட்ட கடற்தொழிலாளர்களின் பிரதி நிதிகளுக்கு மிடையே கலந்துரையாடல் ஒன்று நேற்றையதினம் யாழ். கடற்தொழில் நீரியல்வளத் துறை அலுவலகத்தில் நடைபெற்றது. அக் கலந்துரையாடலில் கலந்து கொண்டு கருத்து தெரிவக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நல்லாட்சியின் பின்னர் மக்கள் தமது ஆதங்கங்களையும் கருத்துக்களையும் சுதந்திரமாக கூறக் கூடியதாகவுள்ளது. பிரச்சினைகளை நேரில் கொண்டுவந்து காண்பித்தால் தான் யாருக்கும் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கும். எனவேதான் வடக்கிற்கு நேரடி விஜயத்தினை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதியையும் அமைச்சர்களையும் கோரி வருகிறோம்.

வடக்கிலுள்ள மீனவ குடும்பங்களுக்கு 25 வருடங்களுக்கு மேலாக பிரச்சினை இருந்து வருகிறது. எந்தவிதமான அடிப்படை வசதிகளும் இன்றி வாழந்து வருகின்றார்கள்.

நல்லாட்சியிலும் அவர்கள் நிம்மதியின்றிதான் வாழ்ந்து வருகின்றார்கள். ஏனெனில் அவர்களின் இருப்பிடம் இன்னும் உறுதிப்படுத்தப்படவில்லை.

அத்துடன்அவர்களை வேறொரு இடத்திலும் குடியமர்த்த முடியாது அவர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட காணிகளிலேயேதான் குடியமர்த்த முடியும். ஏனெனில் அவர்களுடைய வாழ்வாதாரம் அங்குதான் உள்ளது.



முன்னைய காலத்தில் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மயிலிட்டியில் இருந்தார்கள். அவர்கள் மீன்பிடியை வாழ்வாதாரமாக கொண்டவர்கள். எனவே அமைச்சரின் அதிகாரத்தின் மூலம் மயிலிட்டி மக்கள் கட்டாயம் குடியமர்த்தப்பட வேண்டும்.

அவர்களை குடியமர்த்தாவிட்டால் அரசுக்கு தொடர்ந்து பாரமாகவே இருப்பார்கள். ஏனென்றால் வேலையில்லாப்பிரச்சனை, அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்தல் போன்ற பிரச்சினைகள் தொடர்ச்சியாகவே இருந்துவரும். எனவே குடியமர்த்தா விட்டால் அரசுக்கு பாரமாகவே இருப்பார்கள.

எனவே அம் மக்களின் பிரச்சினைகள் விரைவாக தீர்க்க அனை வரும் முன்வர வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

# பொது எதிரணியுடன்...

திட்டத்தில் உறுதியளிக்கப்பட்ட திருத்தங்கள் தொடர்பாக இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாமை,

தேசிய பாதுகாப்பு, நாட்டின் பொருளாதார ஸ்திர நிலைமை போன்ற விடயங்கள் இந்தக் கலந்துரையாடலின் போது ஆராயப்படுமென பொது எதிரணியின் பிரதி ஏற்பாட்டாளரும், இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் சொய்ஸா தெரிவித்துள்ளார்.

இந்த அமைச்சர்கள் சிறு சிறு குழுக்களாக நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் பொது எதிரணியினருடன் ஆலோசனைகளை நடத்துவர் எனவும்,

அந்தக் கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகளுக்கேற்ப நாட்டின் எதிர்காலம் பற்றிய நடவடிக்கைகள் குறித்து ஆராயப்படுமெனவும்,

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளும் 26 பேரும் அமைச்சரவை அந்தஸ்து கொண்ட அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்கள் எனவும் ரஞ்சித் சொய்ஸா மேலும் தெரிவித்தார். (செ-12)

# அமெரிக்கா...

ர்களை வழங்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது. நீண்ட இடைவெளியின் பின்னரே இலங்கைக்கு, அபிவிருத்தி உதவிகளை வழங்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கைக்கு அமைய இவ்வாறு நிதி உதவி வழங்கப்பட உள்ளது.

அமெரிக்காவின் மிலேனிய சவால் அபிவிருத்தி நிதியத்தின் ஊடாக இவ்வாறு உதவி வழங்கப்பட உள்ளது. நாட்டின் அபிவிருத்தியை துரிதப்படுத்திக் கொள்ள அமெரிக்கா இவ்வாறு உதவிகளை இந்த ஆண்டில் வழங்க உள்ளது.

இரண்டு கட்டங்களாக இந்த உதவியை வழங்க உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் அமெரிக்கா இலங்கைக்கான உதவிகளை மிகவும் வரையறுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

# சிறப்பு நீதிமன்றம்...

பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கை மீது தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்நிலையில், இத்தீர்மானம் தொடர்பில் இலங்கை அரசாங்கம் கடந்த ஆண்டு அளித்த வாக்குறுதிகளை இவ்வாண்டில் நிறைவேற்றுவதற்கான முக்கிய நடவடிக்கைகளை வலியுறுத்தி சிவில் அமைப்புகளும், மனிதவுரிமை ஆர்வலர்களும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வறிக்கையில், இலங்கையில் புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்து கடந்த ஓராண்டில் மேற்கொண்டுள்ள சில அரசியல் சீர்திருத்தங்கள் மற்றும் முன்னேற்றங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறிப்பாக, சுயாதீன ஆணைக் குழுக்களின் நியமனம், 19வது அரசியலமைப்புத் திருத்தம், வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் சில காணிகள் விடுவிக்கப்பட்டமை போன்ற சில முன்னேற்றங்களை கடந்த ஓராண்டில் இலங்கையின் புதிய அரசாங்கம் வெளிப்படுத்தியுள்ளது.

அதேவேளை, ஐ.நா மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் அளித்திருந்த வாக்குறுதிகளை முழுமையாக இலங்கை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ள இவ்வறிக்கை, உண்மையான அமைதியும் நல்லிணக்கமும் ஏற்பட இன்னும் அதிகம் செய்யப்பட வேண்டியிருக்கின்றது என்று தெரிவித்துள்ளது. பொறுப்புக்கூறல், நல்லிணக் கம் மற்றும் மனிதவுரிமை விவ காரங்கள் தொடர்பில் அளித்த வாக் குறுதிகளின்படி, வெளிநாட்டு நீதி பதிகள் மற்றும் சட்டநிபுணர்களை உள்ளடக்கிய சிறப்பு நீதிமன்றத்தை இந்த ஆண்டு இலங்கை அரசாங்கம் அமைக்க வேண்டும் என்றும் சிவில் அமைப்புகளும், மனிதவுரிமை செயற்பாட்டாளர்களும் இவ்வறிக்கையில் கோரியுள்ளனர்.

அத்துடன், காணாமல்போனவர்கள் தொடர்பான அலுவலகம், உண்மை கண்டறிதல், நீதி மற்றும் நல்லிணக்கம், பாதிக்கப்பட்டவர்களுக்கான இழப்பீடு போனறவற்றுக்கான நிறுவனங்களை நிறுவுதல் போன்ற நடவடிக்கைகளும் இலங்கை அரசாங்கம் இவ்வாண்டில் நிறைவேற்ற வேண்டும் என்றும் இவ்வறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (செ-12)

## இந்.மீனவர்களின்...

ந்த அமரவீர தெரிவித்தார்.

வடமாகாண மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்.மாவட்ட கடற்றொழில் நீரியல் வளங்களின் உதவிப் பணிப்பாளர் ப.ரமேஸ் கண்ணா தலைமையில் மாவட்ட நீரியல் வளங்கள் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் தனதுரையில் குறிப்பிடுகையில்,

வடபகுதி மீனவர்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் இந்த நல்லாட்சி அரசாங்கத்தில் தீர்வு காணப்படும். இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடியை தடுக்க கடற்படையினர்களின் ஒத்துழைப்புடன் புதிய நடைமுறை ஒன்றை எதிர்காலத்தில் முன்னெடுக்கவுள்ளோம்.

களத்தில் இருந்து பிரச்சினைகளை ஆராய்வதற்காகவே நான் இங்கு நேரடியாக வந்துள்ளேன். கொழும்பில் இருந்து கொண்டு இனவாதம் பேசுகின்ற இனவாதிகளின் கருத்துக்களுக்குமாறாகவே இங்குள்ள மக்களும் அவர்களதுநிலைகளும் உள்ளன என்பதை அறிகின்றேன். எனவே அவ் இனவாதம் பேசுபவர்களை அழைத்து வந்து இங்குள்ள மக்களின் நிலையைகாட்டினால் இனவாதம் இல்லாமல் போய்விடும்.

கொழும்பில் சிறிய குழு ஒன்று இருந்து கொண்டு பழைய நினைவில் மக்களை புலிகளாக பார்க்கிறார்கள். தற்போது நல்லாட்சி அரசாங்கம் மலர்ந்துள்ளது. இன மதபேதங்களை கடந்த தலைவர் கிடைத்துள்ளார் அவர் புதியகோணத்தில் மக்களது பிரச்சினைகளை தீர்த்துவைப்பதுடன் நாட்டில் நிலையான சமாதானத்தையும் அபிவிருத்தியையும் உண்டாக்கவே முயல்கின்றார்.

இந்திய மீனவர்களது பிரச்சினை இன்று நேற்று ஆரம்பமான பிரச்சினையல்ல. இது பல காலங்களாக காணப்படுகின்றது. இந்திய இழுவைப் படகினால் பாரிய இழப்புக்களை மீனவர்கள் அடைந்துள்ளதாக நான் அறிவேன்.

அந்த வகையில் அத்துமீறி மீன் பிடியில் ஈடுபடும் மீனவர்கள் கைது செய்யப்பட வேணடும். ஆனால் அவர்கள் படகின் உரிமையாளர்கள் இல்லை என்பதால் அவர்களை விடுவிக்க வேண்டியநிலை உள்ளது. ஆனால் அவர்களிடம் இருந்துகைப்பற்றப்படும் படகுகளோ வலைகளோ மீன்பிடி உபகரணங்களோ இந்திய மத்தியரசு கோரிக்கை விடுத்தாலும் மீள் கையளிக்கப்படமாட்டாது.

மேலும் விசேடவிதமாக கடற்தொழில் நீரியல் வளத்துறைதிணைக்களத்தின் புனரமைப்பு வேலைத் திட்டங்களுக்காக 38 இலட்சம் ரூபாய் கேட்டிருந்தனர். அதனைநான் இந்த வருடமே அந்த நிதியை ஒதுக்கீடு செய்கிறேன். அத்துடன் பிரதேச கடற்தொழில் அலுவலகங்கள் புனரமைப்பு செய்வதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யவுள்ளேன்.

அத்துடன் அதிகாரிகள் உத்தியோகத்தர்களின் குறைபாடுகள் பற்றி கூறப்பட்டிருந்தது. அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு தமிழ் பேசும் 80 உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

மேலும் இந்திய இழுவைப் படகுகளைதடுப்பதற்கு மக்களிடமே அனுமதியை வழங்குமாறு கேட்டிருந்தீர்கள். அதனைநாம் மக்களாகிய உங்களுக்கு சட்டரீதியாக வழங்க முடியாது. ஆகவே அப் பொறுப்பை கடற்படை மற்றும் கரையோர பாதுகாப்பு படையினரிடம் ஒப்படைத்துள்ளோம்.

அந்தவகையில் மன்னார், திருகோணமலை உள்ளிட்டபகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்ற தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளான டைனமற் போன்ற முறைகளில் மீன்பிடியில் ஈடுபடுவோரது படகுகள் வலைகள் பறிமுதல் செய்யப்படுவதற்கான சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு நிறுத்தப்பட்டுள்ளது.

இவற்றைத் தவிர கிழக்கில் நன்னீர் மீன் வளர்ப்பு பூங்காவை அமைப்பதற்கு 10 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதைப் போன்று வடக்கிலும் நிறுவுவதற்கு ஆலோசித்து வருவதுடன் நன்னீர் குளங்களை அண்டிய மாதிரி கிராமங்களை உண்டாக்கும் திட்டத்தில் இரணைமடுகுளம் உள்வாங்கப்பட்டுள்ளது. அதில் அடிப்படைத் தேவைகளை தெரிவு செய்து அபிவிருத்தி செய்யவுள்ளோம் அதேபோன்று யாழ்ப்பாணத்திலும் செய்வதற்கு ஆலோசித்து வருகின்றோம்.

மேலும் போர் முடிவடைந்த பின்னரும் உங்கள் வாழ்க்கை மேம்படாமல் இருப்பதற்கான காரணம் இந்திய இழுவைப் படகுகளின் பிரச்சினை மற்றும் நவீன மீன்பிடி வசதிகள் கிடைக்காமையே என்பதை நான் அறிவேன். அதை கருத்திற்கொண்டு பல்வேறுதிட்டங்களை இங்கு ஆரம்பிப்பதற்கு உள்ளோம். கரையோர வீதிபுனரமைப்பு, வெளிச்சவீடுகள் அமைக்கப்படவேண்டியவை தொடர்பாகவும் கவனத்தில் எடுக்கப்படும்.

மேலும் அனைத்து மீனவர்களாலும் கூறப்பட்டது போன்று வலி வடக்கில் மீள் குடியேற்றப்படாதுள்ள பகுதிகளையும் மயிலிட்டி துறைமுக விடுவிப்பு தொடர்பாக எந்த வித முடிவையும் தன்னிச்சையாக நான் மேற்கொள்ளமுடியாது.

எனவே அது தொடர்பாக ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருடன் பேசி மீள்குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படும்.

அத்துடன் நடமாடும் சேவை ஒன்றை ஆரம்பித்துள்ளோம் அதனூடாக அனைத்து மக்களின் பிரச்சினைகளையும் நேரில் கேட்டறிந்து தீர்ப்பதற்காக இத் திட்டத்தை ஆரம்பித்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## பொதுமக்களை...

பணியில் காணப்படும் குறைப்பாடுகளை அங்கு சுட்டிக்காட்டுங்கள்.

இதனை விடுத்து தயாரிக்கப்படவிருக்கும் உத்தேச அரசியலமைப்புச் சட்டம் குறித்து இல்லாதவற்றை கூறி பொதுமக்களை தவறாக வழிநடத்த வேண்டாம் என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல கோரிக்கை விடுத்துள்ளார். (செ-12)

## சுதந்திரக்...

முன்தினம் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிற்கு வருகை தந்திருந்தபோது குறிப்பிட்டார்.

நல்லாட்சி அரசு மக்களுக்கோ நாட்டுக்கோ ஒன்றும் செய்யவில்லை எனவும், பொலிஸ் இராஜ்ஜியம் ஒன்றையே உருவாக்கிவருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அரசியல் தேவைக்காகவே ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் சிலர் ஆளும் கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர்,

இந்த அரசாங்கம் குற்றச் செயல்களை கண்டுபிடிப்பதை விடவும், அரசியல் பழிவாங்கல்களில் தீவிரம் காட்டிவருவதாக குறிப்பிட்டுள்ளார்

இதேவேளை, அண்மையில் கண்டி விகாரையொன்றுக்கு விஜயம் செய்திருந்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, புதியதொரு அரசியல் கட்சி ஒன்று உருவாகுவதை யாராலும் தடுக்க முடியாது என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## ஹிருணிகா...

இந்நிலையில் ஹிருணிகா குறித்து அவரது தாயார் சிங்கள ஊடகமொன்றுக்கு பேட்டியொன்றை வழங்கியுள்ளார்.

அதில் தொடர்ந்தும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

குறித்த கடத்தல் சம்பவத்துடன் ஹிருணிகா எவ்வகையிலும் தொடர்பற்றவர். அவரது எதிரிகளே இந்தச் சம்பவத்துடன் அவரது பெயரைத் தொடர்புபடுத்தியுள்ளனர்.

நல்லாட்சி அரசாங்கத்தை பதவிக்குக் கொண்டு வருவதில் ஹிருணிகா பெரும் பங்களிப்பை வழங்கியுள்ளார். அதனை ஜனாதிபதியும் அரசாங்கமும் ஒருபோதும் மறக்க மாட்டார்கள் என்று நம்புகின்றேன்.

பிரேமச்சந்திர குடும்பத்துக்கு தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபாலவுடன் மட்டுமன்றி முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் குடும்பத்தினருடனும் நெருங்கிய தொடர்புகள் உண்டு. இன்றுவரைக்கும் மகிந்த குடும்பத்தினர் எங்களுடன் அன்பாகவே நடந்து கொள்கின்றனர் என்றும் சுமணா பிரேமச்சந்திர தெரிவித்துள்ளார். (செ-12)

## தொழிற்சங்கங்கள்...

ங்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி முன்னர் வழங்கப்பட்ட ஓய்வூதியம் திட்டத்திற்கு அமைய ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டும் என்பதுடன் தனியார் துறை ஊழியர்களுக்கு வேதனம் அதிகரிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் முதன்மையாக முன்வைக்கப்பட்டுள்ளன.

பொதுத்துறை தொழிற் சங்கங்கள் தற்போது சுங்கம், நிர்வாகதுறை, மருத்துவம், பொறியியல் மற்றும் கணக்காளர் போன்ற துறைகளையும் இணைத்து தொழிற் சங்கங்கள் தற்போது விஸ்தரிக்கப்படுவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக குறிப்பிட்ட தொழிற் சங்கங்களின், பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுவதாக அகில இலங்கை நிர்வாக அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் நிமால் கன்னங்கரா தெரிவித்துள்ளார். (செ-12)

## வடக்கில்...

றிதழை ஆவணமாக சமர்ப்பித்து போரில் இறந்தவர்களுக்கான நட்டஈட்டுத் தொகை மற்றும் நிவாரணங்களை பெற்றுக்கொள்ளுமாறும் அரச தரப்பினாலும் காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைக் குழுவினாலும் வலியுறுத்தப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் வட மாகாண உதவிப் பதிவாளர் நாயக அலுவலகத் தகவல்களின் படி, கடந்த வருடத்தில் ஜனவரி மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையுள்ள காலப்பகுதியில் 48பேர் காணாமற்போனோரின் இறப்பு என்ற வகையில் பதிவு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

காணாமற்போனோரின் இறப்பு என்ற வகையில் வட மாகாணத்தில் கடந்த வருடம் ஜனவரி மாதம் 6 பேரும், பெப்ரவரி மாதம் 2 பேரும், மார்ச் மாதம் 3 பேரும், ஏப்ரல் மாதம் 6 பேரும், மே மாதம் 5பேரும், ஜூன் மாதம் 5 பேரும், ஜூலை மாதம் 5பேரும், ஒக்டோபர் மாதம் 4 பேரும், நவம்பர் மாதம் 8 பேரும், டிசம்பர் மாதம் 4 பேரும் என மொத்தமாக 48 பேரின் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறித்த அலுவலக தகவலில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-12)

## நாளொன்றுக்கு...

ட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தோடு நாளொன்றுக்கு 101 வீதி விபத்துக்கள் பதிவாகி வருவதையும் ஒருங்கே சுட்டிக்காட்டியுள்ளது.

நாடளாவிய ரீதியில் கடந்த ஆண்டில் மாத்திரம் 36,894 வீதிவிபத்துக்களில் 2,771 பேர் உயிரிழந்துள்ளனர். 7,719 பேர் பாரதூரமான காயங்களுக்குள் உள்ளாகியுள்ளனர். இதுவரை காலங்களில் கடந்த ஆண்டான 2015ஆம் ஆண்டிலேயே அதிகமான வீதி விபத்துக்கள் ஏற்பட்டுள்ளதாக வரலாற்றில் பதிவாகியுள்ளதாகவும் பொலிஸ் போக்குவரத்து பிரிவின் தலைமையகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நவம்பர் 31ஆம் திகதி வரையில் இடம்பெற்ற விபத்துக்களில் மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் 9,329 என்ற எண்ணிக்கையில் அதிகமாக பதிவாகியுள்ளன. இதனையடுத்து, முச்சக்கர வண்டிகள் மூலம் 6,301 விபத்துக்கள் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அதிகமான வீதி விபத்துக்களை ஏற்படுத்திய சாரதிகள் 31 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைபபட்டவர்களாக இருப்பதோடு இவர்கள் மூலம் 5,349 விபத்துக்கள் பதிவாகியுள்ளன. அதிக விபத்துக்களுக்கு 31-35 வரையான சாரதிகளே பொறுப்புக் கூற வேண்டியவர்கள் எனவும் இவர்களால் ஏற்பட்ட விபத்துக்கள் 5349 ஆக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ-12)

## சிறையிலுள்ள...

நடைபெறவுள்ளது. இதையொட்டி, இந்திய வெளியுறவுத்துறை செயலர் ஜெய்சங்கர் கொழும்பு செல்லவுள்ளார். அப்போது, இலங்கை சிறைகளில் அடைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுதலை செய்வது குறித்து அந்த சந்திப்பின்போது வலியுறுத்தவுள்ளார். அவர் கொழும்பு பயணத்தை முடித்து இந்தியா திரும்பியவுடன், இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொழும்பில் அடுத்த மாதம், இருநாடுகளுக்குமிடையிலான கூட்டு நடவடிக்கை குழுவைக் கூட்டி இருதரப்பு மீனவர் விவகாரங்களை விவாதிக்க இரு நாட்டு அரசுகளும் விருப்பம் தெரிவித்துள்ள நிலையில், அதற்கு முன்னோட்டமாக இரு நாட்டு அரசுகளும பரஸ்பரம் மீனவர்களை தைபொங்கல் பண்டிகையையொட்டி விடுதலை செய்யும் என்று வெளியுறவுத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாக குறித்த ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (செ-12)

## அதிகாரங்கள்...

தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப, அதன் குறைபாடுகள் நீக்கப்பட வேண்டுமென, கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜோன் செனவிரத்ன கூறினார்.

இது நடைபெறின், மாகாண சபைகள், கூடுதல் அதிகாரத்தை அனுபவிக்க முடியுமெனவும் அவர் கூறினார். ஜனாதிபதி முறைமை இன்றி, நாட்டின் ஒருமைத் தன்மையைப் பேணுவது கடினமாகும் எனவும் அவர் கூறினார்.

இதனால், நாட்டில் ஒருமைத் தன்மை பாதுகாப்பு, ஜனாதிபதியின் பிடி, நாடு முழுவதும் விரவியிருக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பதற்கு தனது கட்சி ஆதரவானது என்றும் தனியொரு ஆளில் பெருமளவு அதிகாரம் இருப்பதை ஏற்கமுடியாது எனவும் அவர் கூறினார்.

அரசியலமைப்பு பேரவை தொடர்பில் அரசாங்கத்தின், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி திருத்தங்களை சமர்ப்பிக்கவுள்ளது.

அரசியலமைப்பு பேரவைக்கு பதிலாக, முழு அவையினதும் குழு ஒன்றை நியமிக்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி விரும்புகின்றது. மேலும் இந்த குழு அரசியலமைப்பை எழுதுவதற்கு பதிலாக ஓர் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

இந்த அறிக்கைக்கு சபையின் மூன்றிலிரண்டின் ஆதரவை பெற்று அமைச்சரவை புதிய அரசியலமைப்பை ஆக்கலாம் என்று அவர் தெரிவித்தார்.

புதிய அரசியலமைப்பை உயர் நீதிமன்றில் தீர்மானத்துக்கு அரசு அனுப்ப வேண்டும் என்று அவர் கருத்து தெரிவித்தார். (செ-12)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

A/L இல் எதிர்பார்த்த பெறுபேறு இல்லையா

அதனாலென்ன? Yes You Can
O/L உடன் 3 - 6 மாத Entry Level கற்கைநெறியுடன் உள்நாட்டு - வெளிநாட்டு கல்வி தொழில் - விசா ஏற்பாடு!
Business / IT / Hotel Management / Media
பிரித்தானிய, அவுஸ்ரேலிய, கனேடிய பல்கலைக்கழக பட்டப்படிப்புக்கள்
Conditions apply
University of Sunderland UK
UNIVERSITY OF WOLLONGONG Australia
UNIVERSITY OF TORONTO Canada
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு VISA
உத்தரவாதம்
SIKARAM Edu Solutions
Call or SMS 0773 616 798
மேலதிக விபரங்களுக்கு www.sikaram.lk
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)

வேலையாள் தேவை
கடை ஒன்றிற்கு வேலையாள் தேவை
18-35 வயது ஆண்/பெண்
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்புகளுக்கு: 0779116108
0212219822
(3152)

பொருளியல்
S.Jeyakumar
(B.A(Hons) Eco spl , MA.Eco (pera) P.G.D.E)
A/L DAY - 2016
ஆரம்பம் இன்று 11.01.2016 5.00P.m
இடம்
356/5, 1ம் ஒழுங்கை இருபாலை வீதி, கோண்டாவில். (ஐயப்பன் கோவில் அருகாமை)
T.P : 0777238597
(3150)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.